


# புரட்சிப் பெரியார் முழக்கம்

பெரியார் திராவிடர் கழக வார ஏடு

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் www.puratchiperiyarmuzhakkam.com திருவள்ளுவர் ஆண்டு 2041 ஜூன் 03, 2010 புரட்சி 9 முழக்கம் 21 விலை: ரூ.2.50


## கேரளாவுக்கு எச்சரிக்கை : தமிழகம் முழுதும் போராட்டம் : 50000 பேர் கைது

# மாங்கரையில் கழகம் களமிறங்கியது

தமிழகத்தின் முல்லைப் பெரியாறு நீர் உரிமையை மறுக்கும் கேரள அரசைக் கண்டித்து, தமிழகத்திலிருந்து கேரளா செல்லும் அனைத்துப் பாதைகளிலும் முற்றுகைப் போராட்டம் மே 28 ஆம் தேதி எழுச்சியுடன் நடைபெற்றது. தமிழகம் முழுதும் 50000 பேர் கைது செய்யப்பட்டனர்.

1886 இல் சென்னை ராஜதானிக்கும் திருவாங்கூர் சமஸ்தானத்திற்கும் இடையே ஏற்பட்ட 999 ஆண்டுகளுக்கான ஒப்பந்தப்படி, முல்லைப் பெரியாறு அணையில் 152 அடி தண்ணீர் தேக்கிப் பயன்படுத்தும் உரிமை தமிழகத்திற்கு உண்டு.

1976 ஆம் ஆண்டு கேரள அரசு 780 மெகாவாட் மின்சாரம் தயாரிக்க இடுக்கி அணையைக் கட்டியது.

152 அடி தண்ணீர் முல்லைப் பெரியாறு அணையில் தேக்குவதன் மூலம் இடுக்கி அணைக்குப் போதுமான தண்ணீர் இல்லாததால் அந்தத் திட்டம் தோல்வியுற்றது. எனவே முல்லைப் பெரியாறு அணை பலகீனமாகிவிட்டது என்று கேரள அரசு பொய்ப் பிரச்சாரம் செய்து மக்களைப் பீதி அடைய வைத்தது.

எனவே, 25.11.1979 இல் அன்றைய தமிழக முதல்வருக்கும், கேரள முதல்வருக்கும் மத்திய நீர்வள ஆணையம் முன் ஏற்பட்ட ஒப்பந்தப்படி 152 அடி நீர் மட்ட உயரத்தை தற்காலிகமாக 136 அடியாகக் குறைத்துக் கொள்வது எனவும், மூன்று கட்ட மராமத்துப் பணிகள் முடிவுற்றதுடன் 152 அடியாக உயர்த்திக் கொள்ளலாம் என்றும் ஒப்பந்தம் ஏற்பட்டது. ஒப்பந்தம் ஏற்பட்டு மூன்று கட்டப் பணிகளும் ஏறத்தாழ 25 கோடி தமிழக அரசு செலவில் முடிக்கப்பட்டு முப்பது ஆண்டுகள் முடிந்தும் கேரள அரசு ஒப்பந்தப்படி செயல்பட மறுக்கிறது.

எனவே, தமிழக அரசு உச்சநீதிமன்றத்தில் முறையிட்டது. உச்சநீதிமன்றம் நிபுணர் குழுவை அமைத்து, அந்தக் குழுவின் பரிந்துரையில் அணை பலமாக இருக்கிறது. 142 அடி தண்ணீர் தேக்கலாம் என்று 27.2.2006 அன்று தீர்ப்பளித்தது. இதை ஏற்க மறுத்த கேரள அரசு உச்சநீதிமன்றத் தீர்ப்புக்கு எதிராக ஒரு சட்டம் கொண்டு வந்து இந்திய இறையாண்மைக்கு வேட்டு வைக்கும் வேலையில் ஈடுபடுவதுடன் முல்லைப் பெரியாறு அணையை உடைப்பதற்கான முயற்சியில் ஈடுபட்டு, கேரள மக்கள் மத்தியில் அணை உடைவது போலவும், அதனால் 4 இலட்சம் மக்கள் வெள்ளத்தில் அடித்துச் சென்று கடலில் மிதப்பது போன்றும் கிராபிக்ஸ் காட்சிகள் மூலம் கேரளா முழுவதும் பிரச்சாரம் செய்து வருகிறது.

அது மட்டுமின்றி, திருப்பூர் மாவட்டம், உடுமலைப் பேட்டையில் அமைந்துள்ள அமராவதி அணையின் முக்கிய நீர் ஆதாரமான பாம்பாற்றின் குறுக்கே அணை கட்டி மின்சாரம் தயாரிக்க கேரள அரசு திட்டம் தீட்டி செயல்படுத்தத் துவங்கியுள்ளது. இதனால் அமராவதி அணை பாதிக்கப்பட்டு 80 ஆயிரம் ஏக்கர் பாசனப் பகுதி பாலைவனமாக மாறவும், 49 குடிநீர்த் திட்டங்கள் பாதிப்பு அடையும் ஆபத்துகள் எழுந்துள்ளன.

மேலும், நெல்லைச் சீமையில் செண்பகவல்லி அணையின் தடுப்புச் சுவரைப் பழுதுபார்க்கக் கேரளம் அனுமதிக்காததால் 30000 ஏக்கர் பாசனம் பாழாகிறது. குமரி மாவட்டத்தில் நெய்யாற்றங்கரை இடது கால்வாய் தண்ணீரைத் தடுத்துவிட்டதால் 40 ஆயிரம் ஏக்கர் பாசனத்தை இழந்துவிட்டோம்.

எனவேதான், "உங்கள் ஊர் வழியாகப் போகிற தண்ணீரை நாங்கள் தடுப்போம், கட்டிய அணையை உடைப்போம் என்றால், எங்கள் ஊர் வழியாகப் போகிற சாலைகளை நாங்கள் மறிக்கிறோம்" என்ற முழக்கத்தோடு, இந்தப் போராட்டம் நடைபெற்றது.

கோவை வட்டத்திலுள்ள கந்தே கவுண்டர் சாவடி, வேலந்தாவளம், மாங்கரை (ஆனைகட்டி), பொள்ளாச்சி வட்டத்திலுள்ள கோபாலபுரம், வளந்தாயமரம், நடுப்புணி, உடுமலை வட்டத்திலுள்ள '916 சோதனைச் சாவடி' ஆகிய பகுதிகளில் இந்த முற்றுகைப் போராட்டம் எழுச்சியுடன் நடந்தது.

மாங்கரையில் (ஆனைகட்டி) நடந்த முற்றுகைப் போராட்டத்தில் கழகத் தலைவர் கொளத்தூர் மணி, பொதுச் செயலாளர்கள் கோவை இராமகிருட்டிணன், விடுதலை இராசேந்திரன் மற்றும் ஈரோடு, திருப்பூர், கோவை பகுதி கழகத் தோழர்களும், ம.தி.மு.க.வினரும் பெருமளவில் பங்கேற்றனர். எட்டு மணியிலிருந்தே கருப்புச் சட்டை, கழகக் கொடிகளுடன் கழகத் தோழர்கள் கோவை தலைமை அலுவலகத்தில் குவியத் தொடங்கினர். அங்கிருந்து தனி வாகனங்களில் மாங்கரை நோக்கிப் புறப்பட்டனர். கேரளாவை நோக்கி பேருந்துகள், வாகனங்கள் செல்லும் சாலையை முற்றுகையிட்டனர். உரிமைகளை வலியுறுத்தி முழக்கங்களை எழுப்பினர்.

"வஞ்சகம் செய்யுது கேரள அரசு; வேடிக்கைப் பார்க்குது மத்திய அரசு; கொதித்து எழுங்கள் தமிழர்களே!" "போராட்டம்... இது போராட்டம்; தமிழகம் காக்கும் போராட்டம்; தண்ணீருக்கான போராட்டம்"; "நாங்கள் மறிப்போம்... நாங்கள் மறிப்போம்; நதிகளில் தண்ணீரை நீங்கள் மறித்தால் சாலைகளில் பொருள்களை நாங்கள் மறிப்போம்." "முல்லை பெரியாறு - பாம்பாறு, செண்பகவல்லி - நெய்யாறு, தண்ணீர் உரிமை காப்பதற்கே எழுந்து நிற்குது தமிழர் சேனை; கேரள அரசே எச்சரிக்கை!" என்பது போன்ற முழக்கங்கள் எழுப்பப்பட்டன.

பின்னர், கழகத் தலைவர், கழகப் பொதுச் செயலாளர்கள் தலைமையில் தனித்தனி அணியாக தோழர்கள் கைதானார்கள். ம.தி.மு.க. தொழிற்சங்க செயலாளர் தியாகராசன், பவானி நதி நீர் காப்புக் குழுத் தலைவர் டிடிஅரங்கசாமி மற்றும் ம.தி.மு.க. பொறுப்பாளர்கள் பழனிச்சாமி, தனபால், ஆனந்தன் ஆகியோர் தலைமையில் ம.தி.மு.க.வினர் கைதானார்கள். 500 தோழர்கள் கைது செய்யப்பட்டு, திருமண மண்டபம் ஒன்றில் வைக்கப்பட்டனர். திருமண மண்டபத்தில் நடந்த கலந்துரையாடலில் கழகத் தலைவர், கழகப் பொதுச்செயலாளர்கள் மற்றும் ம.தி.மு.க. தோழர்கள் போராட்டத்தின் நோக்கங்களை விளக்கி உரையாற்றினர். ம.தி.மு.க. மூத்த தோழர் டிடி. அரங்கசாமி, முல்லை பெரியாறில் கேரளா இழைக்கும் துரோகங்களை விளக்கினார். ஒரு பெண் குழந்தைக்கு கழகத்தலைவர் தமிழினி என்று பெயர் சூட்டினார்.

மாலை 6 மணியளவில் அனைவரும் விடுதலை செய்யப்பட்டனர். ம.தி.மு.க. சார்பில் அனைவருக்கும் மதிய உணவு வழங்கப்பட்டது. இந்தப் போராட்டத்தில் அன்னூர் பகுதியிலிருந்து பெரியார் நற்பணி மன்றத்தைச் சார்ந்த தோழர்களும் திருப்பூர், ஈரோடு, கோபி கழகத் தோழர்களும் தனி வாகனங்களில் வந்து கலந்து கொண்டனர். ஈரோடு மாவட்ட செயலாளர் கோபி. இளங்கோ, மாவட்டத் தலைவர் நாத்திக ஜோதி, ஈரோடு கழகத் தோழர்கள் குமரகுரு, ரத்தினசாமி, கோவை ஆறுச்சாமி, கோவை கழகப் பொறுப்பாளர்கள் ராசு குமார், கோபால், சாஜித், சூலூர் பன்னீர்செல்வம், கதிரவன், கலங்கல் ஜோசப், திருப்பூர் மாவட்டத் தலைவர் துரைசாமி, நகர செயலாளர் முகில்ராசு, ஒன்றிய செயலாளர் அகிலன், மேட்டுப்பாளையம் சந்திரசேகர், பவானி பழனிச்சாமி, காவேரிப்பட்டினம் குமார், சென்னை தோழர்கள் சுகுமார், ஜான், நாத்திகன், தஞ்சைத் தமிழன் உள்பட 300-க்கும் மேற்பட்ட கழகத்தினர் போராட்டத்தில் பங்கேற்றனர். கைது செய்யப்பட்டு திருமண மண்டபத்தில் வைக்கப்பட்டிருந்த கழகத் தலைவர், பொதுச் செயலாளர்களுடன், வைகோ தொடர்பு கொண்டு பேசினார்.

ம.தி.மு.க. அழைப்பு விடுத்த இந்த போராட்டத்தில், பெரியார் திராவிடர் கழகம், தமிழர் தேசிய இயக்கம், தமிழ் தேசியக் கட்சி, தமிழ்நாடு கொங்கு இளைஞர் பேரவை, இந்து மக்கள் கட்சி, தமிழ்நாடுகள் இயக்கம், தமிழ்நாடு தேசிய விடுதலை இயக்கம், மார்க்சிய - பெரியாரிய பொதுவுடைமை கட்சி, கட்சி சார்பற்ற விவசாயிகள் சங்கம், தமிழ்நாடு முஸ்லீம் லீக் ஆகிய அமைப்புகளும் பங்கு கொண்டு, ஒவ்வொரு அமைப்பினரும் ஒரு எல்லைப் பகுதியில் முற்றுகைப் போராட்டத்தில் ஈடுபட்டனர். உடுமலை, பொள்ளாச்சி, கழகத் தோழர்கள் வளந்தாயமரம் பகுதியில் தோழர் தியாகு தலைமையில் நடந்த முற்றுகைப் போராட்டத்தில் பங்கேற்றனர். கந்தே கவுண்டர் சாவடி பகுதியில் நடந்த முற்றுகைப் போராட்டத்துக்கு ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ தலைமை தாங்கினார். நான்காயிரத்துக்கும் மேற்பட்டோர் வைகோ தலைமையில் கைதானார்கள். கேரளத்துக்கு வாகனங்கள் போக்குவரத்து முற்றாக தடை செய்யப்பட்டது. தமிழர் தேசிய இயக்கத் தலைவர் பழ. நெடுமாறன், தேனி மாவட்டம் 'போடி மெட்டு' பகுதியில் நடந்த முற்றுகைப் போராட்டத்துக்கு தலைமை தாங்கினார். கொளுத்தும் வெய்யிலில் ஒன்றரை மணி நேரத்துக்கும் மேலாக நின்றதால் - ரத்த அழுத்தம் குறைந்து, பழ. நெடுமாறன் மயக்கமுற்றார். உடன் அவருக்கு சிகிச்சை அளிக்கப்பட்டது.

தமிழகம் முழுதும் 50000-க்கும் மேற்பட் டோர் இந்தப் போராட்டத்தில் பங்கேற்றனர்.

### அ யோ....அநியாயம்ஸ

எதிர் வீட்டு
சரசு மக ஓடிப் போயிட்டா....
பையன் நம்மாளா....??

நம்மூர் பேங்குக்கு
புது மேனேசரு....
எப்படி நம்மாளா....??

ரொம்ப நாளா
கேட்கனுமினிருந்தேன்....
தம்பி நம்மாளா....??

வசதி இல்லைனா
தொலஞ்சி போகுது....
பொண்ணு நம்மாளா....??

அய்யா நாங்க
கணக்கெடுக்க வந்திருக்குறோம்
நீங்க எந்த சாதி....

அய்யோ... அநியாயம்...
அரசாங்கம் சாதி கேக்குது!!!!!

– சிவா

# பெரியாரியலை விதைத்த மதுரை பயிற்சி முகாம்



பெரியார் திராவிடர் கழக சார்பில் கடந்த 29,30 தேதிகளில் பெரியாரியல் பயிற்சி முகாம் மதுரையில் நடைபெற்றது. மதுரையிலிருந்து நத்தம் செல்லும் வழியிலுள்ள காஞ்சாரம் பேட்டை எனும் ஊரில் நடந்த இந்த பயிற்சி முகாமில் மகளிர் உட்பட 40 தோழர்கள் பங்கேற்றனர். முதல் நாள் 29 ஆம் தேதி காலை தோழர்கள் அறிமுகம் செய்து கொண்டதைத் தொடர்ந்து பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன், "பெரியாருக்கு முந்தைய தமிழகம்" எனும் தலைப்பில் வகுப்பு எடுத்தார். தேனீர் இடைவேளைக்குப் பிறகு கழகத் தலைவர், கொளத்தூர் மணி, "பெரியாரின் போராட்டங்கள்" எனும் தலைப்பில் வகுப்பு எடுத்தார். மாலை 5 மணியிலிருந்து 7.30 மணி வரை சிற்பி இராசன் 'மந்திரமா தந்திரமா' நிகழ்ச்சிகளை நடத்தியதோடு "புராணங்கள்" எனும் தலைப்பில் வகுப்பு எடுத்தார்.

இரண்டாம் நாள் காலை 10 மணியளவில் வகுப்புகள் தொடங்கின. சிற்பி ராசன் 'மந்திரமா, தந்திரமா' நிகழ்ச்சிகளை நடத்தினார். தொடர்ந்து பேராசிரியர் சரசுவதி "பெரியாரும் பெண்ணுரிமையும்" எனும் தலைப்பில் வகுப்பு எடுத்தார். மதிய உணவுக்குப் பிறகு, பயிற்சி வகுப்பின் நிறைவு நிகழ்ச்சிகள் ஆதனூர் எனும் கிராமத்தில் வழக்கறிஞர் பெரியார் வேந்தன் அவர்களுக்கு சொந்தமான இயற்கை எழில் குலுங்கும் தோப்பு ஒன்றில் நடந்தது. பேராசிரியர் சரசுவதி உரையைத் தொடர்ந்து, பேராசிரியர் சேவுக.பெருமாள், "பெரியார்-அம்பேத்கர் பார்வையில் சாதி தீண்டாமை ஒழிப்பு" எனும் தலைப்பில் பேசினார். தொடர்ந்து கழகத் தலைவர் கொளத்தூர் மணி, "கடவுள்" எனும் தலைப்பில் வகுப்பு எடுத்தார். பயிற்சியாளர்கள், பயிற்சி முகாமில் தங்களுக்குக் கிடைத்த அனுபவங்களைப் பகிர்ந்து கொண்டனர். பொதுச் செயலாளர் நிறைவுரையுடன் முகாம் நிறைவடைந்தது.

இரண்டு நாள் பயிற்சி முகாம்களையும் கழகத் தோழர் தூத்துக்குடி பால். பிரபாகரன் வழி நடத்தினார். கழகப் பொறுப்பாளர்கள் முருகேசன், தமிழ்ப் பித்தன் பெரியசாமி, சேகர் ஆகியோர் முகாமுக்கான ஏற்பாடுகளை சிறப்பாக செய்திருந்தனர்.

முனைவர் பட்டம் பெற்ற பேராசிரியர்கள், முதுகலைப் பட்டம் படித்த பெண்கள் பலரும் முகாமில் பங்கேற்றனர்.

முதல் நாள் பயிற்சி முடிந்ததும் இரவு உணவுக்குப் பிறகு கழகத் தலைவர், பொதுச் செயலாளருடன் தோழர்கள், தங்கள் கருத்துகளைப் பகிர்ந்து கொண்டனர்.

அய்ய வினாக்களுக்கு கழகத் தலைவர் கொளத்தூர் மணி விளக்கமளித்தார்.


பயிற்சியின் நிறைவு நிகழ்ச்சியில் தோழர்கள் தங்களுக்குக் கிடைத்த அனுபவங்களை பகிர்ந்து கொண்டனர். கீற்று இணையதளத்தின் வழியாக கழக ஏடான புரட்சிப் பெரியார் முழக்கத்தை தொடர்ந்து படிக்கும் வாய்ப்பு கிடைத்ததால், பெரியார் திராவிடர் கழகத்தைப் பற்றி அறிந்து கொண்டதாகவும், கழக ஏட்டில் வெளிவந்த கருத்துகள், தங்களுக்கு தெளிவையும், புரிதலையும் ஏற்படுத்தியதாகவும், பயிற்சியில் பங்கேற்ற பேராசிரியர்கள் கூறினர். கணிதத்தில் முதுகலைப் பட்டம் பெற்றுள்ள ஒரு பெண், பெரியாரியல் பற்றிய சரியான புரிதல் தனக்குக் கிடைத்தது என்று உணர்ச்சியுடன் குறிப்பிட்டதோடு, பெரியார் திராவிடர் கழகம் நடத்தும் போராட்டங்களில் பங்கேற்கத் தயாராக இருப்பதாக அறிவித்தார்.

இந்தப் பயிற்சி முகாமும் கழகத்தில் புதிய இளைஞர்களை இணைத்திருக்கிறது.

**– நமது செய்தியாளர்**

# ஐந்து பொய் வழக்குகளிலிருந்து கழகத் தலைவர் விடுதலை

வீரப்பனுக்கு ரகசியமாக ஆயுதங்கள் எடுத்துச் சென்றதாக கழகத் தலைவர் கொளத்தூர் மணி மீது கர்நாடக அரசு அடுக்கடுக்காக பொய் வழக்குகளைத் தொடர்ந்து கைது செய்தது. பிணையில் வெளிவர முடியாத பல்வேறு அடக்குமுறை சட்டங்களின் கீழ் பொய் வழக்குகளைத் தொடர்ந்ததால், ஒரு ஆண்டு, 20 நாட்கள் கழகத் தலைவர் கொளத்தூர் மணி கருநாடக சிறைகளில் அடைக்கப்பட்டிருந்தார். சிக்மகளூர், பீஜப்பூர், மைசூர், பெல்லாரி சிறைகளுக்கு மாற்றப்பட்டார். தமிழர் உரிமைகளுக்கான கோரிக்கைகளை முன் வைத்து கன்னட நடிகர் ராஜ்குமாரை வீரப்பன் கடத்திச் சென்றபோது, ராஜ்குமாரை மீட்பதற்கான முயற்சிகளில் கழகத் தலைவர் கொளத்தூர் மணி ஈடுபட்டார் என்பதாலும், அதிரடிப் படையால் பாதிக்கப்பட்ட மக்களுக்காகப் போராடினார் என்பதாலும் கருநாடக அரசு இந்த பழி வாங்கும் நடவடிக்கையில் இறங்கியது.



2002 மார்ச் 8 ஆம் தேதி கொளத்தூரிலிருந்து மேட்டூர் நோக்கி காரில் வந்தபோது வழியில் மடக்கி, கர்நாடக அதிரடிப்படை கழகத் தலைவரை கைது செய்தது. வீரப்பனுக்கு வெடி மருந்துகள் கொடுத்தனுப்பியதாகவும், கடைசியில் கழகத் தலைவர் கொளத்தூர் மணியே வெடி பொருட்களை வீரப்பனிடம் கையளிக்க எடுத்துச் சென்றபோது காட்டுக்குள் பிடிபட்டதாகவும், பொய் வழக்குகள் புனையப்பட்டன. எளிதாக பிணையில் வெளிவர முடியாத கர்நாடக அரசின் வெடிமருந்துகள் தடைச் சட்டத்தின் கீழ் வழக்குகளைப் பதிவு செய்ததோடு, காலாவதியான தடா சட்டத்தின் கீழும் ஒரு வழக்கைப் பதிவு செய்தனர். ஆனாலும் மாநில காவல்துறை இயக்குனர், காலாவதியான 'தடா'வில் வழக்குப் பதிவு செய்ததை ரத்து செய்து, இந்திய தண்டனை சட்டத்தின் கீழ் வழக்கை நடத்த உத்தரவிட்டார்.

கழகத் தலைவர் சிறையில் இருக்கும்போதே வீரப்பன், கர்நாடக முன்னாள் அமைச்சர் நாகப்பாவை கடத்தினார். நாகப்பாவை மீட்பதற்கு கழகத் தலைவர் கொளத்தூர் மணியை விடுதலை செய்து, தூதராக அனுப்ப வேண்டும் என்று வீரப்பன் நிபந்தனை விதித்தார். சிக்கலில் மாட்டிக்கொண்ட கர்நாடக அரசு, கழகத் தலைவர் கொளத்தூர் மணியிடம் தூது சென்று, வீரப்பனுக்கு வேண்டுகோள் விடுக்குமாறு கேட்டுக் கொண்டது. கருநாடக அரசின் அடக்கு முறைகளை சந்தித்துக் கொண்டிருந்த அந்த நிலையிலும், மனிதநேயத்துடன், நாகப்பாவை விடுவிக்குமாறு வீரப்பனுக்கு, வானொலி வழியாக கழகத் தலைவர்

(4 ஆம் பக்கம்)

# தொய்வின்றி தொடர்ந்த 28 நாள் கொள்கைப் பயணம்

***ஏப்ரல் 14 இல் தொடங்கி மே 10 இல் நிறை வடைந்த கழக சார்பில் நடந்த சாதி – தீண்டாமை ஒழிப்புப் பரப்புரைப் பயணச் செய்திகள் தொகுப்பின் தொடர்ச்சி.***

**18 ஆவது நாள்**

மே 1 அன்று இரவு தங்குவதற்கு (2 நாட்களுக்கு) இடம் வழங்கிய தோழர் ஓவியர் இளங்கோவன் மற்றும் அவரது தாயாரை பயணக் குழு சந்தித்தது. தோழர் இளங்கோவன் தகப்பனார் நாராயணசாமி சட்ட எரிப்புப் போராட்டத்தில் கலந்து கொண்டவர் என்பது குறிப்பிடத்தக்கது. இளங்கோவனின் தாயார் சிவகாமு, தங்கள் வீட் டிற்கு பெரியார் வந்ததை நினைவு கூர்ந்தார். அ.தி.மு.க.வைச் சார்ந்த மாவட்ட கவுன்சிலர் ஜெயராமன் காலை உணவு வழங்கினார். மேட்டு பாளையம், சாத்தனவாடி ஆகிய பகுதிகளில் பரப்புரை நடைபெற்றது. சாத்தனவாடியில் 2வது இடத்தில் (தாழ்த்தப்பட்டோர் குடியிருப்பு) சில வருடங்களுக்கு முன்பு இந்தப் பகுதியில் பேருந்து நிறுத்த நிழற் கூடத்தில் அமர அனுமதி இல்லாமல் இருந்தது. எங்கள் பகுதி இளைஞர்கள் எல்லாம் போராடி நாங்கள் இப்போது உரிமை பெற்றுவிட் டோம். அருகிலுள்ள கிராமத்தில்தான் இரட்டை தம்ளர் முறை உள்ளது. இந்தப் பகுதியில் சுடுகாட் டிலும், கோவிலிலும் தீண்டாமை நிலவுகிறது. தீண்டாமை ஒழிக்கும் உங்களின் முயற்சிக்கு ஆதரவாக இருப்போம் என்று ஆண்களும், பெண்களும் தெரிவித்தனர். மாலை அனுக்கூர் பிரம்ம தேசம், வாலிகண்டபுரம் ஆகிய பகுதிகளில் பரப்புரை நடைபெற்றது. தி.மு.க.வைச் சார்ந்த அனுக்கூர் கொலிஞ்சியப்பன் தேனீர் வழங்கினார்.

பிரம்ம தேசம் ஊராட்சி மன்றத் தலைவர் ஆர்.என்.ஆர். சீனிவாசன், இரண்டு வேளை உணவு வழங்கினார். இவர் ஒரு பெரியார் தொண்டர். எந்த நேரமும் கருப்புச் சட்டையுடன் இருப்பதோடு மட்டுமல்லாமல், தன் இல்லத்தின் சுவர்களில் பெரியார் பொன்மொழிகளையும், கருத்துக்களையும் எழுதி வைத்து, பகுத்தறிவுக் கொள்கைகளை பரப்புரை செய்து வருகிறார்.

**19 ஆவது நாள் (2.5.2010) பெரம்பலூர்**

எசனை, வேப்பந்தட்டை ஆகிய பகுதிகளில் பரப்புரை செய்துவிட்டு, இளைஞர் இயக்க தோழர் பெரியார் நேசன் இல்லத்தில் பயணக் குழுவினர் ஓய்வு எடுத்தனர். அங்கு தோழர்களுக்கு நுங்கு வழங்கி உபசரித்தார். மாலை பசும்பலூர், ராயப்ப நகர், வி.களத்தூர் ஆகிய பகுதிகளில் பரப்புரை நடை பெற்றது. தோழர்கள் பெரியார் நேசன், வேல் முருகன், சக்திவேல், பாலசுப்ரமணியம், முருகேசன், திலீப் குமார், செல்வக்குமார் ஆகியோர் கலந்து கொண்டனர். பெரம்பலூர் நகராட்சித் தலைவர் இளையராஜா, காலை உணவும், பிரம்மதேசம் ஊராட்சி மன்றத் தலைவர் ஆர்.என்.ஆர். சீனுவாசன் இரண்டு வேளை உணவும் வழங்கினார்.

**20 ஆவது நாள்**

மே 3 ஆம் தேதி 20ஆவது நாள் பயணம் தொடங் கியது. அன்றைய காலை உணவையும் பெரம்பலூர் நகராட்சித் தலைவர் இளையராசா ஏற்பாடு செய்திருந்தார். காந்தி சிலை, புதிய பேருந்து நிலையம், பாலக்கரை ஆகிய பகுதிகளில் பரப்புரை செய்தபின், எல்.அய்.சி. அதிகாரிகள் கார்த்திகேயன், மூர்த்தி ஆகியோர் மதிய உணவு ஏற்பாடு செய்தனர். மாலை அருணாரை பகுதியில் பரப்புரை நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில் இருந்து தோழர் மேட்டூர் குமரப்பா (பறை இசை) பயணத்தில் இணைந்தார். இந்தப் பகுதியில் தோழர்கள் சௌந்தர்ராஜன், லெனின் ஆகியோர் கலந்து கொண்டனர். இரவு 7 மணிக்கு வானொலித் திடலில் பொதுக் கூட்டம் நடைபெற்றது. பறை இசை, பாடல்களை தொடர்ந்து, துரை. தாமோதரன் சிறிது நேரமும், சிற்பி இராசன் சிறிது நேரமும் மந்திரமா தந்திரமா? நிகழ்ச்சியை நடத்தினர். அடுத்து பால் பிரபாகரன் உரையாற்றினார். இறுதியாக கழகத் தலைவர் கொளத்தூர் மணி சிறப்புரை யாற்றினார். தோழர் ஜெயவர்த்தனா நன்றி கூறினார்.

இரவு அம்மாபாளையத்தில் தோழர்கள் தங்கி யிருந்த இடத்திற்கு வந்து கழகத் தலைவர் பயணக் குழுவினருடன் நீண்ட நேரம் உரையாடினார்.

**21 ஆவது நாள்**

மே 4 ஆம் தேதி காலை உணவு, ஊட்டி காபி பார் உரிமையாளர் செல்லபிள்ளை வழங்கினார். காலை பேரளி என்ற ஊரில் பரப்புரை நடைபெற்றது. இங்கு இன்னமும் தாழ்த்தப்பட்டவர்கள் சைக்கிளில் செல்ல முடியாத நிலை இருப்பதாக அங்கிருந்த பொது மக்கள் தெரிவித்தனர். பெரம்பலூர் மாவட்டத்தில் இறுதியாக குன்னம் என்ற ஊரில் பரப்புரையை முடித்து அரியலூர் மாவட்டத்தை நோக்கி பயணக் குழு புறப்பட்டது. குன்னம் பகுதியில் பாதுகாப்பிற்கு வந்திருந்த பெண் உதவி ஆய்வாளர் மகாலட்சுமி தோழர்களுக்கு குளிர்பானம் வழங்கினார்.

**அரியலூர் மாவட்டம்**

மாலை கல்லங்குறிச்சி என்ற இடத்தில் பிரச் சாரமும், அரியலூரில் பொதுக் கூட்டமும் நடை பெற்றது. பெருமாள் கோவில் தெருவில் நடைபெற்ற இப்பொதுக் கூட்டம், தோழர்களின் பறை இசை மற்றும் பாடல்களுடன் துவங்கியது. தோழர் சிற்பி இராசன் மந்திரமா? தந்திரமா? நிகழ்ச்சி நடத்தினார். தோழர் கார்த்திக் வரவேற்புரையாற்ற, ரஞ்சித் குமார் தலைமையுரையாற்றினார். விடுதலை சிறுத்தைகள் கட்சியைச் சார்ந்த இரா. மதி, அரியலூர் ஒன்றிய ம.தி.மு.க. செயலாளர் பெ. தங்கவேல், ம.தி.மு.க. மாவட்ட செயலாளர் கு. சின்னப்பா, வழக்கறிஞர் பகுத்தறிவாளன் ஆகியோர் உரைக்குப் பின் கழகத் தலைவர் கொளத்தூர் மணி சிறப்புரை யாற்றினார். தோழர் பழனிச்சாமி நன்றி கூறினார்.

தங்கும் விடுதி, உணவு ஏற்பாடுகளை அண்ணா பல்கலைக்கழக பேராசிரியர் செந்தமிழ்ச் செல்வன் மற்றும் கோல்டன் மருத்துவமனை உரிமையாளர் த. பொன்மணி செய்தனர்.

**22 ஆவது நாள்**

மே 5 ஆம் தேதி கீழப்பழுவூர் பகுதியில் பரப்புரை செய்து, கீழப்பழுவூர் பயணியர் விடுதியில் பயணக் குழு ஓய்வெடுத்தது. அந்தப் பகுதி திராவிடர் கழகத்தைச் சார்ந்த ராஜேந்திரன் மதிய உணவு வழங்கினார். மாலை கோவில் எசனையை அடுத்து இலந்தைக் கூடம் பகுதியில் பரப்புரை நடைபெற்றது. அங்கு மொழிப்போர் தியாகி தங்கவேல் (ம.தி.மு.க.) பயணக் குழுவை வரவேற்று தேனீர் வழங்கினார். இரவு திருமானூரில் பொதுக் கூட்டம் நடை பெற்றது. இக்கூட்டத்தில் கழகத் தலைவர் கொளத் தூர் மணி கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார். ம.தி.மு.க. தோழர்கள் சிவலிங்கம், சேகர் ஆகியோர் கழகத் தலைவருக்கு சால்வை அணிவித்தனர். இரவு உணவு, அ.தி.மு.க. தோழர் இள. பாக்கியராஜ் இல்லத்தில் வழங்கப்பட்டது. திருமானூர் பயணியர் விடுதியில் பயணக் குழு இரவு தங்கியது.

**23 ஆவது நாள்**

மே 6 ஆம் தேதி கீழக்கொளத்தூர், கோவிலூர், காமரசவள்ளி, கைகாட்டி ஆகிய பகுதிகளில் பரப்புரை நடைபெற்றது. கோவிலூரில் ம.தி.மு.க.வைச் சார்ந்த தோழர் சட்டநாதன் தேனீர் வழங்கினார். கை காட்டியில் ஆம்புலன்ஸ் ஓட்டுநர் மோதிலால் ரூ.100 நன்கொடை வழங்கினார்.

**24 ஆவது நாள்**

மே 7 ஆம் தேதி விடுதலை சிறுத்தைகள் கட்சியின் விவசாய அணி மாவட்ட பொறுப்பாளர் செ.வெ. மாறன் இல்லத்தில் காலை உணவு வழங்கப்பட்டது. செந்துறையில் பெரியார் சிலை அருகிலும், அம்பேத்கர் சிலை அருகிலும் பரப்புரை நடை பெற்றது. இங்கு சட்ட எரிப்பு மற்றும் இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் கலந்து கொண்ட பெரியார் பெருந் தொண்டர் ஆர். நாராயணசாமி (தி.க.) வந்திருந்தார். அடுத்து பொன்பரப்பியில் பிரச்சாரம் நடைபெற்றது. கவரப்பாளையத்தில் தோழர் திருச்சி சவுந்தரராஜன் வீட்டில் சிறிது நேரம் ஓய்வெடுத்துவிட்டு, ஜெயக்கொண்டத்தில் இரண்டு இடங்களில் பரப்புரை செய்துவிட்டு பயணக்குழு அகினேஸ்புரம் சென்றது. இங்கு நடைபெறுவதாக இருந்தப் பொதுக் கூட்டத் திற்கு காவல்துறை அனுமதி மறுத்து விட்டனர். அகினேஸ்புரம் என்ற பெயரை பெரியார் புரம் என்று மாற்றி தோழர்கள் சிறப்பாக செயல்பட்டு வரும் பகுதி யாகும். இங்கு இருக்கை களும், மின் விளக்குகளும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. பொதுக் கூட்டமாகவே நடைபெற்றது. இரவு அனைவருக்கும் தோழர்கள் சிறப்பான உணவு வழங்கினர்.

**25 ஆவது நாள்**

மே 8 ஆம் தேதி ஆண்டி மடம், ஸ்ரீமுஷ்னம், கருவேப்பிலங்குறிச்சி, விருத்தாசலம் ஊர்களில் பரப்புரை நடந்தது.

கொளத்தூர் பொறியாளர் ஈஸ்வரன் 1000 ரூபாயும், பா.ம.க. மாவட்ட செயலாளர் கண்ண பிரான் 1000 ரூபாயும், ஆர்.எல்.ஆர். லாரி சர்வீஸ் ஆர். ராமசாமி, 500 ரூபாயும், நன்கொடை வழங்கினர். திருப்பூர் தோழர் முகில்ராஜ் 10 ஆயிரம் துண்டறிக்கைகள் அச்சிட்டுத் தந்தார். மேட்டூர் தோழர் சம்பத் 4 ஆயிரம் துண்டறிக்கைகள் அச்சிட்டுத் தந்தார். திருப்பூர் துரைசாமி பயணம் முழுமைக்கும் ஒலிபெருக்கி ஏற்பாடுகளைச் செய்தார்.

**26 ஆவது நாள்**

மே 9 ஆம் தேதி பயணக்குழு வடலூர் வந்து சேர்ந்தது. கழக செயற்குழு உறுப்பினர் கலியமூர்த்தி அவர்களின் திருமண மண்டபத்தில் குழுவினர் தங்கினர். உணவு ஏற்பாடுகளை தலைமை செயற்குழு உறுப்பினர் வடலூர் கலியமூர்த்தி செய்திருந்தார். வடலூரில் பரப்புரை நடந்தது. மாலையில் கடலூரில் புதுப்பாளையத்தில் நடந்த பொதுக் கூட்டத்திற்கு வடலூர் கலியமூர்த்தி தலைமை தாங்கினார். தோழர்கள் கொள்கைப் பாடல்களைப் பாடினர். சிற்பி ராசன் மந்திரமா தந்திரமா நிகழ்ச்சிகளை நடத்தினர். தொடர்ந்து மாவட்டக் கழகத் தலைவர் வெங்கடேசன் உரையாற்றியதைத் தொடர்ந்து கழகப் பொதுச்செய லாளர் விடுதலை இராசேந்திரன் உரையாற்றினார்.

தொடர்ந்து மாநில வன்னியர்சங்க துணைச் செயலாளர் திருமால்வளவன் உரையாற்றினார். வன்னியர் சங்கம், வன்னியர் சமூகத்து இளைஞர் களை நல்வழிப்படுத்தி, சமூகநீதிக்கான உரிமை களைப் பெறுவதற்கான அமைப்பு தானே தவிர, சாதியைப் பாதுகாக்கும் அமைப்பு அல்ல. மாறாக, கடலூர் மாவட்டத்தில் வன்னியர் தலித் சமூகத் தினரிடையே சாதிய முரண்பாடுகளை தடுத்து, சமத்துவத்தை உருவாக்கும் நோக்கத்துடனேயே செயல்பட்டு வருகிறது. சாதியும் தீண்டாமையும் ஒழிக்கப்படுவதற்கு கல்வி, பதவி, அரசியலில் சம உரிமைகள் வழங்கப்பட வேண்டும் என்பதை வலியுறுத்திய அவர், வன்னியர், தலித் சமூகத் தினரிடையே நடக்கும் சாதி மறுப்புத் திருமணங்களை தமது அமைப்பு ஆதரித்து, பல திருமணங்களை நடத்தியதை சுட்டிக் காட்டினார்.

நிறைவாக கழகத் தலைவர் கொளத்தூர் மணி சிறப்புரையாற்றினார். கடலூர் பரப்புரைக் கூட்டத் துக்கும் தோழர்கள் இரவு உணவுக்கும் தோழர் அருள் ஏற்பாடுகள் செய்திருந்தார்.

**புதுவையில் நிறைவு**

கழகத்தின் பரப்புரைக் குழு 28 ஆம் நாள் புதுவையில் பயணத்தை நிறைவு செய்தது. புதுவை புறநகர்ப் பகுதியான கரிச்சலாம் பாக்கத்தில் நடந்த நிறைவு விழா கூட்டத்துக்கு இ. கிருட்டிணமூர்த்தி தலைமை தாங்கினார். தோழர்கள் த. கமலக் கண்ணன், க. முருகன் முன்னிலை வகித்தனர். கழகத் தோழர்கள் வழங்கிய எழுச்சி இசையைத் தொடர்ந்து சிற்பி ராசன் மந்திரமா தந்திரமா நிகழ்ச்சிகள் நடத்தினார். புதுவை மாநில கழகத் தலைவர் லோகு. அய்யப்பன், தோழர் புதியவன், பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன் உரையைத் தொடர்ந்து கழகத் தலைவர் கொளத்தூர் மணி நிறைவுரையாற்றினார். இந்திய ஜனநாயக வாலிபர் சங்கத்தைச் சார்ந்த தோழர்கள் கழகப் பொறுப்பாளர்களுக்கு ஆடைகளைப் போர்த்தி, தங்கள் ஆதரவினைத் தெரிவித்தனர். பயணத்தில் பங்கேற்ற தோழர்கள் அனைவருக்கும் கழகத் தலைவர் கொளத்தூர் மணி, பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன் கருப்புத் துணிகளையும், சான்றிதழ் களையும் வழங்கி பாராட்டினர். கரிச்சலாம்பாக்கம் கழகத் தோழர்கள் அனைவருக்கும் இரவு உணவு வழங்கினர். 28 ஆம் நாள் நிறைவு பயணம் பெற்றது. தோழர்கள் 29 ஆம் நாள் காலை பயணம் முடிந்து கொள்கை பணியாற்றிய மனநிறைவோடு ஊர் திரும்பினர்.

**செய்தி: கோகுல கண்ணன்**

**அடுத்த இதழில்**

சாதி - தீண்டாமை ஒழிப்பு பரப்புரைப் பயணம் குறித்து 27 நாட்களிலும் பயணத்தில் பங்கேற்ற சிற்பி ராசன் எழுதிய கட்டுரை வெளி வருகிறது.

PURATCHI PERIYAR MUZHAKKAM TAMIL WEEKLY REG.NO.TN/CCN/488/09-11 LICENCED TO POST WPP NO.TN/CCN/9/09-11
REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TNTAM/2002/7776

# முல்லைப் பெரியாறு உரிமைகளை வலியுறுத்தி பொதுச்செயலாளர் இராமகிருட்டிணன் தலைமையில் இரண்டு நாள் பரப்புரைப் பயணம்






முல்லைப் பெரியாறு அணை யில் தமிழக உரிமையை காக்கவும், அமராவதி-பாம்பாற்றின் குறுக்கே கேரள அரசு கட்டும் அணையைத் தடுக்கவும் மே 28 ஆம் தேதி கேரளா செல்லும் அனைத்துப் பாதைகளிலும் சாலை மறியல் போராட்டம் நடத்துவதென ம.தி.மு.க. அறிவித்திருந்தது. இப்போராட்டத்தில் பெரியார் திராவிடர் கழகம் உள்ளிட்ட அமைப்புகளும் கலந்து கொண்டன. சாலை மறியலை விளக்கி, கழகத்தின் சார்பில் தாராபுரம், மடத்துக்குளம், உடுமலைப் பேட்டை வட்டங்களில் பிரச்சாரப் பயணம் பொதுச் செயலாளர் கு. இராமகிருட்டிணன் தலைமையில் நடந்தது.

22.5.2010 சனியன்று காலை 10 மணிக்கு தாராபுரம் வடதாரையில் தொடங்கிய இப்பயணம் காலை 11 மணிக்கு தாராபுரம் நகராட்சி, 12 மணிக்கு தாராபுரம் பேருந்து நிலையம், 1 மணிக்கு தளவாய்பட்டினம், 2 மணிக்கு காரத்தொழுவு, 4 மணிக்கு கணியூர், 5 மணிக்கு மடத்துக்குளம், 6.30 மணிக்கு கொழுமம், 7.30 மணிக்கு குமரலிங்கம் பகுதியிலும் 23.5.2010 ஞாயிறன்று காலை 9 மணிக்கு பள்ளபாளையம், 10 மணிக்கு குறிச்சிக்கோட்டை, 11 மணிக்கு தளி, 12 மணிக்கு தேவனூர் புதூர் ஆகிய பகுதிகளில் நடைபெற்றது.

பிரச்சாரப் பயணத்தின் நோக்கத்தை விளக்கி கழகப் பொதுச் செயலாளர் கு.இராமகிருட்டிணன், தலைமை செயற்குழு உறுப்பினர் இரா. மனேகாரன், திருப்பூர் மாவட்டத் தலைவர் துரைசாமி, மாவட்ட செயலாளர் கா.கரு மலையப்பன், தாராபுரம் குமார், யாழ். நடராஜன், இரா. பாக்கியநாதன், சிவானந்தம் உள்ளிட்டோர் பேசினர்.

ம.தி.மு.க. மாவட்டச் செயலாளர் ஆர்.டி. மாரியப்பன், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சி. கிருஷ்ணன், தாராபுரம் நகரச் செயலாளர் சுப. சந்திரசேகர், ஒன்றிய செயலாளர் தெய்வ சிகாமணி, காரத்தொழுவு கிளைச் செயலாளர் ஜோதி, மடத்துக்குளம் ஒன்றிய ம.தி.மு.க. இளைஞரணி செயலாளர் அருள்ராசு, குமரலிங்கம், பேரூர் கழக ம.தி.மு.க. செயலாளர் பாலு, தளி பேரூர் கழக ம.தி.மு.க. செயலாளர் சின்னு (எ) கருணாகரன் ஆகிய ம.தி.மு.க. நிர்வாகிகள், பிரச்சாரப் பயணத்தை வரவேற்றுப் பேசினர்.

பிரச்சாரப் பயணத்தில் கோவை கதிரவன், சோமு, பால முரளி, சூலூர் பன்னீர்செல்வம், வெள்ளமடை நாகராசு, திருப்பூர் முகில்ராசு, பொங்கலூர் கார்த்தி, பல்லடம் விஜயன், காரத் தொழுவு மயில்சாமி, ஜோத்தம்பட்டி மோகன், கடத்தூர் கதிரவன், உடுமலை சிவசங்கர், ருத்திரா பாளையம் ராஜேந்திரன், குமர லிங்கம், பீட்டர் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர். திருப்பூர் தியாகு பிரச்சாரத்தில் பாடல்கள் பாடினார். நிகழ்ச்சி ஏற்பாடுகளை தாராபுரம், மடத்துக் குளம், உடுமலைப் பேட்டை கழகத் தோழர்கள் சிறப்பாக செய் திருந்தனர்.

## இரண்டாம் நாள்

23.5.2010 ஞாயிறு பகல் 11.30 மணியளவில், கோவை மாவட்டம் பொள்ளாச்சி அருகேயுள்ள நா.மூ.சுங்கம் பகுதியில் பொள்ளாச்சி நகர செயலாளர் வெள்ளிங்கிரி தலைமையில் கழகப் பொதுச் செயலாளர் கோவை இராமகிருட்டிணன் உரை யாற்றினார். கோட்டூர் ஆதி, பகுத்தறிவாளர் பேரவை அமைப்பாளர்கள் இரா. மோகன், சி. விசய ராகவன், வட்ட கழகச் செயலாளர் காசு. நாகராசன், ஆனைமலை ஒன்றிய துணைச் செயலாளர் சம்பத் ஆகியோர் முன்னிலை வகித்தனர். தொடர்ந்து 1 மணியளவில் அங்கலக்குறிச்சி, 2 மணிக்கு கோட்டூர் ஆகிய இடங்களில் பொதுச் செயலாளர் உரையாற்றினார்.

மதியம் 3 மணியளவில் ஊத்துக்குளி அ.தி.மு.க. பேரூர் கழகச் செயலாளர் மு. இளஞ்செழியன், பொள்ளாச்சியில் மதிய விருந்தளித்தார். மாலை 4 மணி வரை நகர ம.தி.மு.க. அலுவலகத்தில் ஓய்வு. நகர ம.தி.மு.க. நிர்வாகி எம்.ஏ.வி. துரைபாய் அனைவருக்கும் தேநீர் வழங்கினார். தொடர்ந்து மாலை 5 மணியளவில் பொள்ளாச்சி பேருந்து நிலையம் முன்பு பிரச்சாரம் நடைபெற்றது. தமிழர் களுக்கான ஆற்று நீர் உரிமைகளில் மலையாளிகளின் சதிச் செயல்களை விளக்கி, பொதுச் செயலாளர் உணர்ச்சி மிகுந்த உரையாற்றியபோது மக்கள் திரண்டு நின்று செய்திகளை கேட்டனர். பின்னர் 6 மணியளவில் சீனிவாசபுரம், 7 மணிக்கு வளந்தாய மரம், சோதனைச்சாவடி அருகிலும் பொதுச் செயலாளர் பேசினார். இறுதியாக ஆனைமலையில் பயண நிறைவுப் பொதுக் கூட்டம் எழுச்சியோடு நடைபெற்றது.

ஆனைமலை நகர செயலாளர் வே. அரிதாசு தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் திருப்பூர் தியாகு இன உணர்வுப் பாடல்களைப் பாடினார். அவரைத் தொடர்ந்து கோவை நாகராசு, இரா. மோகன், வே. வெள்ளிங்கிரி, சி. விசயராகவன், காசு. நாகராசன், திருப்பூர் மாவட்டக் கழகத் தலைவர் துரைசாமி, ம.தி.மு.க. சரவணன் ஆகியோர் உரைக்குப் பின்னர் நிறைவாக கழகப் பொதுச் செய லாளர் கோவை இராமகிருட்டிணன் சிறப்புரையாற்றினார்.

முல்லைப் பெரியாறு அணை உயர்த்தப்படாதது; அதில் மறுக்கப்படும் தமிழர்களின் உரிமைகள் மற்றும் அமராவதியாறு தடுக்கப்பட்டால் ஏற்படப் போகும் பாதிப்புகள், தமிழக விவசாயிகள் எதிர்கொள்ளப் போகும் சிக்கல்கள் குறித்தெல்லாம் விரிவாக எடுத்துரைத்தார். இரவு 10 மணியைக் கடந்தும் கூட்டம் கலையாமல் இருந்தது. முடிவாக ஒன்றிய துணைச் செயலாளர் சம்பத் நன்றி கூற கூட்டம் நிறைவடைந்தது.

2 ஆம் நாள் பயணம் முழுவதும் பொதுச் செயலாளர் வாகனத்தைத் தொடர்ந்து பொள்ளாச்சி ஆனைமலை பகுதிகளைச் சேர்ந்த தோழர்கள் இருபத்தைந்து மோட்டார் சைக்கிள்களில் கழகக் கொடி பிடித்து ஊர்வலமாக வந்தனர். வழியெங்கும் ம.தி.மு.க.வினர் வரவேற்று பயணத்திற்கு ஆதர வளித்தனர். அ.தி.மு.க., ம.தி.மு.க., தி.மு.க.வினர் உள்ளிட்ட கட்சியினருடன் வணிகர்கள், விவசாயிகள் அனைவருமே நிதியளித்து உதவினர்.

ம.தி.மு.க. நிர்வாகிகள் குகன் மில் செந்தில், ஆர்.கே.எஸ். மீ.புரம் நாகராசு, முருகேசு, தாத்தூர் தருமராசு, விஜய் கிருஷ்ணன் உள்ளிட்ட ஏராளமான தோழர்களும் நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர்.

ஆனைமலை நகர கழகத்தின் சார்பாக அனைவருக்கும் இரவு உணவு வழங்கப் பட்டது.

(2 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கொளத்தூர் மணி வேண்டுகோள் விடுத்தார். நாகப்பன் மீட்புக்கு வீரப்பன் விதித்த கெடு முடிந்த நிலையில், தமிழக அதிரடிப்படையே காட்டுக்குள் சென்று, ரகசியமாக நாகப்பாவை சுட்டுக் கொன்றுவிட்டு பழியை வீரப்பன் மீது போட்டது.

கழகத் தலைவர் கர்நாடக சிறையில் இருக்கும்போது அவர் மீது போடப்பட்ட பொய் வழக்குகளை கண்டித்து, கர்நாடக சட்டமன்றத்தில் எதிர்க்கட்சித் தலைவர்கள் பேசினர். மைசூரில் கழகத் தலைவர் விடுதலை கோரி நாகப்பாவின் ஆதரவாளர்கள் ஆர்ப்பாட்டம் நடத்தினர். ஓராண்டு 20 நாட்கள் சிறைவாசத்துக்குப் பிறகு 2003 ஆம் ஆண்டு மார்ச் 28 ஆம் தேதி கழகத் தலைவர் கொளத்தூர் மணி, பிணையில் விடுதலையானார். தொடர்ந்து 2003 ஆம் ஆண்டிலிருந்து தமிழ்நாடு எல்லையிலுள்ள கர்நாடகாவின் கொள்ளேகால் விரைவு நீதிமன்றத்தில் வழக்கு விசாரணை நடந்து வந்தது. கடந்த ஏழாண்டுகளுக்கும் மேலாக வழக்கு விசாரணைக்காக கொள்ளேகால் நீதிமன்றத்திற்கு கழகத் தலைவர் சென்று வந்தார். விரைவு நீதிமன்றம் ஒவ்வொரு பொய் வழக்கிலிருந்தும் கழகத் தலைவரை விடுதலை செய்தது. கடைசியாக கொள்ளேகால் நீதிமன்றத்தில் நடந்த அய்ந்தாவது வழக்கில் கடந்த மே 27 ஆம் தேதி விடுதலை செய்யப்பட்டார்.


இப்போது சாம்ராஜ் நகர் மாவட்ட நீதிமன்றத்தில் ‘தடா’வில் பதியப்பட்டு, பிறகு இந்தியத் தண்டனைச் சட்டத்தின் கீழ் மாற்றப்பட்ட வழக்கு மட்டும் நிலுவையில் உள்ளது.

**“புரட்சிப் பெரியார் முழக்கம்”**
**ஆண்டுக்கட்டணம் ரூ.150/-**
தொடர்புக்கு: ஆசிரியர்,
29, பத்திரிகையாளர் குடியிருப்பு,
திருவள்ளுவர் நகர்,
திருவான்மியூர், சென்னை-41.
**தொடர்புக்கு புதிய எண்:**
✆ 90030 87605

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted on: 3rd June 2010

பெறுநர்

OWNER & PUBLISHER : ANOOR JAGADEESAN, PUBLISHED AT 15, MYLAPPAR STREET, AYANAVARAM, CHENNAI - 600 023. PRINTED BY : S. THEESMAS AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014. EDITOR : VIDUTHALAI RAJENDRAN.



புரட்சிப்

# பெரியார் முழக்கம்

பெரியார் திராவிடர் கழக வார ஏடு

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் www.puratchiperiyarmuzhakkam.com திருவள்ளுவர் ஆண்டு 2041 ஜூன் 10, 2010 புரட்சி 9 முழக்கம் 22 விலை: ரூ.2.50


## எழுத்தாளர் அருந்திராய் கூறுகிறார்

# இந்தியா ஒரு பார்ப்பன அரசு

மனித இனப் படுகொலையை இலங்கை அரசு முரட்டுத்தனமாக செய்தது. ஆனால், இந்திய அரசு, அப்படி, முரட்டுத்தனமான அணுகுமுறையை மேற்கொள்ளாமல், தந்திரமாக மெல்ல மெல்ல (Slow Poisoning) செய்து வருகிறது. காரணம், இந்திய அரசு பார்ப்பன அரசு; சைவ அரசு (Brahmins - Vegetarians) என்று, புகழ் பெற்ற எழுத்தாளரும், சர்வதேசப் பெருமைக்குரிய 'புக்கர்' விருது பெற்றவரும், மனித உரிமையாளருமான அருந்ததிராய் குறிப்பிட்டார்.

உள்நாட்டு அடக்குமுறை எதிர்ப்புக் கூட்டமைப்பு சார்பில், சென்னையில் பழங்குடி மக்களைக் கொன்றொழிக்கும் மத்திய அரசின் பச்சை வேட்டைப் போரைக் கண்டித்து மாபெரும் அரங்கக் கூட்டம் 4.6.2010 அன்று சி.டி. நாயகம் தியாகராய நகர் மேல்நிலைப் பள்ளி மைதானத்தில் நடைபெற்றது. அருந்ததிராய் உரை கேட்க - மாலை 4 மணியிலிருந்து கூட்டம் திரளத் தொடங்கியது. கருத்தாளர்கள், எழுத்தாளர்கள், கலை இலக்கிய வாதிகள், மனித உரிமையாளர்கள், இயக்கத்தினர், வழக்கறிஞர்கள், பெண்கள், மாணவர்கள் என்று பல்வேறு நிலைகளில் உள்ளவர்களும் ஆயிரக் கணக்கில் திரண்டு வந்தனர். இருக்கைகள் நிரம்பி வழிந்து, இரு புறத்திலும் நின்று கொண்டே உரையைக் கேட்டனர்.

"என்னுடைய உரையைக் கேட்க, இவ்வளவு பெரிய கூட்டம் திரண்டு வரும் என்று நான் நினைத்துக்கூடப் பார்க்கவில்லை. அடிப்படையில் நான் ஒரு சுதந்திரமான எந்த அணியிலும் இணைத்துக் கொள்ளாத ஒரு எழுத்தாளர்; பேச்சாளர் அல்ல. ஆனாலும், என்னால் இயன்ற நியாயத்தை இந்தக் கூட்டத்தில், செய்ய முயலுகிறேன்" என்று அருந்ததிராய் குறிப்பிட்டார். 40 நிமிடம் அவரது உரை நீடித்தது. அருந்ததிராயின் ஒவ்வொரு சொல்லையும் அமைதியுடன் கூட்டம் செவிமடுத்தது. இந்திய அரசை பார்ப்பன அரசாக அவர் கூறியபோது பலத்த கரவொலி எழுந்தது. இந்தியாவில் நடப்பது ஜனநாயக ஆட்சியல்ல; கம்பெனிகளின் அரசு (corporate state). இலங்கை அரசும் இதே போன்றதுதான். பெரும் தொழில் நிறுவனங்களின் சுரண்டலுக்காகவே அந்த அரசு இனப்படுகொலையை நடத்தியது. அதனால்தான், இந்திய தொழிலதிபர்கள் இப்போது இலங்கைக்குப் போயிருக்கிறார்கள். தமிழ்நாட்டின் அரசியல் கட்சிகள் இலங்கையில் நடந்த இனப்படு கொலையைத் தடுத்து நிறுத்தியிருக்க வேண்டும். அப்படி தடுத்து நிறுத்தாமல் போனது மிகவும் வெட்கக் கேடானதாகும்" என்றார் அருந்ததிராய்.

பழங்குடி மக்களின் வாழ்விடங்களில் கனிம வளங்களை சுரண்டுவதற்கு பன்னாட்டு நிறுவனங்களுடன் 2005-06 ஆம் ஆண்டில் புரிந்துணர்வு ஒப்பந்தங்களை ஏற்படுத்திக் கொண்ட மன்மோகன்சிங் ஆட்சி, அதற்காக பழங்குடி மக்களை வெளியேற்ற திட்டமிட்டது. அவர்களுக்கு எதிராக சல்வார் ஜூடும் என்ற படையை அதே ஆண்டிலேயே நிறுவியது. பழங்குடி மக்கள் வாழ்விடங்களிலிருந்து விரட்டியடிக்கப்பட்டனர். 680 கிராமங்கள் காலி செய்யப்பட்டன. லட்சக் கணக்கான மக்கள் அகதிகள் முகாம்களில் அடைத்து வைக்கப்பட்டனர். அப்படிப் பாதிக்கப்பட்ட மக்கள் தங்கள் எதிர்ப்பைக் காட்டுவதற்குத்தான்



மாவோயிஸ்டுகள் இயக்கத்தில் சேர்ந்தனர். மாவோயிஸ்டுகள் என்று இவர்கள் கூறுவது, இந்தப் பழங்குடி மக்களைத்தான். இவர்கள் கூறும் மாவோயிஸ்டுகளில் 99 சதவீதம் பேர் பழங்குடி மக்கள்தான். ஆனால், பழங்குடி மக்களில் 99 சதவீதம் பேரும் மாவோயிஸ்டுகள் அல்ல" என்றார் அருந்ததிராய்.

"நான் எந்த வன்முறையையும் ஆதரிப்பவர் அல்ல; மாவோயிஸ்டும் அல்ல. ஆனால் , எனக்கு பயங்கரவாதி என்று முத்திரை குத்த ஊடகங்கள் முயலுகின்றன. இரண்டு நாட்களுக்கு முன் நான் மும்பையில் இதே போல் ஒரு கூட்டத்தில் பேசிய போது, மக்களுக்கு எதிரான வன்முறைகளை எந்த அமைப்பு நடத்தினாலும், அதை நான் ஆதரிக்க மாட்டேன் என்றுதான்பேசினேன். ஊடகவியலாளர்கள் அப்படித்தான் குறிப்பு எடுத்துக் கொண்டு போனார்கள். அடுத்த நாள், பி.டி.அய். என்ற செய்தி நிறுவனம், உண்மைக்கு மாறாக செய்தியைத் திரித்தது. நான் ஒரு மாவோயிஸ்டுதான் இந்த அரசுக்கு துணிவிருந்தால், என்னைக் கைது செய்யட்டும் என்று நான் பேசியதாக அந்த நிறுவனம் செய்தி தந்தது. உடனே எல்லா ஊடகங்களும், தங்களது குறிப்புகளை மாற்றிக் கொண்டு, பி.டி.அய். தந்த செய்தியையே வெளியிட்டனர்.

அமெரிக்க அதிபர் புஷ் இப்படித்தான் கேட்டார்; நீங்கள் எங்கள் பக்கமா? அல்லது எதிரிகள் பக்கமா? என்று கேட்டார். அதேபோல்தான், இந்த அரசும், நீங்கள் எங்கள் பக்கம் நிற்பவர்கள் என்றால், பன்னாட்டு நிறுவனங்களை ஆதரிப்பவர்களாக இருக்க வேண்டும். எங்களை எதிர்த்தால், நீங்கள் பயங்கரவாதிகள் என்று கூறுகிறது. பயங்கரவாதிகள் என்பதற்கான வரையறையை இந்திய அரசு விரிவுபடுத்துகிறது. பன்னாட்டு வர்த்தக நிறுவனங்களின் சுரண்டல்களை எதிர்ப்பவர்கள் காந்தியவாதிகள் என்றாலும், மனித உரிமையாளர்கள் என்றாலும், சமூக செயல்பாட்டாளர்கள் என்றாலும், எல்லோருமே பயங்கரவாதிகள்தான் என்கிறது இந்திய அரசு.

"நான் சுதந்திரமான எழுத்தாளர்; ஆனால், நான், அடக்குமுறைக்கு எதிரான பக்கத்தில் நிற்கிறேன்" என்றார் அருந்ததிராய்.

"பழங்குடி மக்கள் நடத்தும் போராட்டம் ஜனநாயகத்துக்கு எதிரானது அல்ல; மாறாக - ஜனநாயகம் தவறான முறையில் மக்களுக்கு எதிராக செயல்படுத்தப்படுவதைத்தான் எதிர்க்கிறார்கள். காடுகளிலே போராடும் மக்கள் காந்திய வழிமுறைகளை பின்பற்றிட முடியாது. அவர்கள் ஏற்கனவே பட்டினி கிடக்கும்போது, எப்படி உண்ணாவிரதப் போராட்டத்தை நடத்த முடியும்? காந்தியவாதிகள் வீதிகளில் போராட முடியும். பார்வையாளர்களைத் திரட்ட முடியும். காடுகளில் வாழும் மக்கள் எப்படி பார்வையாளர்களைத் திரட்டுவது?" என்று கேட்டார், அவர்.

இந்தியாவின் ஜனநாயகத்தைப் பற்றிக் குறிப்பிட்ட அவர், "இந்தியாவின் ஜனநாயகம், தன்னையே காலனி ஆதிக்கப் பிடிக்குள் முடக்கிக் கொள்ள முயற்சிக்கிறது. ஜனநாயகத்தின் நிறுவனங்களான அதன் உறுப்புகளையே, (நீதிமன்றம், சட்டமன்றம், நிர்வாகம் போன்றவை) விழுங்க முயற்சிக்கிறது. ஆனால், அந்த நிறுவனங்கள், தங்களை உண்ணக் கொடுப்பதற்கு மறுக்கின்றன. இங்கே நடப்பது ஒரு போலி பாசாங்கு ஜனநாயகம்" என்றார்.

"இந்திய அரசின் அகராதியில் ஒருவர் நல்ல பழங்குடி என்றால் அவர் வெளியேற்றப்படுவதற்கு உடன்பட வேண்டும்; பட்டினி கிடக்க வேண்டும்; அவரது கவுரவம் பறிக்கப்பட்டிருக்க வேண்டும்; அப்போதுதான், அவர் நல்ல பழங்குடியாளர். இல்லாவிட்டால், அவர் ஒரு மாவோயிஸ்டு என்கிறது அரசு. இதை நாம் அனுமதிக்கப் போகிறோமா?" என்று கேட்டார், அருந்ததிராய்.

"பல நூற்றாண்டுகளாக பழங்குடி மக்கள் காடுகளுடனும், இயற்கையுடனும் நல்லிணக்கமாக வாழ்ந்து வருகிறார்கள். இப்போது பாக்சைட்டை சுரங்கத்திலிருந்து தோண்டி எடுப்பதால், சுற்றுச் சூழலும், காடுகளின் சமச்சீர்த் தன்மையும் குலைகிறது. அதனால் பழங்குடி மக்களின் வாழ்க்கையே பாதிக்கப்படுகிறது. இயற்கை வளங்களை பணமாக மாற்றுவதற்கு எவரையும் அனுமதிக்கக் கூடாது. முதலாளித்துவம் என்ற தத்துவம் தன்னை மட்டுமே எப்போதும் இயங்க அனுமதிக்கும். முதலாளித்துவம் சாராத எதையும் அதனால் சகித்துக் கொள்ள முடியாது. இந்த நாட்டில் உடைமைகள் இல்லாத முதலாளித்துவமல்லாத சமூகத்தினரான பழங்குடி மக்களை அது எப்படி அனுமதிக்கும்? ஆனாலும் அவர்கள் உறுதியுடன் போராடுகிறார்கள். நிலை குலைந்து விடவில்லை. இந்தப் போராட்டத்தில் வெற்றி பெற்றாக வேண்டும். இந்த வெற்றியின் மூலம் தான் முதலாளித்துவ எந்திரத்தை நிறுத்த முடியும். இதிலே நாம் தோற்றால், சரணாகதி அடைய வேண்டியதுதான்" என்றார் அருந்ததிராய். அந்ததிராய் உரையை இறுதியில் தோழர் தியாகு தமிழில் தொகுத்துக் கூறினார்.

ஜவகர்லால் நேரு பல்கலைக்கழக பேராசிரியர் அமித்பாதுரி, புதுடில்லி பல்கலைக்கழக பேராசிரியர்கள் கிலானி, சாய்பாபா ஆகியோரும் உரையாற்றினர். தோழர் வேலுச்சாமி தலைமையுரையாற்றினார். கழகப் பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன் வரவேற்புரையாற்றினார். சாதி ஒழிப்பு விடுதலை முன்னணி ஒருங்கிணைப்பாளர் தோழர் ரஜினிகாந்த் நிகழ்ச்சியை தொகுத்து வழங்கி நன்றி கூறினார்.

பொதுநல மாணவர் எழுச்சி இயக்கத்தினர் பறை இசை நிகழ்ச்சிகளை வழங்கினர். இறுதிவரை கூட்டத்தினர் கருத்துகளை அமைதியாக உள்வாங்கி கலைந்து சென்றனர்.

**- நமது செய்தியாளர்**

**தலையங்கம்**

## தமிழர் உணர்வுகளை அவமதிக்கும் டில்லி

தமிழர்களை இனப்படுகொலை செய்த போர்க் குற்றவாளி இராஜபக்சேவுக்கு ஒரு வார்த்தை கண்டனம் கூட தெரிவிக்காத இந்தியப் பார்ப்பனிய ஆட்சி, அந்தக் கொடிய வரை டெல்லிக்கு அழைத்து சிவப்புக் கம்பள வரவேற்பு தருகிறது.

அயர்லாந்து தலைநகர் டப்ளினின் கூடிய ‘நிரந்தர மக்கள் தீர்ப்பாயம்’ – ராஜபக்சேவை ‘போர்க் குற்றவாளி’ என்றும், ‘மானுடத்துக்கு எதிரான குற்றங்களை இழைத்தவர்’ என்றும், இனப்படுகொலை என்ற குற்றச்சாட்டுப் பற்றி ஆழமான விசாரணை நடத்தப்பட வேண்டும் என்றும் அறிவித்துள்ளது. அய்ரோப்பிய ஒன்றியமும், இலங்கையின் போர்க் குற்றங்கள் பற்றி விசாரணை நடத்த வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளதோடு, இலங்கையிலிருந்து அய்ரோப்பிய ஒன்றியத்துக்கு இறக்குமதி செய்யப்படும் பொருள்களுக்கான வரிச் சலுகையை (ஜிஎஸ்பி பிளஸ்) நிறுத்தியுள்ளது.

போருக்குப் பிறகு நடந்த மனித உரிமை மீறல்கள் குறித்து, ராஜபக்சே விசாரணைக்கு உத்தரவிடவேண்டும் என்று அய்.நா. பொதுச்செயலாளர் பான்.கி.மூன், ராஜபக்சேயிடம் வலியுறுத்தினார். ஆனால், ராஜபக்சே, எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. இந்த நிலையில், இது தொடர்பாக நிபுணர் குழு ஒன்றை அமைக்க அய்.நா. திட்டமிட்டுள்ளதைத் தொடர்ந்து, நடுங்கிப் போன இலங்கை அரசு, அப்படி குழு எதையும் நியமித்துவிட வேண்டாம் என்று, அந்நாட்டின் வெளியுறவு ஜி.எல். பெய்ரீசை, பான்கிமூனிடம் நேரடியாக அனுப்பி மன்றாடியது.

இந்த நிலையில், இனப்படுகொலைகளையும், போர்க் குற்றங்களையும் மறைத்து, இலங்கையில் சுமூக நிலை இருப்பது போல், ஒரு தோற்றத்தை உருவாக்கும் சதித் திட்டத்தை இலங்கையும், இந்தியாவும் இணைந்து தீட்டியுள்ளன. அதன்படி இலங்கையில் சர்வதேச இந்திய திரைப்பட விழாவை நடத்த முடிவு செய்தனர். உண்மையில் தென் கொரியா நாட்டில் நடந்த முடிவு செய்யப்பட்ட இந்த விழா, இந்திய அரசின் தலையீட்டால், கொழும்புக்கு மாற்றப்பட்டது. இந்த விழாவில் திரைப்படக் கலைஞர்கள் பங்கேற்பது தமிழின உணர்வை அவமதிப்பதாகும் என்று – தமிழகத்திலிருந்து கண்டனங்கள் வெடித்தன. தென்னிந்திய திரைப்பட வர்த்தக சபையும், தமிழின உணர்வோடு, கலைஞர்கள், இந்த விழாவைப் புறக்கணிக்க வேண்டுகோள் விடுத்தது.

அதன்படி, தென்னகக் கலைஞர்கள் இந்த விழாவைப் புறக்கணித்துள்ளனர். இந்த விழாவுக்கான விளம்பர தூதராக நியமிக்கப்பட்ட இந்தி திரைப்பட நடிகர் அமிதாப்பச்சான் தமிழர்கள் உணர்வுகளை மதித்து, அப்பதவியிலிருந்து விலகினார். பிரபல நடிகர்கள் ஷாருக்கான், அபிசேக் பச்சான், ஐஸ்வர்யாராய், ரஜினி, கமல்ஹாசன் போன்றோர் விழாவைப் புறக்கணித்தாலும், பாரதிய ஜனதா கட்சியைச் சார்ந்த சத்ருகன்சின்கா, நடிகர்கள் சல்மான்கான், கோவிந்தா, கரீணாகபூர், பிபாஷாபாசு போன்ற வடநாட்டு நடிகர்கள் பங்கேற்று, தமிழர்களின் உணர்வுகளை அவமதித்துள்ளனர்.

இன்னொரு புறத்தில், இந்திய தொழில் வர்த்தக அமைப்புகளின் கூட்டமைப்பைச் சார்ந்த தொழில் அதிபர்கள், திரைப்பட விழாவுக்கும், அடுத்த நாள் இலங்கையில் தொழில் தொடங்குவது குறித்து, அந்நாட்டு அரசுடன் பேச்சு வார்த்தை நடத்தியுள்ளனர். தமிழர்களுக்கு எந்த புனரமைப்பு நடவடிக்கையையும், சிறிலங்கா வழங்காத நிலையில், மீன் பிடித் தொழிலை செய்த வந்த தமிழர்கள், பிச்சை எடுக்கும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளதாக, நெஞ்சு பதறும் செய்திகள் வருகின்றன. முகாம்களிடமிருந்து ஊருக்கு திரும்பிய தமிழர்கள், உணவு, உடை, தங்குமிடமின்றி, பரிதவிக்கிறார்கள்.

தமிழின அழிப்புக்கு அனைத்து உதவிகளையும் செய்த, சோனியா– மன்மோகன் ஆட்சி, இதைப் பற்றியெல்லாம் எந்தக் கேள்வியும் கேட்காமல், இராஜபக்சேவுக்கு சிவப்புக் கம்பள வரவேற்பு தருகிறது என்றால், இதைவிட தமிழின அவமதிப்பு வேறு ஏதேனும் இருக்க முடியுமா?

சோனியா – மன்மோகன் ஆட்சியானாலும் சரி, வடநாட்டு நடிகர்களானாலும் சரி, இந்தியாவின் தேசிய இனங்களில் ஒன்றான தமிழர்களின் உணர்வுகளை காலில் போட்டு மிதித்துக் கொண்டு, இந்தியனாக இரு என்றால், மானமுள்ள தமிழன் எப்படி இந்தியனாக இருக்க முடியும்?

ராஜபக்சேயின் டெல்லி வருகையை எதிர்த்து, தமிழகம் போர்க்களமாகியுள்ளதை நாம் வரவேற்றாலும், இந்த எதிர்ப்புகள் உணர்ச்சிகளின் வெளிப்பாடுகளாக குறுகிவிடக் கூடாது. இந்தியாவின் குடிமகனாக நாங்கள் ஏன் இருக்க வேண்டும் என்ற அரசியல் ரீதியான அழுத்தமான கேள்வியை டில்லியை நோக்கி ஒவ்வொரு மானமுள்ள தமிழனும் கேட்கும் நிலை உருவாக வேண்டும். இந்திய பார்ப்பன ஆட்சி, அத்தகைய விளிம்புக்கு தமிழினத்தைத் தள்ளிவிட்டுள்ளது.

# ‘ஏழுமலையான்’ தரிசனத்துக்கு நிபந்தனைகள்!

‘ஆடையில்லாத மனிதன் அரை மனிதன்’ என்று ஒரு பழமொழி உண்டு. இதுகூட ஆடைகள் கண்டுபிடிக்கப்பட்ட பிறகுதான் வழக்கத்திற்கு வந்திருக்க முடியும். ஆடைகளே இல்லாமல், மனிதன், குகைகளில் வாழ்ந்த காலங்களும் உண்டு. நாகரிகம் வளர்ந்த பிறகே, உலகில் மனிதர்கள் ஆடைகளை அணியும் காலம் வந்தது. அப்போதுகூட இந்த பாரதத் திருநாட்டில் கீழ்சாதி என்று ஒதுக்கப்பட்ட மக்கள் ஆடை அணியும் உரிமையை மறுத்தார்கள். குமரி மாவட்டத்தில் நாடார் குலப் பெண்கள் ரவிக்கையே அணியக் கூடாது என்று தடுத்தார்களே, என்ற வரலாற்றை நினைவு கூர்கிறார், நமது நண்பர் ஒருவர். ஆமாம்! உண்மைதான்.

ஆடை அணியும் நாகரிகம் வந்த பிறகு, இப்போது, ‘ஆடை ஒழுங்குகளும்’ வந்து விட்டன. உணவு ஒழுங்கு, உடை ஒழுங்கு, பணி ஒழுங்கு என்றெல்லாம் புதிய புதிய ஒழுங்குகள் வரத் தொடங்கி விட்டன. என்னப்பா ‘சட்டை புராணம்’; எதற்கு, இந்த பீடிகை என்று கேட்கத் தோன்றுகிறதா? காரணம் இருக்கிறது. திருப்பதி ஏழுலையான் கோயிலுக்கு வரும் பக்தர்களுக்கு கோயில் நிர்வாகம், ஒரு உத்தரவு போட்டிருக்கிறது. அதன்படி ஆண் பக்தர்கள் வேட்டி அல்லது பேண்ட் மற்றும் சட்டையும், பெண்கள் பாவாடை சட்டை அல்லது சேலை ரவிக்கை அணிந்து வந்தால் மட்டுமே ஏழுமலையானை தரிசிக்க அனுமதிக்கப்படுவார்கள்” என்று அந்த அறிவிப்பு கூறுகிறது. வடமாநிலங்களிலிருந்து வரும் பக்தர்கள், அரைக்கால் சட்டை, பைஜாமா, குர்தா, சுடிதார், சல்வார்கமீஸ் என்று கவர்ச்சியான உடையில் வருகிறார்களாம். இது இந்து கலாச்சாரத்துக்கு ஒவ்வாது என்று ஆன்மீக ஆர்வலர்கள் கருதுகிறார்களாம். அதற்காக ‘ஆடை ஒழுங்கு’ அமுலுக்கு வரப் போகிறதாம்.

“இதுல என்னப்பா தப்பு? எல்லாவற்றுக்கும் ஒழுங்கு இருப்பது நல்லதுதானே?” என்று பக்த நண்பர் ஒருவர் கேட்டார். “ஒன்றும் தவறில்லையப்பா; ஆடை போடுவதுதான் ஒழுங்கு; ஆடை போடாமல் இருப்பது தானே ஆபாசம்?” என்று கேட்டேன். “ஆமாம், இதில் என்ன சந்தேகம்?” என்று நண்பர் திருப்பிக் கேட்டார். “அப்படியானால், ஏழுமலையான் கர்ப்பகிரகத்துக்குள்ளே மேலாடை போடாமல் முதுகில் பூணூலோடு புரோகிதம் செய்கிறார்களே அவர்களுக்கு ஒழுங்கு வேண்டாமா? கன்யாகுமரியில் உள்ள கோயிலில் சாமி தரிசனம் செய்ய வரும் பக்தர்களை மேலாடையை கழற்றச் சொல்கிறார்களே; இது ஆபாசம் அல்லவா?” என்று கேட்டேன். “இப்படித்தான், எல்லாவற்றுக்கும் விதண்டாவாதம் பேசுவதே, உங்களுக்கு வேலை” என்று வழக்கமான பல்லவியைப் பாடினார் நண்பர்.

நியாயத்தைப் பேசினால், இவர்களுக்கு விதண்டாவாதம் போலும்! சரி அது போகட்டும்; ஆடை ஒழுங்கு மட்டும் பேசுகிறீர்களே? கோயிலுக்கு வரும் பக்தர்களுக்கு சமூக ஒழுங்கு வேண்டாமா?” என்று கேட்கத் தோன்றுகிறது. அதாவது கோயிலுக்கு வரும் பக்தர்கள் புறத்தோற்றத்தில் வேட்டி, பேண்ட், புடவை அணிந்து வந்தால் போதுமா? அவர்கள், சமூக ஒழுங்குள்ளவர்களாக இருக்கிறார்களா? என்பதைக் கண்டறிய வேண்டுமல்லவா? ஆன்மிக அன்பர்கள் அதைப் பற்றி கவலைப்படமாட்டார்களா?

அதற்கும் சில கட்டுப்பாடுகளை வைக்கலாமே! அதாவது தரிசிக்க வரும் பக்தர் -

- ஒழுங்காக வருமான வரி கட்டி வருகிறார் என்று வருமான வரித் துறையிலிருந்து ஒரு சான்று இதழ்.
- கிரிமினல் வழக்குகள் ஏதும் இல்லை என்று பகுதியிலுள்ள காவல்துறை அதிகாரியிடமிருந்து, ஒரு சான்றிதழ்.
- ஒழுங்காக வேலை பார்க்கக் கூடியவர் என்பதற்கு வேலை பார்க்கும் நிறுவனத்திடமிருந்து சான்றிதழ்.
- குடும்பப் பொறுப்புகளை சரியாக கவனிக்கிறார் என்று, குடும்ப மூத்த உறுப்பினர்களிட மிருந்து சான்றிதழ்.

“வேட்டி, சட்டை,பேண்ட், புடவை ஒழுங்கு மட்டும் போதாது; மேற்குறிப்பிட்ட ‘சமூக ஒழுங்கு’ சான்றுகளுடன் வந்தால்தான், ஏழுமலையான் தரிசனம் கிடைக்கும்” என்று கண்டிப்பாக கோயில் நிர்வாகம் அறிவித்தால், ஆன்மிகமும் பக்தி ஒழுங்கும் மேலும் செழித்து கொழித்து வளருமே!

“கோயிலுக்கு பக்தர்களே வராமல் இருப்பதற்கு, இப்படி எல்லாம் ஆலோசனை கூறுகிறீர்களா?” என்று எதிர் கேள்வி போட வேண்டாம்.

இப்போதெல்லாம் திருப்பதி ஏழுமலையானுக்கு வெடிகுண்டு மிரட்டல் என்று அடிக்கடி செய்தி வந்து கொண்டிருக்கிறது.

எனவே தான், பகவானைப் பாதுகாப்பதற்காகவாவது, இத்தகைய ஒழுங்குகளை கடைபிடிக்கலாமே என்பதால்தான் இதை கூறுகிறோம். ஏற்பதும் ஏற்காததும் அவர்கள் பொறுப்பு. நமக்கு ஏன் வீண் வம்பு?

**– கோடங்குடி மாரிமுத்து**

### நன்கொடை

இளம்பிள்ளையில் நடந்த பயிற்சி முகாமில் பங்கேற்ற தோப்பூர் தோழர் எம்.கணேசன், கழக ஏட்டின் வளர்ச்சிக்கு ரூ.500 நன்கொடை வழங்கினார்.

கொளத்தூர் ஒன்றியம் பெரியார் விளையாட்டுக் கழகம் சார்பாக ஏப்.19, 20 நாட்களில் கூடைப் பந்து விளையாட்டுப் போட்டி கொளத்தூரில் நடைபெற்றது. போட்டியில் வெற்றிப் பெற்ற பெரியார் விளையாட்டுக் கழகம் அணியினர், பரிசுத் தொகையிலிருந்து கழக ஏட்டின் வளர்ச்சிக்காக ரூ.1000 நன்கொடை வழங்கினர்.

சேத்துப்பட்டு கழகத் தோழர் இராசேந்திரன் தமது மகளின் மணவிழா மகிழ்ச்சியாக கழக ஏட்டுக்கு ரூ.500 நன்கொடை வழங்கினார்.

ஏப்.30 அன்று மதுரையில் நடந்த கழகப் பயிற்சி முகாமில் பேராசிரியர் கோபால் ரூ.2000 நன்கொடை வழங்கினார்.

மனித உரிமை ஆணையத் துணைத் தலைவர் பொள்ளாச்சி கோட்டூரைச் சார்ந்த எம்.மலையப்பன் எனும் உதய நடராஜ், கழக ஏட்டுக்கு ரூ.1000 நன்கொடை வழங்கியுள்ளார்.

### பெரியார் தொழிலாளர் கழகத்தின் தொடர் நன்கொடை

மேட்டூர் அணை ஆர்.எஸ்.2, நிலக்கரி, ஏற்றுமதி இறக்குமதி நிறுவனத்தில் இயங்கி வரும் பெரியார் தொழிலாளர் கழகம் சார்பில் மாதம்தோறும் கழக ஏட்டுக்கு ரூ.500 நன்கொடை வழங்க தோழர்கள் முடிவு செய்து, மே மாதத் தவணையாக ரூ.500 நன்கொடையை புரட்சிப் பெரியார் முழக்கம் ஆசிரியர் விடுதலை இராசேந்திரனிடம் வழங்கினர்.

நன்கொடைகள் அனைத்தும் வரப்பெற்றோம். நன்றி. (ஆர்)

# பரப்புரைப் பயணம் தந்த வெற்றி

***சாதி – தீண்டாமை ஒழிப்பு பரப்புரைப் பயணத்தில் முழுமையாகப் பங்கேற்ற தோழர் சிற்பி ராசன், பயணம் பற்றிய தனது பார்வையை முன் வைக்கிறார்.***

அண்ணல் அம்பேத்கர் பிறந்த நாளான 14.4.2010 அன்ற தேனி மாவட்டம் போடியில் பெரியார் திராவிடர் கழக தொண்டர்கள் - சாதி, தீண்டாமைக்கு எதிரான பிரச்சாரப் பயணத்தை தொடங்கினார்கள்.

மக்களிடம் ஓட்டு வாங்குவதை மட்டுமே குறிக்கோளாக வைத்து, தேர்தல் சமயத்தில் போட்டி போட்டுக் கொண்டு இலவசங்களை அறிவித்து, மக்களை சிந்திக்க விடாமல் பதவிக்காக எதையும் செய்யும் அரசியல் கட்சிகளும், அவ்வப்போது மாறும் ஆட்சியாளர்களுக்கு "வீரர்", "வீராங்கனை" பட்டங்கள் வழங்கி, காலட்சேபம் நடத்தும் இயக்கங்களும், நாங்கள் திராவிடர் கிடையாது - தமிழர்கள் என்று சொல்லி, புதிதாக முளைத்து வரும் கட்சிகளும் இந்தப் பிரச்சாரத்தைச் செய்ய முடியாது!

அப்படிச் செய்தால் மக்களுக்குத் தெளிவு ஏற்படும் - அதனால் ஓட்டு போய்விடும். பிறகு நம் வாரிசுகள் சுகமாக வாழ முடியாது என்பது அவர்களுக்குத் தெரியும். இந்த ஒரு மாத பயணத் திட்டத்தை தோழர் தாமரைக் கண்ணன் வடிவமைத்துக் கொடுத்தார். ஒவ்வொரு மாவட்டத்திற்கும் பலமுறை நேரில் சென்று, அங்குள்ள பொறுப்பாளர்களை கலந்து ஆலோசித்து திட்டமிட்டு ஒவ்வொரு காரியமும் செய்யப்பட்டது.

தோழர் இராவணன் நடத்துனர் பணியையும், கோகுலக் கண்ணன், பால் பிரபாகரன், புதியவன் போன்ற பலர் பேச்சாளர்களாகவும், பாடகர்கள், இசைக் கலைஞர்கள், மூடநம்பிக்கை ஒழிப்பு நிகழ்ச்சியான 'மந்திரமில்லை தந்திரமே' என்ற நிகழ்ச்சி, உண்டியல் வசூல் செய்வோர் - துண்டறிக்கை வழங்குவோர் - புத்தக விற்பனையாளர் என எல்லோரும் ஒன்று சேர்ந்து தங்கள் குடும்ப நிகழ்ச்சியைப் போல நடத்தினர்.

தோழர் திருப்பூர் துரைசாமி, பிரச்சார வேனுக்கு தேவைப்பட்ட மைக், ஹாரன், ஜெனரேட்டர் முதலிய சாதனங்களை அளித்து உதவினார். வாய்ப்பு கிடைத்த போதெல்லாம் கலந்து கொண்டு பரப்புரையும் செய்தார்.

தோழர்கள் தங்கள் சொந்த வேலைகளை ஒதுக்கி வைத்துவிட்டு, வருமானத்தையும் இழந்து, சாதிக் கொடுமையிலிருந்து இந்த மக்களை மீட்டெடுக்க தங்கள் குடும்பத்தையும் துறந்து, ஒரு மாதம் களப்பணி செய்தனர். இவர்களில் பலர் **பெரியார் இறந்தபின் பிறந்தவர்கள்** என்பது குறிப்பிடத்தக்கது.

தனக்கு வழக்குகள் இல்லாத நாட்களில் எல்லாம் கழகத் தலைவர் கொளத்தூர் மணியும், போடி - கடலூர், புதுவையில் பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரனும், திருச்சியில் பொதுச்செயலாளர் கு.இராமகிருட்டிணனும் கலந்து கொண்டு சிறப்புரை யாற்றினர்.

27 நாட்கள் பகலில் தெருமுனைப் பிரச்சார மாகவும், மாலையில் பொதுக் கூட்டமாகவும் நடந்து, 10.5.2010 அன்று புதுவையில் நிறைவு பெற்றது. பயணத்தில் பங்கேற்ற தோழர்கள் ஒருவருக் கொருவர் எந்தக் குற்றத்தையும் தேடி கண்டுபிடிக்காமல் தங்கள் கடமைகளை சிறப்பாகச் செய்தனர்.

கடந்த முறை இதே பிரச்சாரத்திற்காக சென்ற போது, எங்களைத் தாக்க வந்த ஊர் மக்கள் இம்முறை எங்களை வரவேற்று வாழ்த்திப்பேசி விருந்தளித்து மகிழ்ந்ததைக் குறிப்பிட வேண்டும். காரணம், தந்தை பெரியாரின் கருத்துக்களை மக்களிடம் நேரடியாகச் சென்று மக்களோடு மக்களாகப் பேசி உணர்த்தும் போது அவர்கள் அதை சிந்தித்து ஏற்றுக் கொள் கிறார்கள்.

திருச்சியில் ஒரு முதியவர் ரூ.10 அன்பளிப்புக் கொடுத்து, "பெரியாரின் கொள்கைகளை உலகமய மாக்க வேண்டிய அவசியம் இல்லை! காரணம், அங்கு இதுபோன்ற சாதிக் கொடுமைகள் எதுவும் கிடையாது! இரட்டைக் குவளை, செருப்பு அணிந்து செல்லக்கூடாது - கிணற்றில் தண்ணீர் எடுக்கக் கூடாது - கடையில் அமர்ந்து முடிதிருத்த முடியாது. இத்தகைய அடிப்படை உரிமைகள் பறிக்கப்படு



வதெல்லாம் இந்த 'பாருக்குள்ளே நல்ல நாட்டில்' தான். ஆகவே நீங்கள் செய்யும் பணிதான் தந்தை பெரியார், தனது இறுதிக் காலம் வரை செய்தார்கள்" என்று பாராட்டி மகிழ்ந்தார்.

ஆம். வெளிநாடுகளில் கடவுள் மட்டுமே உண்டு. கடவுளால் நன்மையோ தீமையோ ஏற்படப் போவதில்லை. இங்கு தான் கயவர்கள் கடவுளின் பெயரால் சாதிகளை கற்பித்து, மனிதனை விலங்கினும் கீழாக மதிக் கிறார்கள். எனவே சாதிக் கொடுமைகள் உள்ள கிராமங்களுக்குச் சென்று அங்கு வசிக்கும் மேல்தட்டு மக்களிடம் இளைஞர்களிடம் நிலைமையை எடுத்துச் சொல்வது தான் உண்மையான பெரியாரின் பணியாக இருக்க முடியும்.

தொடக்க நாள் நிகழ்ச்சியில், போடியில் கழகப் பொதுச்செயலாளர் விடுதலை இராசேந்திரன், பயணத்திற்கான நூல்களை வெளியிட, திருப்பூர் துரைசாமி அவற்றைப் பெற்றுக் கொண்டார். மேலும், பொதுச்செயலாளர் தனது சிறப்புரையில், "ஏன் இந்தப் பயணம்" என்பது பற்றி விரிந்த ஒரு சொற்பொழிவு நிகழ்த்தினார்.

பெரியார் பிறந்த மண்ணில் இன்னும் எப்படி யெல்லாம் சாதி, தீண்டாமை தலைவிரித்தாடுகிறது - இதை போக்குவதற்கு இளைஞர்கள் ஒத்துழைப்பு தர வேண்டும் என்று கேட்டுக் கொண்டார். பெரும் திரளான மக்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

22.4.2010 அன்று மாலை பழநியில் நடந்த பொதுக் கூட்டத்தில், கொங்கு இளைஞர் பேரவைத் தலைவர் உ.தனியரசு, நூற்றுக்கணக்கான இளைஞர்களுடன் கலந்து கொண்டு தீண்டாமைக்கு எதிராக நீண்ட தொரு சிறப்புரையாற்றினார்.

தந்தை பெரியாரின் கொள்கைகளை விளக்கி, பார்ப் பனர்கள் தாம் கடவுளைக் கற்பித்துக் காத்து வரு கிறார்கள் - மேல் சாதிக்காரர்கள் உழைக்காமல் வாழ - உழைக்கும் மக்களைச் சுரண்டி சுகபோகமாக வாழ் வதற்காகவே போன ஜென்மம் - மறுபிறவி - சொர்க்கம் - நரகம் எல்லாம் உண்டாக்கி உழைக்கும் மக்களாகிய நம்மை ஏற்றுக் கொள்ளச் செய்து, அடுத்த பிறவியில் நீங்கள் நலமாக வாழ்வீர்கள் என்று சொல்லி - இந்தப் பிறவியில் பார்ப்பனர்கள் சுகமாக வாழ்ந்து வரு கிறார்கள் என்ற யதார்த்த உண்மையை விளக்கினார்.

சாதியும், மதமும், கடவுளும் இல்லாத நாட்டில் தான் மனிதன் - மனிதனாகவும், அறிவுள்ளவனாகவும், அமைதியாகவும் வாழ முடியும் என்பதனை நெற்றியில் விபூதி, குங்குமம் இட்டுக் கொண்டு, கடவுள் நம்பிக்கையுடன் அமர்ந்திருந்த நூற்றுக்கணக்கான அவரது இளைஞர்கள் முன்னிலையில் பேசியபோது, அந்த பக்தியுள்ள இளைஞர்கள், தங்கள் தலைவரது கருத்தினை வரவேற்று, கைதட்டி தங்கள் ஆதரவை வெளிப்படுத்தினர்.

அதைப் பார்த்த எங்களுக்கு 8 நாட்கள் வெயிலில் அலைந்த களைப்பு நீங்கியது. மேலும் தனியரசு - "பெரியார் திராவிடர் கழகம் எடுக்கும் அனைத்துப் போராட்டங்களுக்கும் ஆதரவு தருவோம்" என்று பேசியபோது, நாங்கள் மிகவும் உற்சாகமடைந்தோம். இது ஒரு நல்ல பயணம் - மக்களுக்காக இதைச் செய்ய வேண்டும் என்ற உறுதி ஏற்பட்டது.

சாதிக்காக ஒரு இயக்கத்தைத் தொடங்கி, அதே சாதியைச் சேர்ந்த இளைஞர்களைத் திரட்டி, மேடை முன்பு அமரச் செய்து, அந்த இளைஞர்களை சாதியின் பெயரால் நடத்தப்படும் கொடுமைகளை உணரச் செய்த பெருமை தனியரசு அவர்ளையே சாரும்.

அவரது உரைக்குப் பின்னால், கழகத் தலைவர் பேசுகையில் - "இன்றும் தலித் மக்கள் அதே பழைய கொடுமைகளை அனுபவித்து வருகிறார்கள். இது நியாயமாகுமா? உங்களிடம் வேண்டிக் கேட்டுக் கொள்வது என்னவெனில் நடந்தது கனவாக இருக்கட்டும். இனிமேலாவது நாம் எல்லோரையும் சமமாக மதிப்போம் - நாம் வழிவிட்டால்தான் பாதிக்கப்பட்ட மக்கள் மேலே வர முடியும். நம் முன்னோர்கள் படிக்கக் கூடாது என்று தடுக்கப் பட்டவர்கள். அவர்களுக்கு கல்வி அறிவு தரப்பட வில்லை. ஆனால், நாம் இன்று படித்திருக்கிறோம். ஆகவே இளைஞர்களே உங்கள் கையில்தான் சாவி இருக்கிறது. திறந்து விடுங்கள். மனிதனாக வாழ்வோம் என்று பேசியபோது, பார்வையாளர்கள் கைதட்டி பாராட்டை தெரிவித்தனர்.

தோழர் தனியரசை சந்தித்து அவரை பேச அழைத்து வரும் ஏற்பாட்டைச் செய்தவர் திருப்பூர் இராவணன். பல ஊர்களில் மற்ற இயக்கங்களைச் சார்ந்த பெரியார் கொள்கையாளர்கள், நாங்கள் தங்குவதற்கு இடவசதியும், உணவும் ஏற்பாடு செய்து கொடுத்தனர்.

அவர்கள் கட்சியைப் பற்றிக் கவலைப்படாமல், பயணத்தின் நோக்கத்தையும், அதன் தேவையையும் உணர்ந்து ஆதரவினை வழங்கினர். பெரியார் திராவிடர் கழகத் தலைவர், பொதுச்செயலாளர்கள் மற்றும் பிரச்சாரத்தில் கலந்து கொண்ட மற்ற தோழர்களின் உழைப்பையும் அங்கீகரித்து, இந்த ஆதரவினை வழங்க முன் வந்தனர்.

தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட இளைஞர்களை அய்.ஏ.எஸ்., அய்.பி.எஸ். தேர்வுகள் எழுத பயிற்சியளித்து, வெற்றியையும் பெற்றுத் தரும் சீரிய பணியைச் செய்து வரும் ஒரு சமூக ஆர்வலர், பிரச்சார வேன் அருகில் வந்து, ரூ.2000 நன்கொடையளித்து, தன் பெயரைக் குறிப்பிட வேண்டாமென கேட்டுக் கொண்டார்.

திருச்சி பூவாளூரில் நடைபெற்ற பொதுக் கூட்டத் தில் கழகப் பொதுச்செயலாளர் கு.இராமகிருட் டிணன் பேசுகையில் - "நாம் தேனீர் அருந்துவதற்காக, தங்கள் உயிருக்கே ஆபத்தான மலைச் சரிவுகளில் தலித் மக்கள் அட்டைப் பூச்சிகளின் இன்னல்களுக்கிடையே தேயிலைகளைப் பறிக்கும் கூலித் தொழிலாளியாக வேலை செய்து வருகிறார்கள்.

அவர்களுக்கு தேநீர் கடைகளில் இரட்டை தம்ளர் வைப்பது, கடையில் அமர்ந்து தேனீர் அருந்த மறுப்பது, முடிதிருத்தும் நிலையங்களிலும் அனுமதி மறுப்பது - நியாயமாகுமா? இது ஒரு மனிதன் இன்னொரு மனிதனுக்குச் செய்யும் கொடுமை

(4 ஆம் பக்கம்)

## ஜூன் 12 முதல் – 22 ஆம் தேதி வரை....
## 2 ஆம் கட்டப் பயணம் தொடங்குகிறது

சென்னை மாவட்டக் கழக சார்பில் சாதி - தீண்டாமை ஒழிப்பு 2 ஆம் கட்ட பரப்புரைப் பயணம் ஜூன் 12 ஆம் தேதி, கூடுவாஞ்சேரியில் தொடங்குகிறது. விழுப்புரம், திருவண்ணாமலை, வேலூர் மாவட்டங்களில் 22 ஆம் தேதி வரை பரப்புரை நடைபெறுகிறது. காஞ்சியில் பரப்புரை பயணம் நிறைவடைகிறது. 20 தோழர்களுடன் சிற்பிராசன், பாடகர்கள் தியாகு, நாத்திகன், கீர்த்தி பயணத்தில் பங்கேற்கிறார்கள். தோழர் அன்பு தனசேகர் பயணத்தை ஒருங்கிணைக்கிறார். தொடக்க நிகழ்ச்சியிலும் நிறைவு நிகழ்ச்சியிலும் கழகத் தலைவர், பொதுச் செயலாளர்கள் பங்கேற்கிறார்கள்.

# “மே 17, இயக்கம்” அறைகூவல் ‘ஏர்டெல்’ சேவைகளை புறக்கணிப்போம்!

இனப்படுகொலையை நடத்தி முடித்துவிட்டு, போர்க் குற்றவாளியாக நிற்கும் இலங்கை அதிபர் ராபக்சேயைக் காப்பாற்றுவதற்கு, இந்தியாவின் தொழில் அதிபர்கள் - அங்கே, தொழில் தொடங்க, தயாராகி வருகிறார்கள். இந்திய தொழில் வர்த்தக கூட்டமைப்பு என்ற அமைப்பு, கொழும்பு சென்று, பேச்சு வார்த்தை நடத்தியுள்ளது.

இதற்கு கடும் எதிர்ப்பு தெரிவித்துள்ள மே 17 இயக்கம் - இந்தக் கூட்டமைப்பின் தலைவராக உள்ளவர் நடத்தும் ‘ஏர் டெல்’ அலைபேசி சேவையைப் புறக்கணிக்க வேண்டுகோள் விடுத்துள்ளது. இதுபற்றி, மே 17 இயக்க சார்பில் தோழர் திருமுருகன், ஊடகவியலாளர் அய்யனார் ஆகியோர் செய்தியாளர்களை சந்தித்தனர். அப்போது கூறியதாவது:

ஃபிக்கி என்று அழைக்கப்படும் இந்திய தொழில் அதிபர்கள் கூட்டமைப்பின் தலைவராக உள்ளவர் ராஜன் பார்த்தி மிட்டல். இவருடைய நிறுவனம்தான் ஏர்டெல் அலைபேசி. இந்த ஏர்டெல் நிறுவனம், இன வெறி சிறிலங்கா அரசுடன் கைகோர்த்து தனது வணிக நலன்களை மேம்படுத்திக் கொண்டு வருகிறது. 2008 ஆம் ஆண்டு ஜனவரியில் இலங்கையின் ஒரு பகுதியில், கொழும்புவிலிருந்து புத்தளம் வரை, செல்பேசி சேவையை நடத்த அனுமதி பெற்ற ஏர்டெல், தற்போது 12 இலட்சம் வாடிக்கையாளர்களைக் கொண்டுள்ளது.

இந்தியாவில் முதன்மையான செல்பேசி நிறுவனங்களில் ஒன்றாக இயங்கிவரும் ஏர்டெல்லிற்கு 13 கோடி வாடிக்கையாளர்கள் உள்ளனர். இவர்களில் 1.25 கோடி வாடிக்கையாளர்கள் தமிழ்நாட்டில் உள்ளனர். தமிழனைக் கொல்லும் அரசுடன் உறவு வைத்துக் கொண்டு, தமிழனிடமே வணிகமும் செய்யும் மனிதாபிமானமற்ற ஏர்டெல் நிறுவனம், ஈழத் தமிழினத்தை அழித்த சிறிலங்காவின் இனப் படுகொலைப் போரில் அந்நாட்டிற்கு உதவியதாகவும் குற்றச்சாட்டு உள்ளது. அந்த உதவிக்கு கைமாறாகத்தான் அங்கு செல்பேசி சேவை நடத்த அனுமதி பெற்றதென்றும் கூறுகின்றனர்.

ஆக, ஒரு தொழில் நிறுவனத்திற்கு இருக்க வேண்டிய மனிதாபிமான பார்வை சற்றும் இல்லாமல், வெறும் இலாப நோக்கை மட்டுமே குறிக்கோளாகக் கொண்டு செயல்படுவது மட்டுமின்றி, தமிழின எதிர்ப்பில் ஆழமாக வேரூன்றிய நிறுவனமாக ஏர்டெல் செயல்பட்டு வருகிறது. அந்நிறுவனத்தின் தலைவர் “ஃபிக்கி”யின் தலைவராக இருந்து கொண்டு சிறிலங்கா அரசின் இனப் படுகொலை குற்றத்தை மறைக்கும் முயற்சியில் ஈடுபட்டு வருகிறார்.

எனவேதான், நம்மினத்தை அழித்த இனவெறி சிறிலங்க அரசை காப்பாற்றும் நடவடிக்கையில் ஈடுபடும் ஃபிக்கியை கண்டித்தும், ஒரு நிறுவனத்திற்கு இருக்க வேண்டிய சமூக பொறுப்பை தட்டிக் கழித்து செயலாற்றி வரும் ஏர்டெல் செல் பேசி சேவையை தமிழர்களான நாம் புறக்கணிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறோம்.

பேட்டியின்போது கழகப்பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன், தமிழ்த் தேசிய விடுதலை இயக்க பொதுச் செயலாளர் தியாகு ஆகியோர் உடனிருந்தனர்.

## சேத்துப்பட்டு இராசேந்திரன் இல்ல மணவிழா

சென்னை சேத்துப்பட்டு கழகத் தோழர் இராசேந்திரன்-மோ.அலமேலு இணையரின் இளைய மகள் மோ. லட்சுமி, பி.ஈ., தஞ்சை போ. கருப்பையன் - க. மாலதி இணையரின் இளைய மகன் க.சரவணன், பி.ஈ. ஆகியோர் வாழ்க்கை ஒப்பந்த நிகழ்வு 21.6.2010 திங்கள் காலை 9.30 மணியளவில் பட்டுக்கோட்டை வட்டம் துறவிக் காட்டிலுள்ள ஏ.கே.என். திருமண மண்டபத் தில் நிகழ இருக்கிறது. முன்னாள் கிராம நிர்வாக அலுவலர் திரு.க. பால சுப்பிர மணியன் தலைமையில், கழகத் துணைத் தலைவர் ஆனூர் ஜெகதீசன் முன்னிலையில் கழகத் தலைவர் கொளத்தூர் மணி வாழ்த்துரை வழங்கு கிறார்.

## விடுதலை மு. இராசா– ச. சரிதா வாழ்க்கை ஒப்பந்தம்

கழகத் தோழர் விடுதலை மு. இராசா (மு.ப. முத்து -அஞ்சலை இளைய மகள்) - அ. சரிதா (வி.அன்பு - ஏகவல்லி மூத்த மகள்) வாழ்க்கை துணை நல ஏற்பு விழா 17.5.2010 திங்கள் மாலை 6 மணியளவில் போரூர் ஜி.ஆர்.டி. திருமண மாளிகையில் கழகத் துணைத் தலைவர் ஆனூர் ஜெகதீசன் தலைமையில் சிறப்புடன் நடைபெற்றது. கழகத் தலைவர் கொளத்தூர் மணி மற்றும் தோழர்கள் வாழ்த்துரை வழங்கினர். மணமக்கள் சார்பாக கழக ஏட்டுக்கு ரூ.500 நன்கொடை வழங்கப்பட்டது.

“புரட்சிப் பெரியார் முழக்கம்”
**ஆண்டுக்கட்டணம் ரூ.150/-**
தொடர்புக்கு: ஆசிரியர்,
29, பத்திரிகையாளர் குடியிருப்பு,
திருவள்ளுவர் நகர்,
திருவான்மியூர், சென்னை-41.
**தொடர்புக்கு புதிய எண்:**
✆ 90030 87605

(3 ஆம் பக்கத் தொடர்ச்சி)

யல்லவா? நமக்காகவே வயல்களிலும், தோட்டங் களிலும் கூலி வேலை செய்து, சுகாதாரப் பணிகளைச் செய்து, நமக்கு வாழ்க்கைக்கு அத்தியாவசியமான பணிகளைச் செய்யும் மக்களை புறந்தள்ளுவது எந்த வகையில் நியாயம்” என பேசியபோது, கூட்டத் தினரை சிந்திக்க வைத்தது

மேலும், அவர் பேசுகையில், “இன்னும் பல ஊர்களில் செல்போன் பேசவும், காசு போட்டுப் பேசும் தொலைபேசி மூலமும் பேசக்கூட அனுமதி மறுக்கப்படு கிறார்கள். இதுபோல் நாம் செய்வது முறையா? கடவுள் என்று ஒருவர் இருந்தால் இந்தக் கொடுமைகளை பார்த்துக் கொண்டிருப்பாரா? அப்படி வேடிக்கைப் பார்ப்பவன் சர்வ தயாபரனாக இருக்க முடியுமா?” என்றெல்லாம் விளக்கி, மக்களின் மனதில் பதியச் செய்தார்.

திருச்சி சத்திரம் பேருந்து நிலையம் அருகே நடைபெற்ற பொதுக் கூட்டத்தில், முத்தரையர் சங்க பொறுப்பாளரும், முக்குலத்தோர் சங்க பொறுப்பாளர்களும் கலந்து கொண்டு, பார்ப்பன கொடுமை களையும், தந்தை பெரியாரின் செயலாற்றலையும் விவாதித்து நிகழ்ச்சியை சிறப்பித்தனர்.

கடலூரில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில், திருமாவளவன், வன்னியர் சங்கம் செய்து வரும் தீண்டாமைக்கு எதிரான பணிகளை விரிவாக எடுத்துரைத்தார். புதுவை கழகத் தலைவர் பொறுப் பாளர் லோகு அய்யப்பன், ஏற்பாடு செய்திருந்த பொதுக் கூட்டத்தில் நிகழ்ச்சி இனிதே நிறைவேறியது.

இந்த 28 நாட்கள் பயணத்தில் பல தரப்பு மக்களையும் சந்தித்து, தந்தை பெரியாரின் கொள்கை கடவுள் மறுப்பு மட்டும் அல்ல! சாதி தீண்டாமை ஒழிப்பே முதன்மையானது என்பதை தெளிவு படுத்தியதில் மகிழ்ச்சியானோம். எங்களை வரவேற்று தங்கள் ஆதரவுகளைத் தெரிவித்த அனைத்து “நல்ல உள்ளங்களுக்கும்” நன்றியைத் தெரிவித்து....

அடுத்தப் பயணம் மேற்கொள்ள ஆவலுடன் நாள்களை எண்ணிக் கொண்டிருக்கிறோம். ●

## பெரியார் கொள்கை புதைக் குழிக்குப் போகிறதா?

*கேள்வி:* ஏராளமான கோயில்கள் தோன்றிக் கொண்டே இருக்கிறதே, பெரியாரின் கடவுள் மறுப்புக் கொள்கைகள் புதைகுழிக்குள் போய்விட்டதா?

*அரசு பதில் :* புதிதாய்த் தோன்றுவது கோயில்கள் அல்ல. உண்டியல்கள். பெரியாரின் கொள்கைகள் புதைகுழியில் போவதற்கானவை அல்ல. புதைகுழியில் புதைய இருப்பவர்களைக் காப்பாற்றுவதற்காக.

**– ‘குமுதம்’ (ஜூன் 9) இதழில் அரசு பதில்.**

### ‘ஏர்டெல்’ நிறுவனத்தைக் கண்டித்து ஆர்ப்பாட்டம்

## இனப் படுகொலைக்கு துணை போகாதே!

‘ஏர்டெல்’ நிறுவனத்துக்கு எதிராக கண்டன ஆர்ப்பாட்டம் ஜூன் 11 மாலை 4 மணிக்கு சென்னை பனகல் மாளிகை அருகே நடைபெறுகிறது. “மே.17 இயக்கம்” நடத்தும் ஆர்ப்பாட்டத்தில் பெரியார் திராவிடர் கழகம் பங்கேற்கிறது.

அனைவரும் வாரீர்!

## பாருக்குள்ளே நல்ல நாடு – நம் பாரத நாடு

ஆடுவோமே பள்ளு பாடுவோமே!
ஆனந்த சுதந்திரம் அடைந்து விட்டோமென்று - ஆடுவோமே....

செல்போனும் பேசத் தடைவந்ததே தலித்துக்கள்
செல்போனும் பேச....
நாட்டில் நயவஞ்சகக்காரருக்கு வாழ்வு வந்ததே... செல்...
முடிவெட்டப் போனாலும் சாதிக்கொடுமை...
முடிவெட்டப் போனாலும்....
கோவிலுக்குள் போனாலும் அதேதான் தொல்லை ஆடுவோமே....

நாமிருக்கும் நாடு மார்வாடிக்கானதே.... நாமிருக்கும் நாடு....
இதில் நமக்கே பெருமையாம் என்றுமறிந்தோம்
பூமியில்.... பார்ப்பன....
பூணூலுக்கே அடிமை செய்து வாழ்வோம்
வந்தே மாதரம்!


**– சிற்பி இராசன்**

(“ஆடுவோமே – பள்ளு பாடுவோமே” என்று பார்ப்பன பாரதி எழுதிய பாடலின் சந்தத்தில் எழுதப்பட்டது)

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted on: 10th June 2010

பெறுநர்

OWNER & PUBLISHER : ANOOR JAGADEESAN, PUBLISHED AT 15, MYLAPPAR STREET, AYANAVARAM, CHENNAI - 600 023. PRINTED BY : S. THEESMAS AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014. EDITOR : VIDUTHALAI RAJENDRAN.




புரட்சிப்

# பெரியார் முழக்கம்

பெரியார் திராவிடர் கழக வார ஏடு

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | www.puratchiperiyarmuzhakkam.com | திருவள்ளுவர் ஆண்டு 2041 | ஜூன் 17, 2010 | புரட்சி 9 | முழக்கம் 23 | விலை: ரூ.2.50


## தகர்ந்தது தடை; கிழிந்தது துரோகிகளின் முகத்திரை

# ‘குடிஅரசு’ தொகுதிகளை கழகம் வெளியிட்டது



துரோகம் - தடைகளைக் கடந்து பெரியார் திராவிடர் கழகம் பெரியார் எழுத்து பேச்சு களடங்கிய 27 ‘குடி அரசு’ தொகுப்புகளை 11.6.2010 அன்று காலை 11 மணியளவில் சென்னை பத்திரிகையாளர் சங்கத்தில் வெளியிட்டது. ஜூன் 9 ஆம் தேதி பகல் 2 மணியளவில் பெரியார் திராவிடர் கழகம் குடிஅரசு தொகுப்பை வெளியிட தடை இல்லை என்று உயர்நீதிமன்ற மேல் அமர்வு அவை தீர்ப்பு வழங்கியவுடன், ஒரே நாள் இடைவெளியில் வெளியீட்டு நிகழ்ச்சிகளுக்கு ஏற்பாடுகள் செய்யப் பட்டன. அன்று மழை தூறிக் கொண்டிருந்தாலும் அரங்கு முழுதும் பத்திரிகையாளர்களும் பெரியாரியல்வாதிகளும் தோழர்களும் ஏராளமாக திரண்டிருந்தனர்.

பெரியார் திராவிடர் கழகத் தலைவர் கொளத்தூர் மணி தலைமை ஏற்றார். வழக்கறிஞர் துரைசாமி வரவேற்புரையாற்றினார். ‘ரிவோல்ட்’ தொகுப்புப் பணியை எஸ்.வி. இராஜதுரை அவர்களுடன் இணைந்து செய்து முடித்த தோழர் வ. கீதா, கழகத் துணைத் தலைவர் ஆனூர் ஜெகதீசன், பொதுச் செயலாளர்கள் விடுதலை இராசேந்திரன், கோவை இராமகிருட்டிணன், வழக்கறிஞர் கிளாடிஸ் டேனியல் ஆகியோர் உரையாற்றினர். தொடர்ந்து கழக மூத்த தலைவர் திருவாரூர் தங்கராசு வெளியிட இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மத்திய கட்டுப் பாட்டுக் குழு தலைவர் ஆர். நல்லக்கண்ணு முதல் இதழைப் பெற்றுக் கொண்டார். அப்போது அரங்கத் துக்கு வெளியே பட்டாசுகள் வெடிக்கப்பட்டன.

தோழர் நல்லக்கண்ணு தமது உரையில், நாட்டில் சாதிக் கலவரங்கள் நடப்பதையும், வடநாட்டில் ஒரே கோத்திரத்துக்குள் திருமணம் செய்தால் கொலை செய்யப்படுவதையும் அதேபோல் தமிழ் நாட்டில், சாதி மறுப்பு கலப்பு திருமணம் செய்தால் கொலை செய்யப்படுவதையும் சுட்டிக்காட்டி, பெரியாரின் கருத்துகள் இன்னும் நீண்ட காலத்துக்கு இங்கே தேவைப்படுகிறது. அவரது கருத்துகள் பரப்பப்பட வேண்டும் என்று வலியுறுத்தினார். நடிகவேள் எம்.ஆர். ராதா எதிர்நீச்சல் போட்டு, நாடகங்களின் வழியாக சமூக மாற்றத்துக்கான கருத்துகளைப் பரப்பியதை நினைவு கூர்ந்த தோழர் நல்லக்கண்ணு, நடிகவேள் 3500 முறை அரங்கேற்றிய ‘ரத்தக் கண்ணீர்’ நாடகத்துக்கு கதை வசனம் எழுதியவர் திருவாரூர் தங்கராசுதான் என்பதை இளைய சமு தாயத்துக்கு தெரிவிக்க விரும்புவதாகக் குறிப்பிட்டார்.

தூக்கு மேடை ஏறிய மாவீரன் பகத்சிங் எழுதிய ‘நான் ஏன் நாத்திகன்?’ என்ற நூலை முதன்முதலாக தமிழில் வெளியிட்டது பெரியாரின் சுயமரியாதை இயக்கம்தான். தமிழில் மொழியாக்கியவர் தோழர் ஜீவா தான். அதற்காக அவர் கைது செய்யப்பட்டார். சோவியத் கம்யூனிஸ்ட் கட்சி அறிக்கையையும், தமிழில் பெரியார்தான் முதலில் வெளியிட்டார் என்ற வரலாற்று நிகழ்வுகளை தோழர் நல்லக்கண்ணு நினைவுகூர்ந்தார். பெரியார், சிங்காரவேலர், திரு.வி.க., இராஜாஜி போன்ற தலைவர்கள் பொது வாழ்க்கையில் இருந்த காலத்தில் இருந்த அரசியல் நாகரிகம் இப்போது மங்கிப் போய்விட்டது என்று வேதனையுடன் குறிப்பிட்டார்.

### கழகம் வெளியிட்ட ‘குடிஅரசு’ 27 தொகுதிகளையும் கணினியில் இலவசமாக பதிவிறக்கம் செய்யலாம்

**உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பு வந்தவுடன் கழகம் வெளியிடும் ‘குடிஅரசு’ 27 தொகுதிகளும் கணினியில் ஏற்றப்பட்டுள்ளது. ‘பிடிஎஃப்’ முறையில் கணினியில் பதிவாக்கப்பட்டுள்ள 27 தொகுதிகளையும் ‘periyardk.org’ என்ற இணையதளத்துக்குச் சென்று படிக்கலாம். இலவசமாக பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். periyardk@gmail.com என்ற முகவரிக்கு கடிதம் எழுதுவோருக்கு இலவசமாக இணைய தளத்தின் மூலம் கிடைக்க ஏற்பாடு செய்யப்படும்.**

**– பெரியார் திராவிடர் கழகம்**

திருவாரூர் தங்கராசு பேசுகையில் - ஏசு, நபிகள், புத்தர், காந்தி என்று உலகப் புகழ் பெற்ற தலைவர்கள் எல்லாம் தங்களது கருத்துகளையே மக்களிடம் கூறினார்கள். ஆனால், பெரியார் ஒருவர் மட்டும் தான், “நான் கூறுவதை அப்படியே ஏற்றுக் கொள்ளாதீர்கள்; உங்கள் அறிவைக் கொண்டு சிந்தித்து சரி என்று தோன்றினால் ஏற்றுக் கொள்ளுங்கள்” என்று கூறிய தலைவர். மார்க்ஸ், ஏங்கல்ஸ், லெனின் சிந்தனைகளுக்கு எவரும் பதிப்புரிமை கோரவில்லை. அவர்களுக்கு வாரிசுகள் இல்லை போலும் என்று குறிப்பிட்ட அவர், இராமாயணம், மகாபாரதம், பகவத் கீதை, குரான், பைபிள் என்று மதத்தைப் பரப்பும் பழமை கருத்துகள் பதிப்புரிமைத் தடைகள் இன்றி மீண்டும் மீண்டும் மக்களிடையே பரப்பப்படுகிறது. ஆனால், பெரியார் கருத்துகளுக்கு மட்டும் பதிப்புரிமை கேட்டு, தடை வாங்குகிறார்கள். பெரியாரின் வாரிசாக உரிமை கோருவதற்கு கி. வீரமணிக்கு எந்த தகுதியும் கிடையாது. பெரியார் இயக்கத்தை தனது சொந்த நலனுக்குப் பயன்படுத்தி வளர்ந்தவர் என்று கூறினார்.

கழகம் வெளியிட்டுள்ள மற்றொரு தொகுப்பான ‘ரிவோல்ட்’ ஆங்கிலத் தொகுப்பை தொகுத்தவர்கள் தோழர்கள் வ. கீதா, எஸ்.வி. இராஜதுரை ஆகியோர் ஆவர்.

‘ரிவோல்ட்’ ஏட்டின் புரட்சிகர உள்ளடக்கங்கள் பற்றியும், அதில் பெண்கள் முற்போக்கு சிந்தனை யாளர்கள், உலகப் பகுத்தறிவாளர்கள் எழுதிய கருத்துக்கள் இடம் பெற்றுள்ளதையும், சுட்டிக் காட்டி வ.கீதா உரையாற்றினார்.

பொதுச்செயலாளர் கோவை இராம கிருட்டிணன் தனது உரையில் - “பெரியார் கருத்துகளை வேகமாகப் பரப்பிடும் தேவை உள்ளபோது, அதைத் தடுக்க முயல்வோர் எப்படி பெரியாரியல்வாதியாக இருக்க முடியும் என்று கேட்டார். ஊரில் மூலைக்கு மூலை பிள்ளையார் கோயில்கள் இருக்கின்றன. அதற்கு தலைமை பிள்ளையார் கோயில் என்று ஏதாவது ஒன்று

(6 ஆம் பக்கம்)

### வீரமணி உரிமை கோர அவரிடம் எந்த சான்றும் இல்லை

# பெரியார் படைப்புகளுக்கு எந்த பதிப்புரிமையும் கிடையாது

## உயர்நீதிமன்றத்தின் தெளிவான தீர்ப்பு

'குடிஅரசு' உள்ளிட்ட பெரியார் ஏடுகளுக்கும் பெரியார் படைப்புகளுக்கும் கி.வீரமணி பதிப்புரிமை கோரும் உரிமை கிடையாது. அதற்கான ஆவணங்கள் அவரிடம் ஏதுமில்லை. பெரியார் நூல்கள் மக்கள் அரங்கிற்கு வந்துவிட்டது என்று நீதிபதிகள் தீர்ப்பு வழங்கியுள்ளனர்.

பெரியார் திராவிடர் கழகம் 'குடிஅரசு' தொகுப்புகளை வெளியிடுவதற்கு எதிராக, பெரியார் சுயமரியாதை பிரச்சார நிறுவனத்தின் செயலாளர் கி.வீரமணி, உயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்திருந்தார். பெரியார் நூலை வெளியிடும் பதிப்புரிமை தமக்கு மட்டுமே உண்டு என்றும், பெரியார் திராவிடர் கழகம் வெளியிடுவது தமது பதிப்புரிமையில் குறுக்கிடுவதாகும் என்றும் கூறி, பதிப்புரிமையில் குறிக்கிட்டதால் ரூ.15 லட்சம் தமக்கு இழப்பீடு தொகை வழங்க வேண்டும் என்றும் வழக்கில் கோரி இருந்தார்.

பெரியார் திராவிடர் கழகம் 2008 செப்டம்பர் 17 ஆம் தேதி குடிஅரசு தொகுப்புகளை வெளியிடத் திட்டமிட்டிருந்ததற்கு இடைக்காலத் தடை கோரியிருந்தார். வழக்கை விசாரணைக்கு ஏற்ற நீதிபதி, அப்போதுள்ள நிலையே நீடிக்க (Status Quo) உத்தரவிட்டார். தடைகோரிய மனு உயர்நீதிமன்ற நீதிபதி சந்துரு முன் விசாரணைக்கு வந்தது. நீதிபதி சந்துரு, குடிஅரசு தொகுப்புகளை வெளியிட இடைக்காலத் தடை விதிக்க முடியாது என்றும், மனுதாரர் (வீரமணி) தமக்கு பதிப்புரிமை உண்டு என்பதை நிரூபிக்கவில்லை என்றும் கூறி 27.7.2009 இல் தீர்ப்பளித்தார். இத் தீர்ப்பை எதிர்த்து கி.வீரமணி, உயர்நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்தார். நீதிபதிகள் முன் வழக்கு விசாரணைக்கு வந்தது. இரண்டு நீதிபதிகள் விசாரணையை தங்களால் நடத்த இயலாது என்று கூறி விட்டனர்.

வழக்கு முடிந்து விடாமல் இழுத்தடிக்கப்பட வேண்டும் என்பதிலேயே வீரமணியின் தரப்பினர் ஆர்வமாக இருந்தனர். மீண்டும் மீண்டும் வழக்கைத் தள்ளி வைக்கும் கோரிக்கையையே வீரமணி வழக்கறிஞர்கள் முன் வைத்தனர். இறுதியாக இந்த வழக்கை மேல்முறையீட்டு அமர்வு நீதிபதிகள் எப்.எம். இப்ராகிம் கலிஃபுல்லா, என். கிருபாகரன் ஆகியோர் விசாரணைக்கு தலைமை நீதிபதியே உத்தரவிட்டார். இந்த அமர்வு முன் முழுமயான விசாரணை நடந்தது. விசாரணை முடிந்து நீதிபதிகள் தீர்ப்பை தள்ளி வைத்தப் பிறகு, கோடைகால விடுமுறை வந்து விட்டது.

விடுமுறைக்குப் பிறகு கடந்த 9 ஆம் தேதி நீதிபதிகள், தங்கள் தீர்ப்புகளை வழங்கினர். நீதிபதிகள் அறையில் வழக்கறிஞர்கள் முன்பு நீதிபதிகள் தீர்ப்பினை அறிவித்தனர். நாடு முழுதும் ஆவலுடன் எதிர்பார்க்கப்பட்ட இந்தத் தீர்ப்பு பதிப்புரிமை வழக்கில் முக்கியத்துவம் மிக்கதாகக் கருதப்படுகிறது. கழக சார்பில் வழக்கறிஞர் எஸ். துரைசாமி, இளங் கோவன், மூத்த வழக்கறிஞர் ஆர். தியாகராஜன், கிளேடிஸ் டேனியல் ஆகியோர் வாதிட்டனர். நீதிபதிகள் - வீரமணி தரப்பில் முன் வைக்கப்பட்ட வாதங்கள் எல்லாவற்றுக்கும் விரிவான, சட்டப் பூர்வமான பதில்களை முன் வைத்து மனுதாரரின் மனுவை தள்ளுபடி செய்தனர். வரலாற்று சிறப்புமிக்க தீர்ப்பின் முக்கிய பகுதிகள் :

'குடிஅரசு' தொகுப்புகளை பெரியார் திராவிடர் கழகம் வெளியிடுவதற்கு தடை கோரி, மனுதாரர் (கி.வீரமணியும்) தொடர்ந்த இந்த மேல்முறையீட்டு மனு, தம்மையும் இணைத்துக் கொள்ள தஞ்சை இரத்தினகிரி தாக்கல் செய்த மனு இரண்டையும் சேர்த்தே, இந்த தீர்ப்பு வழங்கப்படுகிறது. மனுதாரர்கள், எதிர் மனுதாரர்கள் சார்பில் வாதிட்ட வழக்கறிஞர்களின் கருத்துகளை இந்த நீதிமன்றம் உன்னிப்பாக பரிசீலித்தது. இரு தரப்பிலும், பல ஆவணங்கள் நீதிமன்றத்தின் முன் சமர்ப்பிக்கப் பட்டன. அவைகளையும், நீதிமன்றம் உன்னிப்பாகப் பரிசீலித்தது. இந்த வழக்கில் மனுதாரர் கோரிய இடைக்காலத் தடை மனுவை தள்ளுபடி செய்த தனி நீதிபதியின் (நீதிபதி சந்துரு) தீர்ப்பும் உன்னிப்பாக பரிசீலிக்கப்பட்டது.

பெரியாரின் சிந்தனைகளான குடிஅரசு தொகுப்புகளை வெளியிட தடைகோரும் மனுதாரர் சார்பில் (கி.வீரமணி) முதன்மையாக எடுத்து வைத்த வாதம், தங்களுக்கு மட்டுமே பதிப்புரிமை உள்ளது என்பதாகும். 1957 ஆம் ஆண்டு பதிப்புரிமை சட்டத்தின், சட்டப் பிரிவுகளின் கீழ், அவர் இந்த உரிமையை கோருகிறார். எதிர் மனுதாரர்களான கொளத்தூர் மணி, கோவை இராமகிருட்டிணன் ஆகியோர் இந்தத் தொகுப்புகளை வெளியிடுவது, தமக்குரிய பதிப்புரிமையில் குறுக்கிடுவதாகும் என்றும், எனவே குடிஅரசு கட்டுரைகள், சுயமரியாதை இயக்க தொடர்பான எழுத்துகள், நூல்கள், வெளியீடுகள் எவற்றையும் வெளியிடும் உரிமை அவர்களுக்குக் கிடையாது என்றும், அவர்கள் வெளியிடுவதற்கு நிரந்தரத் தடை விதிக்க வேண்டும் என்றும் மனுதாரர் (கி.வீரமணி) கோருகிறார். அத்துடன், இதற்காக ரூ.15 லட்சம் தமக்கு இழப்பீடு வழங்க வேண்டும் என்பதும் அவரது கோரிக்கையாகும். மனுவில் நீதிமன்றத்திடம் முதன்மை கோரிக்கையாக, தமக்குரிய பதிப்புரிமையை மனுதாரர் குறிப்பிடும் மனுதாரர், மனுவின் உள்ளடக்கத்தில், வேறு ஒன்றைக் குறிப்பிடுகிறார்.

அதாவது 1983 ஆம் ஆண்டில் தம்மால் நியமிக்கப்பட்ட புலவர் இமயவரம்பன் தலைமையிலான குழுவினர் 'குடிஅரசு' இதழ்களிலிருந்து தொகுத்த பெரியாரின் கட்டுரைகள் தொகுப்பை, யாருக்கும் தெரியாமல் எடுத்துச் சென்று, (Stealthily removed) அதே தொகுப்பையே அவர்கள், நூலாக அச்சிட்டு வெளியிட இருப்பதாகக் கூறுகிறார். பெரியார் நூல்களுக்கு தமக்கு மட்டுமே பதிப்புரிமை உண்டு. அதில் குறுக்கிடுவதை அனுமதிக்கக்கூடாது என்பதே வழக்கில் மனுதாரரின் முதன்மையான கோரிக்கை. ஆனால், திருச்சியில் தம்மால் நியமிக்கப்பட்ட குழுவினர் தொகுத்தவற்றை தெரியாமல் எடுத்துச் சென்று, வெளியிட்டுவிட்டதாக தனது வழக்கு மனுவில் கூறுகிறார். இதில், தனக்குரிய பதிப்புரிமையை, எந்தக் குறிப்பான ஆவணத்துக்குக் கோருகிறார் என்பதை திட்டவட்டமாகக் கூறவில்லை.

பதிப்புரிமை சட்டத்தின்படி (பிரிவு 17) ஒரு நூலின் பதிப்புரிமைக்கு உரியவர், அந்த நூலை எழுதியவர்தான். அதே நேரத்தில் வேறு ஒரு இதழிலோ செய்தித் தாளிலோ அதன் உரிமையாளர் கீழ், வேலை செய்யும் எழுத்தாளர், அந்த பத்திரிகையில் எழுதிய படைப்புகளுக்கான பதிப்புரிமை, அதன் உரிமையாளருக்கே உண்டு. அப்படித்தான்

(5 ஆம் பக்கம்)

## வாதிடவே வராத வழக்கறிஞர்

- 61 பக்கங்களைக் கொண்ட தீர்ப்பில் சுமார் 83 இடங்களில் பெரியார் பெயர் குறிப்பிடப்படுகிறது. அத்தனை இடங்களிலும் **'தந்தை பெரியார்'** என்றே நீதிபதிகள் குறிப்பிட்டுள்ளனர்.
- நீதிபதி சந்துரு வழங்கிய தீர்ப்பை, இலக்கியச் செறிவான தீர்ப்பு (Eloguent) என்று நீதிபதிகள் பாராட்டியுள்ளனர்.
- வழக்கில் மனுதாரர் (வீரமணி) சார்பில் தன்னையும் இணைத்துக் கொண்டு தாக்கல் செய்த தஞ்சை இரத்தினகிரி மனுவை ஏற்கனவே தனி நீதிபதி தள்ளுபடி செய்துவிட்டார். அதற்கு நீதிபதி கூறிய காரணங்களை அப்படியே ஏற்கிறோம். அதற்கு மாறான கருத்துக்கு நாங்கள் தயாராக இல்லை என்று கூறிய நீதிபதிகள், ரத்தினகிரியின் கோரிக்கை மிகவும் வலுவற்ற பலவீனமானது (Slender claims) என்று குறிப்பிட்டுள்ளனர். தனி நீதிபதியால் தள்ளுபடி செய்யப்பட்ட இரத்தின கிரி மனுவை மேல்முறையீடு செய்வதற்கான தகுதியே இல்லை என்று (do no find any merit at all) நீதிபதிகள்கூறியுள்ளனர்.
- மனுதாரர்கள் சார்பில் முன் வைக்கப்பட்ட அத்தனை வாதங்களையும், தொகுத்துக் கூறி, அதற்கான தங்களது பதில்களையும் நீதிபதிகள் பதிவு செய்துள்ளனர்.
- பதிப்புரிமையை எழுத்து மூலம் நூலாசிரியர் வழங்கியிருக்க வேண்டும் என்பதை வலியுறுத்தக்கூடிய, இரண்டு தீர்ப்புகளை நீதிபதிகள் எடுத்துக் காட்டியுள்ளனர்.
- கி. வீரமணியின் வழக்கறிஞர், தங்களுக்கு ஆதரவாக நான்கு நீதிமன்ற தீர்ப்புகளை எடுத்துக் காட்டியிருந்த அந்தத் தீர்ப்புகள் இந்த வழக்கிற்கு பொருந்தாது என்று, உரிய காரணங்களைக் கூறி நீதிபதிகள் தள்ளுபடி செய்தனர்.
- மனுதாரார் (வீரமணி) கூறும் தொகுப்பு வேறு; பெரியார் திராவிடர் கழகத்தின் தொகுப்பு வேறு என்பதை விளக்குவதற்காக கழக சார்பில் அச்சடிக்கப்பட்ட 1925, 1926, 1930 குடிஅரசு தொகுப்புகள் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டன. அதை பரிசீலித்த நீதிபதிகள் இரண்டும் வெவ்வேறானவை என்று கூறியுள்ளதோடு, மனுதாரரின் ஒரிஜினல் தொகுப்பைத்தான் பெரியார் திராவிடர் கழகம் வெளியிட்டது என்பதற்கு அடிப்படை முகாந்திரம் ஏதுமில்லை (there being no primafacie strong case) என்று திட்டவட்டமாகத் தெரிவித்தனர்.
- கழக சார்பில் வாதாடிய வழக்கறிஞர் துரைசாமி, கிளாடிஸ் டேனியல், மூத்த வழக்கறிஞர் ஆர். தியாகராஜன் ஆகியோர் முன் வைத்த பல வாதங்களை நீதிபதிகள் ஏற்றுக் கொண்டுள்ளனர்.
- கி.வீரமணியின் சார்பில் மனுதாக்கல் செய்த வழக்கறிஞர் பெயர் வீரசேகரன். நீதிபதி சொக்கலிங்கம் அவர்கள் முன் வழக்கு விசாரணைக்கு வந்தபோது, அவர் நேர்மையான நீதிபதி என்பதால் வழக்கை அவரிடமிருந்து மாற்ற, புதிய தந்திரத்தை மனுதாரர் அரங்கேற்றினார். நீதிபதி சொக்கலிங்கத்தின் நெருங்கிய உறவினரான வழக்கறிஞர் சண்முக சுந்தரம், வீரசேகரனுக்கு பதிலாக மாற்றப்பட்டார். நெருங்கிய உறவினர் வாதாடும் வழக்கை நீதிபதிகள் விசாரிப்பது இல்லை. அந்த மரபுப்படி, நீதிபதி சொக்கலிங்கம் வழக்கை விசாரிக்க மறுத்துவிட்டார். வழக்கறிஞர் சண்முக சுந்தரம் என்பவர் ஒரு நாள்கூட இந்த வழக்கில் ஆஜராகவில்லை. ஆனாலும் வழக்கின் மனுவில் மட்டும் அவரது பெயரே வீரசேகரனுக்கு பதிலாக இடம் பெற்றிருந்தது. "சாணக்கியனே" இவர்களிடம் தோற்றுப் போவான்.

# விரக்தியடைந்த கும்பலின் வன்முறை

# திருவாரூர் தங்கராசு வீட்டில் தாக்குதல்

கழகத்தின் மூத்த தலைவர் திருவாரூர் தங்கராசு அவர்களின் இல்லத்தை, வன்முறைக் கும்பல் கடந்த 12 ம் தேதி இரவு 11 மணியளவில் பாறாங்கற்களைத் தூக்கி எறிந்து தாக்கியதில், வீட்டின் வாயிலில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த அவரது கார் சேதமடைந்தது.‘குடிஅரசு தொகுப்பு நூலை வெளியிட்ட மூத்த தலைவர் திருவாரூர் தங்கராசு, பெரியாரை வர்த்தகமாக்கும் கி.வீரமணியை கடுமையாக விமர்சனம் செய்தார். அவரது பேச்சு ஏடுகளில் வந்த நாளில், இந்தத் தாக்குதல் நடந்துள்ளது. செய்தியறிந்து கழகத் தலைவர் கொளத்தூர் மணி, பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன், சென்னை மாவட்டக் கழகத் தலைவர் தபசி குமரன் மற்றும் சென்னை தோழர்கள் 12 ஆம் தேதி இரவே திருவாரூர் தங்கராசு அவர்களின் இல்லம் விரைந்தனர். காவல்துறையில் புகார் தரப்பட்டது.

அடுத்த நாள் காலை கழகத் துணைத் தலைவர் ஆனூர் ஜெகதீசன், வழக்கறிஞர் துரைசாமி, இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மூத்த தலைவர் ஆர். நல்லக்கண்ணு ஆகியோர் தோழர் தங்கராசு இல்லம் சென்று, நடந்த சம்பவங்களைக் கேட்டறிந்தனர். செய்தியாளர்களிடம் பேசிய தோழர் நல்லக்கண்ணு, வன்முறையைக் கண்டித்துள்ளார்.

“பெரியாருடன் இணைந்தும், பெரியார் மறைவிற்குப் பின்னரும் தமிழருக்கும், சுயமரியாதை



இயக்கத்துக்கும் தொண்டாற்றி வருபவர் திருவாரூர் தங்கராசு. பெரியார் கருத்துகளை மக்கள் மன்றத்தில் எடுத்துச் செல்பவர். அவரது கார் தாக்குதலுக்கு உள்ளாகியிருப்பது வன்மையான கண்டனத்துக்கு உரியது. தமிழக அரசும் காவல்துறையும் சம்பந்தப் பட்டவர்களைக் கைது செய்து நடவடிக்கை மேற்கொள்ளவேண்டும்” என்று கூறியுள்ளார்.

கழக சார்பில் கழகத் தலைவர் கொளத்தூர் மணி விடுத்துள்ள கண்டன அறிக்கையில் குறிப்பிட் டுள்ளதாவது:

“பெரியார் இயக்கத்தின் மூத்த தலைவரும், 60 ஆண்டுகளுக்கு மேலாக பெரியார் கொள்கைகளைப் பரப்பி வருபவரும், தமிழக அரசின் பெரியார் விருது பெற்றவருமான திருவாரூர் தங்கராசு அவர்கள் இல்லத்தின் மீது கடந்த 12 ஆம் தேதி இரவு 10.45 மணியளவில் வன்முறை சக்திகள் பாறாங்கற்களை தூக்கி எறிந்து, அவரது காரை சேதப்படுத்தியுள்ளதை வன்மையாகக் கண்டிக்கிறோம். சென்னை பத்திரிகையாளர் சங்கத்தில் கடந்த 11.6.2010 அன்று தி.க. தலைவர் கி.வீரமணி தொடர்ந்த வழக்கில் வெற்றிப் பெற்று பெரியார் திராவிடர் கழகம் நடத்திய விழாவில் ‘குடிஅரசு’ தொகுப்பு நூலை வெளியிட்டு அவர் பேசியது, ஜூன் 12 ஆம் தேதி இதழ்களில் வெளிவந்தது. அன்றைய தினம் இரவே தாக்குதல் நடந்துள்ளது. எழுச்சியுடன் நடந்த அந்த விழாவை தாங்கிக் கொள்ள முடியாதவர்களே - இத் தாக்குதல்களை நடத்தியிருக்கக் கூடும் என்று சந்தேகிக்க வேண்டியிருக்கிறது. சமுதாய இயக் கத்தைச் சார்ந்த 85 வயதை நெருங்கும் பெரியார் தொண்டருக்கு தமிழ்நாட்டில் இத்தகைய அச்சுறுத்தல் நடப்பதை அனுமதிக்கக் கூடாது. காவல்துறை, எந்த நிர்ப்பந்தத்துக்கும் பணிந்து விடாமல், குற்றவாளிகளைக் கைது செய்து உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று வற்புறுத்து கிறோம்.”

## தாக்குதலைக் கண்டித்து கோவையில் ஆர்ப்பாட்டம்



பெரியார் திராவிடர் கழகத்தின் மூத்த தலைவரான திருவாரூர் தங்கராசு அவர்களின் வீடு, கார் தாக்கப்பட்டதைக் கண்டித்து 13.6.2010 அன்று மாலை 5 மணியளவில் கோவை செஞ்சிலுவை சங்கம் முன்பு கழகப் பொதுச்செயலாளர் கு. இராமகிருட்டிணன் தலைமையில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. ஆர்ப்பாட்டத்தில் ஆட்சிக் குழு உறுப்பினர் வெ. ஆறுச்சாமி, மாநகர செயலாளர் கோபால், இளங்கோ, செல்வம், நாகராஜ், மாணவரணியின் சார்பாக நேருதாசு, மணிகண்டன், இரஞ்சித் பிரபு, சிலம்பரசன் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

## பெரியார் சொத்துக்கள்: வழக்கறிஞர் துரைசாமி எழுப்பும் கேள்வி

பெரியார் சுயமரியாதைப் பிரச்சார நிறுவனத்துக்கு உரிமை கொண் டாடப்படும் பெரியாரின் சொத்துக்கள், உண்மையிலேயே அந்நிறுவனத்துக்கு சட்டப்படியான உரிமையுள்ளவையல்ல என்று ‘குடிஅரசு’ தொகுப்பு வெளியிட்டு விழாவில் கழகத்தின் வழக்கறிஞர் துரைசாமி அறிவித்தார்.

பெரியார் நூல்களுக்கு அறிவுசார் சொத்துரிமை கோரினார் கி.வீரமணி, இப்போது பெரியார் சொத்துகளே யாருக்கு சொந்தம் என்ற கேள்வி எழுந்து விட்டது.

பெரியார் சொத்துகள் அறக்கட்டளைக்கு சட்டப்படி உரிமையாவதற்கு அந்த சொத்துக்களை பெரியார் அறக்கட்டளைக்கு ஒப்படைப்பதாக (endowed) பத்திரம் எழுதித் தந்திருக்க வேண்டும். அப்படி பெரியார் எதையும் எழுதித் தராத நிலையில், பெரியாரின் சொத்துக்களை அறக்கட்டளைக்கு உரிமை கொண்டாட முடியாது. அந்த சொத்துக்களுக்கு பெரியார் உறவினர்கள் உரிமை கோர முடியும். அல்லது அரசு அதை எடுக்க வேண்டும். செம்மொழி மாநாட்டுக்குள் அரசு அந்த சொத்துக்களை எடுக்காவிட்டால், சட்டப்படி நடவடிக்கைகளை மேற்கொள்வோம் என்று வழக்கறிஞர் துரைசாமி அறிவித்தார்.

## சேத்துப்பட்டு இராசேந்திரன் இல்ல மணவிழா வரவேற்பு

சென்னை - சேத்துப்பட்டு கழகத் தோழர் இராசேந்திரன் - மோ. அலமேலு இணையரின் இளைய மகள் மோ. இலட்சுமி - க. சரவணன் ஆகியோரின் வாழ்க்கை ஒப்பந்த வரவேற்பு நிகழ்ச்சி, 27.6.2010 அன்று மாலை 6.30 மணியளவில் பெரம்பூர் ரயில் திருமண மண்டபத்தில் நிகழுகிறது. தோழர்கள் இதையே அழைப்பாக ஏற்று வருமாறு சேத்துப்பட்டு இராசேந்திரன் கேட்டுக் கொள்கிறார்.

## புரசையில் கழகக் கூட்டத்தில் நாஞ்சில் சம்பத் பேசுகிறார்





வடசென்னை மாவட்ட பெரியார் திராவிடர் கழகம் சார்பில் பெரியார் கொள்கை விளக்கப் பொதுக் கூட்டம் 10.6.2010 அன்று புரசை அவதான பாப்பையா சாலையில் நடைபெற்றது. கழகத் தோழர் கேசவன் தலைமை தாங்கினார். கழக துணைத் தலைவர் ஆனூர் ஜெகதீசன், வழக்கறிஞர் குமார தேவன், அன்பு ஆகியோர் உரை யாற்றினர். பெரியார் திராவிடர் கழகத்தின் துடிப்பு மிக்க செயல் பாடுகளை பாராட்டியும், வீரமணி யின் துரோகத்தைக் கண்டித்தும் நாஞ்சில் சம்பத் ஒன்றரை மணி நேரம் உரையாற்றினார்.

“புரட்சிப் பெரியார் முழக்கம்”
**ஆண்டுக்கட்டணம் ரூ.150/-**
தொடர்புக்கு: ஆசிரியர்,
29, பத்திரிகையாளர் குடியிருப்பு,
திருவள்ளுவர் நகர்,
திருவான்மியூர், சென்னை-41.
**தொடர்புக்கு புதிய எண்:**
✆ 99416 13535

# கழகத் தலைவருக்கு மிரட்டல்

# ஆத்திரத்தின் உச்சியில் தி.க. வட்டாரம்

பெரியார் திராவிடர் கழகம் 'குடிஅரசு' தொகுப்பை வெளியிட தடையில்லை என்று உயர்நீதிமன்றம் அளித்த தீர்ப்பு, திராவிடர் கழகத்தில் உள்ள சிலரை மிகவும் ஆத்திரப்படுத்தியிருக்கிறது. அதைவிட, குடிஅரசு தொகுப்புகளை இலவசமாக இணையதளத்தில் எல்லோரும் படிக்கவும், பதிவிறக்கம் செய்யவும், கழகம் ஏற்பாடு செய்தது – தி.க. வட்டாரத்தை கடும் அதிர்ச்சிக்குள்ளாக்கி விட்டது. பெரியாரின் நூல்களை தங்களுக்கு மட்டுமே ஏகபோகமாக்கிக் கொண்டு, ஏற்கனவே குறுந்தகடுகளையும் நூல்களையும் விற்று வரு கிறவர்கள், கழகம் 'இலவசமாக' வழங்க முன் வந்ததால், அம்பலப்பட்டுப் போய் சீறிப் பாய்கிறார்கள். பெரியார் திராவிடர் கழகம் இணைய தளத்தில் குடிஅரசுகளை எல்லோரும் பயன்படுத்திக் கொள்ளும் வாய்ப்பை உருவாக்கியவுடன், கொதித்துப் போன ஒரு வீரமணி ரசிகர், இணையதளத்தில் வெளியிட்ட கடிதத்தை இங்கு அப்படியே வெளியிடுகிறோம். வீரமணி கட்சி ரசிகர்கள் 'தரத்தை' இக்கடிதத்தை படிப்பதன் மூலம் புரிந்து கொள்ளலாம்.



"பெரியாரின் கொள்கையை திரிவு செய்த(து) கொழு(ள)த்த(தூர்) மணியே!

பெரியாரின் கொள்கை அடிப்படையே தெரியாத மடைய(ா)ரே!

தந்தை பெரியார் அவர்கள் எந்த ஒரு பொருளையுமே, யாருக்கும் இலவசமாக கொடுத்தது கிடையாது.

அப்படிப்பட்ட அவரின் கொள்கையை, கேவலம் பணத்திற்காக (பணம் கிடைக்காது என்ற காரணத்தால்) மின்னஞ்சல் அனுப்பிய செய்தியை படித்தேன்.

வீரப்பனிடம் பணம் வாங்குவதற்கு முன், உன் கடன் என்ன? சொத்தின் மதிப்பு என்ன? எவ்வளவு?

உன் மருமகனின் சொத்து என்ன? எவ்வளவு?

நீயும், உன் மருமகனும் அடித்திருக்கும் கொள்ளை, நாடே அறியும்.

வீரப்பனிடம் வாங்கிய பணத்தை, வெள்ளைப் பணமாக மாற்ற குடிஅரசு வெளியிட முயற்சியா?

கர்நாடக நடிகர் இராஜ்குமார் (விடுவிக்கும்) பேரில், வீரப்பனிடம் நீ வாங்கிய பணம் எவ்வளவு என்று நாடே அறியும்.

தந்தை பெரியார் அவர்கள் சின்ன துண்டு பிரசுரம் (நோட்டீஸ்) கூட 10 பைசாவிற்கு கொடுக்கக் கூடியவர். அவரின் சிந்தனைப் பற்றி தெரியாமல், அவரின் கொள்கையை மின்னஞ்சல் (அச்சிட்டு புத்தகம் மூலம் பணம் கிடைக்காது என்ற காரணத்தால்) அனுப்பிய உன் அறியாமையை நினைத்து வேதனைப்படுகிறேன்.

ஒரு காலகட்டத்தில், விடுதலைப்புலிகளின் பேரில் சம்பாத்தியம்.

ஒரு காலகட்டத்தில் வீரப்பன்பேரில் சம்பாத்தியம்.

இப்பொழுது பெரியார் கருத்து, எழுத்து ('குடிஅரசு' நூல்) மூலம் சம்பாத்தியமா?

வெட்கம்! வெட்கம்!!

அடா, அறிவிளிகளே!

கல்யாண வீடு, படத்திறப்பு, நாடு தோறும் புத்தகச் சந்தை, புத்தக கண்காட்சி என பெரியாரின் கொள்கையை பரப்பி வரும் எங்கள் தலைவர் வீரமணி பற்றி குறை கூற உன(ங்களு)க்கு என்ன அருகதை இருக்கு.

உங்களைப் போன்றே கொள்ளையர்களிட மிருந்து, தந்தை பெரியாரின் கொள்கையை காப்பாற்ற வேண்டும்.(என்பதற்காகத்தான்) ஒழுக்கம், நாணயம், அறிவாற்றல் மிகுந்த எங்கள் தலைவர் வீரமணி தலைமையில் கடமையாற்றி வருகிறோம்.

உங்களுடைய அத்தனை மோசடியையும் அம்பலப்படுத்துவோம்!

எச்சரிக்கை! எச்சரிக்கை!

எங்கள் தலைவர் கால் தூசிற்கு பெறாதது உங்களுடைய.....

**இப்படிக்கு**
**(கி.சௌந்தரராசன்)**

நாள்: 10.06.2010
soundarkd8T@gmail.com

# கழகத்தின் சாதி – தீண்டாமை ஒழிப்பு பரப்புரைப் பயணம் கூடுவாஞ்சேரியில் தொடங்கியது




சென்னை மாவட்ட பெரியார் திராவிடர் கழகம், சாதி-தீண்டாமை ஒழிப்பு - இரண்டாம் கட்டப் பரப்புரைப் பயணம் ஜூன் 12 ஆம் தேதி மாலை கூடுவாஞ்சேரியிலிருந்து புறப்பட்டது. 3 பெண்கள் உட்பட 15 தோழர்கள் பயணக் குழுவில் இடம் பெற்றுள்ளனர். கூடுவாஞ்சேரியில் பரப்புரைக் குழுவின் தொடக்க விழா பொதுக் கூட்டம், கூடுவாஞ்சேரி-நெல்லிக்குப்பம் சாலை சந்திப்பில் மு. தினேசு குமார் தலைமையில் ஆ.முருகன், வீ.பாபு, இரா. சசி முன்னிலையில் எழுச்சியுடன் நடை பெற்றது. பொன். விசயகுமார் வரவேற்புரை யாற்றினார்.

தோழர்கள் மா. சமத்துவமணி (பெரியார் சமூகநீதிப் பேரவை), தே. தென்னவன் (விடுதலை சிறுத்தைகள், காஞ்சி மாவட்ட துணைத் தலைவர்), கழகப் பொதுச்செயலாளர் விடுதலை இராசேந்திரன், தலைவர் கொளத்தூர் மணி ஆகியோர் உரையாற்றினர். முன்னதாக ஒரு மணி நேரத்துக்கு மேலாக தோழர் சிற்பிராசன் 'மந்திரமா தந்திரமா' நிகழ்ச்சிகளை நடத்தினார்.

இடையிடையே மழை வந்தாலும் கூட்டத்தினர் இறுதிவரை உரையைக் கேட்டனர். கல்பாக்கம் தோழர் முருகேசன், தோழர்களுடன் இணைந்து, கூட்டத்துக்கான ஏற்பாடுகளை சிறப்பாக செய்திருந்தார். பயணக் குழுவினர் அன்று இரவு தலைநகர் தமிழ்ச் சங்க கட்டிடத்தில் தங்கி, அடுத்த நாள் காலை பயணத்தைத் தொடங்கினர்.

பரப்புரைப் பயணத்துக்கு, மக்கள் ஆதரவு காட்டுவதோடு, கழக வெளியீடுகளையும் ஆர்வ முடன் வாங்கி வருவதாக பயணக் குழுவினர் தெரிவிக்கின்றனர்.

விழுப்புரம், திருவண்ணாமலை, வேலூர் மாவட்டங்களில் காலை முதல் இரவு வரை கிராமம் கிராமமாக பரப்புரை நிகழுகிறது. 22 ஆம் தேதி காஞ்சியில் பயணம் நிறைவடைகிறது. ●

# வீரமணி பிடியிலிருந்து பெரியார் விடுதலையானார்

# அய்யாவின் நூல்கள் மக்கள் சொத்தானது

*(2ஆம் பக்கத் தொடர்ச்சி)*

பதிப்புரிமை சட்டம் உட்பிரிவு (17(a)) கூறுகிறது. எழுத்தாளர், தனது எழுத்துக்கு பதிப்புரிமை கோர வேண்டும் என்றால், அதற்காக தனியாக உடன்படிக்கை ஒன்றை உரிமையாளருக்கு எழுதிக் கொடுத்திருக்க வேண்டும். அத்தகைய உடன்படிக்கை ஏதும் இல்லாதபோது, உரிமையாளருக்குத்தான் பதிப்புரிமை போய்ச் சேரும். பதிப்புரிமை சட்டத்தின் அடுத்த பிரிவு (எண்.18), பதிப்புரிமைக்குரிய ஒருவர், எழுத்து மூலமாக, அந்த உரிமையை முழுமையாகவோ, பகுதியாகவோ, பதிப்புரிமையை வழங்க வேண்டும் என்று கூறுகிறது.


இந்த இரு சட்டப் பிரிவுகளின்படி, ஒருவர் பதிப்புரிமை கோருவதற்கு இரு நிபந்தனைகள் உள்ளன. ஒன்று - ஒரு நிறுவனத்தில் வேலை செய்யும் ஆசிரியர், தனக்கான பதிப்புரிமையை கோருவதற்கு, அந்த நிறுவன உரிமையாளருடன் ஒப்பந்தம் போட்டிருக்க வேண்டும். மற்றொன்று பதிப்புரிமைக்கு உரிய ஒருவர், தனது பதிப்புரிமையை வேறு எவருக்காவது தர விரும்பினால், அத்தகைய உரிமையை அவருக்கு எழுத்து மூலம் வழங்கியிருக்க வேண்டும். இதுதான் சட்டத்தின் நிலை. இந்த சட்டப்படி பார்த்தால், மனுதாரர், தனக்கு ஆதரவான ஆவணம் எதையும் சமர்ப்பிக்கவில்லை. இன்னும் சொல்லப் போனால், இங்கே மனுதாரர் குறிப்பிட்டுள்ள குடிஅரசு தொகுப்பு - மனுதாரரின் (கி.வீரமணி) படைப்புகளோ, எழுத்துகளோ அல்ல. அவைகள், 1925 ஆம் ஆண்டிலிருந்து 'குடிஅரசு' பத்திரிகையில் தந்தை பெரியார் எழுதியவை. மனுதாரரின் எழுத்துகளாக இல்லாத ஒன்றுக்கு, அவர், பதிப்புரிமை கோர முடியாது. பெரியாருடைய எழுத்துகளுக்கான பதிப்புரிமை பெரியாருக்குத்தான் உண்டு. இதில், இரண்டு கருத்துகளுக்கு இடமே இல்லை. தொகுக்கப்பட்ட 'குடிஅரசு' கட்டுரைகள், பெரியாருக்கு உரியவை என்பதை மனுதாரர், எதிர் மனுதாரர் இருவருமே ஒப்புக் கொண்டுள்ளனர்.

இப்போது அடுத்தக் கேள்வி என்னவென்றால், எழுத்தாளர் என்ற முறையில் பதிப்புரிமை பெற்றிருந்த தந்தை பெரியார், தனது பதிப்புரிமை பதிப்புரிமை சட்டத்தில் கூறியுள்ளபடி (பிரிவு 17, 18) வேறு எவருக்காவது, எழுதிக் கொடுத்திருக்கிறாரா என்பது தான்.

பதிப்புரிமை சட்டத்தின் 18 ஆவது பிரிவின் கீழ்தான், மனுதாரர் தமது உரிமையைக் கோரியிருக்கிறார். அதாவது, பெரியார் சுயமரியாதைப் பிரச்சார நிறுவனத்தின், அதன் விதிகளில் இதுபற்றிக் குறிப்பிட்டுள்ளதாகக் கூறுகிறார். சுயமரியாதைப் பிரச்சார நிறுவனம் என்ற பெயரில் தந்தை பெரியார் பதிவு செய்திருந்த சொசைட்டிக்கான விதிகளில், நூல்கள் வெளியீடு, துண்டுப் பிரசுரங்கள் வெளியீடு போன்ற ஆக்கபூர்வமான பணிகள் நிறுவனத்தின் செயல்பாடுகளாக இருக்கும் நிறுனத்தின் நோக்கத்துக்கு ஏற்ற வகையில், நூல்களை வெளியிடவும், விற்கவும், அச்சகம் நிறுவப்படும் என்று கூறப்பட்டுள்ளது. இந்த 'சொசைட்டிக்கான' பதிவில் கையெழுத்திட்டவர்களில் தந்தை பெரியாரும் ஒருவர். மேற்குறிப்பிட்ட விதிகளில், தந்தை பெரியாரின் குடிஅரசு பற்றியோ அல்லது அவரது மற்ற படைப்புகள் பற்றியோ குறிப்பிட்டு, எதையும் சுட்டவில்லை.

மேற்குறிப்பிட்ட நிறுவனத்தை பெரியார் சங்கங்கள் பதிவுச் சட்டத்தின் கீழ்தான் (Society Registration Act) அதுவும், 1952 ஆம் ஆண்டில் தான் (21.10.1952) பதிவு செய்துள்ளார். இதில் ஒன்றை கவனமாகப் புரிந்து கொள்ள வேண்டும். இப்போது தொடரப்பட்டுள்ள வழக்கு 1952க்கு முன்பே 1925 முதல் 1949 வரை நடந்த 'குடிஅரசு' வார ஏடு தொடர்பானதாகும். 'குடி அரசு' நிறுத்தப்பட்ட பிறகு, பெரியார் பதிவு செய்த நிறுவனத்தின் விதிகளில் குடிஅரசு பற்றியோ, அல்லது அது தொடர்பான பதிப்புரிமை பற்றியோ, தந்தை பெரியார் படைப்புகள் பற்றியோ, வெளியிட்ட நூல்கள் பற்றியோ, குறிப்பிட்டு எதையும் கூறவில்லை.

மனுதாரரின் வழக்கறிஞர் சுயமரியாதை பிரச்சார நிறுவனத்தின் 22வது விதியை சுட்டிக்காட்டி வாதாடினார். இந்த நிறுவனத்தின் தலைவர் பெரியார், தனது பெயரிலும், நிறுவனத்தின் பெயரிலும், ஏற்கனவே வாங்கிய சொத்துகளும், அதன் நிர்வாகக் குழு ஆயுள் உறுப்பினர்கள் நிறுவனத்துக்காக ஏற்கனவே வாங்கிய சொத்துக்களும், இந்த நிறுவனத்துக்கு உரிமையுடையதாகும் என்று அந்த பிரிவு கூறுகிறது. (இதன்படி 'குடிஅரசு' ஏற்கனவே பெரியாரால் வாங்கப்பட்ட சொத்து என்றும், எனவே அது நிறுவனத்துக்கு உரிமையாகிறது என்றும், வழக்கறிஞர் வாதிட்டார்). மேற்குறிப்பிட்ட பிரிவுகள், நிறுவனத்தில் உறுப்பினர்களுக்கான உரிமைகளைத் தான் (Status) வரையறுக்கின்றன. நாங்களும் விடா முயற்சியோடு துருவித் துருவி ஆராய்ந்து பார்த்த பிறகும்கூட, பெரியாரின் படைப்புகள், மனுதாரரின் நிறுவனத்துக்கு உரிமையுடையவை என்பதற்கு ஆதரவாக, எதையும், எங்களால் கண்டறியவே முடியவில்லை. (By any amount of Strenuous effort - we were not in a position to discern of any right in favour of the appellant - society)




*1925 ஆம் ஆண்டிலிருந்து 1949 வரை 'குடிஅரசு'* வெளிவந்த காலங்களில் அமுலில் இருந்தது 1914 ஆம் ஆண்டில் பிரிட்டிஷ் ஆட்சியில் வெளிவந்த பதிப்புரிமை சட்டமாகும். அதற்குப் பிறகு 1957 ஆம் ஆண்டில்தான் புதிய பதிப்புரிமை சட்டம் கொண்டு வரப்பட்டது. எனவே 'குடிஅரசு'க்கு 1914 ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்ட பதிப்புரிமை சட்டமே - சட்டப்படி பொருந்தக் கூடியதாகும்.

இரண்டு சட்டங்களில் உள்ள விதிகளும், பெரியாருக்கு வழங்கியுள்ள உரிமைகளை, இந்த வழக்கில் ஆராய வேண்டியிருக்கிறது. காரணம், மனுதாரரின் வழக்கறிஞர் திருச்சி வே. ஆனைமுத்து தொகுத்த "பெரியார் சிந்தனைகள்" நூல் தொகுதிக்கு பெரியார் அனுமதி வழங்கியதைக் குறிப்பிட்டுள்ளார். 1972 ஆம் ஆண்டில் பெரியார் அதற்கான அனுமதியை ஆனைமுத்து என்ற தனிமனிதருக்கு வழங்கியுள்ளார். இதை ஆனைமுத்து 'பெரியார் சிந்தனைகள்' தொகுதிக்காக தாம் எழுதிய முன்னுரையில் குறிப்பிடுகிறார். இந்த ஆவணம், நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. அதை கவனத்துடன் பரிசீலித்தோம். அதில், நாங்கள் அறியவருவது என்னவென்றால், தந்தை பெரியாரே ஆனைமுத்துவை அழைத்து, தனது பேச்சு எழுத்துகளைத் தொகுக்குமாறு கேட்டிருக்கிறார். அந்தத் தொகுப்பை உருவாக்க தனிப்பட்ட முறையில் தனது ஒப்புதலையும் வழங்கியிருக்கிறார்.

ஆக, திரு. ஆனைமுத்து என்ற தனி நபரிடம், தனது எழுத்து பேச்சுகளைத் தொகுக்கும் வேலையை தந்தை பெரியார் ஒப்படைத்திருக்கிறார். அதுபோல மனுதாரரும் (கி.வீரமணி) தன்னிடம் பெரியார் ஏதேனும் பணியை ஒப்படைத்திருக்கிறார் என்பதற்கான ஆவணம் எதையும் சமர்ப்பிக்கவில்லை. தனது பேச்சுகளும், எழுத்துகளும் தொகுக்கப்பட வேண்டும் என்று ஒரு கட்டத்தில் முடிவுக்கு வந்த பெரியார், அந்த வேலையை ஒரு தனி மனிதரிடம் ஒப்படைக்க முன் வந்த நிலையில், அதே போன்ற உரிமை தனக்கும் மனுதாரர் கோரினால், அப்படி பெரியார் ஒப்படைத்ததற்கான ஆவணத்தைக் காட்டியிருக்க வேண்டும். 1957 ஆம் ஆண்டு பதிப்புரிமைச் சட்டத்தின்படி (பிரிவு 8), இத்தகைய எழுத்துபூர்வமான உரிமையைப் பெற்றிருந்தால் மட்டுமே, அதற்கு உரிமை கோர முடியும். எனவே - சட்டமும், மனுதாரருக்கு ஆதரவாக இல்லை.

*2003 ஆம் ஆண்டு நவம்பரில் எதிர் மனுதாரர் (கொளத்தூர் மணி) 'குடிஅரசு' முதல் தொகுதியை வெளியிட்டார். அதில் முன்னுரையில் 1983 ஆம்* ஆண்டு திருச்சியில் புலவர் இமயவரம்பன் தலைமையில் பெரியார் பற்றாளர்கள் தொகுத்ததை அப்படியே எந்த மாற்றமும் இன்றி வெளியிட்டுள்ளோம் என்று குறிப்பிட்டுள்ளார். மனுதாரர் சார்பில் இது ஒரு ஆவணமாக சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. எதிர் மனுதாரர்களே, புலவர் இமயவரம்பன் தலைமையிலான குழு தொகுத்ததையே வெளியிட்டுள்ளதாக ஒப்புக் கொண்டிருக்கிறார்கள் என்று மனுதாரரின் வழக்கறிஞர் வாதிட்டார். நாங்கள் ஏற்கனவே கூறியது போல், இது பெரியாரின் எழுத்துகள் தானே தவிர, மனுதாரரின் (கி.வீரமணியின்) சிந்தனையில் உதித்த படைப்புகள் அல்ல. எனவே பெரியாரின் எழுத்து-பேச்சு தொகுப்புக்கான பதிப்புரிமை மனுதாரருக்கு உள்ளதா என்பதே முடிவு செய்யப்படாத நிலையில், அத்தொகுப்பு தன்னுடையது அல்ல; பெரியாருடையது என்று மனுதாரரே ஒப்புக் கொள்ளும்போது, மனுதாரருக்கு பதிப்புரிமை கோரும் உரிமை கிடையாது. மனுதாரர் தனக்கு சாதகமாக சமர்ப்பித்த ஆவணங்கள் எதிலும் அவர் பதிப்புரிமை கோரும் உரிமையை எந்த வகையிலும் உறுதிப்படுத்தவில்லை.

'விடுதலை'யில் பெரியார் எழுதியதை *(2.10.1952)* மனுதாரர் ஒரு ஆவணமாக சமர்ப்பித்துள்ளார். அதில் இவ்வாறு பெரியார் எழுதியிருக்கிறார்:

"அப்போது ஸ்தாபனத்திற்கு உள்ள சொத்துக்கள் என்பதாக அதில் குறிப்பிடப்பட்டிருந்தது ஒரு லட்ச ரூபாய் தான். அதாவது சில கட்டிடங்கள், 2 அச்சு நிலையங்கள், 2 பத்திரிகைகள், புத்தகங்கள் உரிமைகள், ரொக்க நிதிகள் ஆகியவை. அன்றைய நிலவரப்படி" - என்று குறிப்பிட்டுள்ளார்.

இதில், பெரியார் குறிப்பிட்டுள்ள சொத்துக்கள் என்பதில் பெரியார் நூல்களின் பதிப்புரிமையும் அடங்கும் என்று மனுதாரர் கூறுகிறார். இதை ஏற்க முடியாது. பெரியாரின் பேச்சும், கட்டுரைகளும், சொத்துகள்தான் என்பதற்கான குறிப்பான சட்ட ஆவணம் இல்லாத வரை, மனுதாரரின் வாதத்தை ஏற்க இயலாது. நேரடி தொடர்பில்லாத ஒரு குறிப்பை (Remote References) மட்டும் அடிப்படையாகக் கொண்டு மனுதாரர் உரிமை கோருகிறார். இதை பொருத்தமான ஆவணமாக அங்கீகரிக்க முடியாது.

மற்றொரு எதிர் மனுதாரர் (கோவை இராம கிருட்டிணன்) 'குமுதம் ரிப்போர்ட்டர்' *(21.08.2008)* இதழுக்கு அளித்த பேட்டியில் திருச்சியில் புலவர் இமயவரம்பன் தலைமையிலான குழு தொகுப்பையே தாங்கள் வெளியிட்டிருந்ததாக கூறியதை, இங்கே மனுதாரர், தமக்கு சார்பாக சமர்ப்பித்துள்ளார். இந்த ஆவணமும் மனுதாரரின் (வீரமணியின்) பதிப்புரிமையை ஏற்பதற்கோ, அங்கீகரிப்பதற்கோ எந்த வகையிலும் உகந்தது அல்ல. அந்தப் பேட்டியில் கூறப்பட்டுள்ள செய்திகூட, மனுதாரர் (கி.வீரமணி) தந்தை பெரியார் பேச்சு எழுத்துகளை வெளியிடாமல் இருந்ததைத்தான் குறிப்பிடுகிறது.

*1983 ஆம் ஆண்டு* புலவர் இமயவரம்பன் தலைமையில் 'குடிஅரசி'லிருந்து தொகுக்கப்பட்ட பெரியார் எழுத்து பேச்சுகளுக்கு மனுதாரர் தமக்கு பதிப்புரிமை கோருவதால் இப்போது அமுலிலுள்ள 1957 ஆம் ஆண்டு பதிப்புரிமை சட்டத்தின் பிரிவுகளை நாங்கள் பரிசீலித்தோம். அதில் 52(1)(எம்) பிரிவு - பதிப்புரிமை கோர முடியாத சில செயல்பாடுகளை பட்டியலிட்டுள்ளது. இதன்படி, ஒரு செய்திப் பத்திரிகை அல்லது இதழ் அல்லது பருவ இதழ்களில் வெளிவரும், அன்றாட பொருளாதாரம், அரசியல், சமூகம் அல்லது மதம் தொடர்பான கட்டுரைகளை மீண்டும் மறு வெளியீடாக வெளியிடுவது பதிப்புரிமையில் குறுக்கீடுவதாகாது என்று கூறுகிறது. அந்த கட்டுரைகளை ஆசிரியர், பதிப்புரிமைக்கு உட்பட்டது என்று வெளிப்படையாக அறிவிக்காதவரை, மறு வெளியீடு செய்யும் உரிமை உண்டு என்று, அந்த பிரிவு கூறுகிறது. 'குடிஅரசு' ஒரு செய்திப் பத்திரிகை தான். இந்த சட்டப்படி அதில் வரும் கட்டுரைகளை மீண்டும் வெளியிடுவதற்கு பதிப்புரிமை கேட்க முடியாது. தனது எழுத்துப் பேச்சுகளுக்கு பதிப்புரிமை எதையும் தந்தை பெரியாரும் எழுதி வைக்கவில்லை.

பெரியார் சுயமரியாதைப் பிரச்சார நிறுவனத்தின் சில விதிகளைக் காட்டி, மனுதாரர் தனது பதிப்புரிமைக்கு உரிமை கேட்டது பற்றி, ஏற்கனவே, விரிவாக விளக்கி இருக்கிறோம். எனவே 'குடிஅரசு' செய்தித்தாள் என்றாலும் சரி அல்லது வார இதழ்

*(6 ஆம் பக்கம்)*

PURATCHI PERIYAR MUZHAKKAM TAMIL WEEKLY REG.NO.TN/CCN/488/09-11 LICENCED TO POST WPP NO.TN/CCN/9/09-11
REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TNTAM/2002/7776


# கழகம் வெளியிட்ட ‘ரிவோல்ட்’

சுயமரியாதை இயக்கத்தின் முதல் ஆங்கில வார ஏடான ‘ரிவோல்ட்’ 1928 ஆம் ஆண்டில் ரஷ்யாவின் புரட்சி நாளான நவம்பர் 7 இல் தொடங்கி, 1930 வரை வெளிவந்தது.அப்போது தமிழ்நாட்டில் எழுதப் படிக்கத் தெரிந்தோர் 7 சதவீதம் மட்டுமே.

சுயமரியாதை இயக்கத்தின் கொள்கைகளை தமிழ்நாட்டுக்கு வெளியே கொண்டு செல்வதற்கும், பார்ப்பன சுயநல சக்திகள் சுய மரியாதை இயக்கத்துக்கு எதிராக நடத்திய பிரச்சாரங்களை எதிர் கொள்ளக்கூடிய ஆங்கில அறிவு வட்டாரம் உருவாக வேண்டும் என்ற நோக்கத்தோடும் பெரியார் ஆங்கில ஏட்டைத் தொடங்கும் துணிவான எதிர்நீச்சல் முயற்சியில் இறங்கினார்.

தேசிய - சர்வதேசியப் பிரச்சினைகளை ‘ரிவோல்ட்’ வார ஏடு அலசியது. ஆப்கானின் சீர்திருத்தவாதி அமீர் அமானுல்லா மேற்கொண்ட சீர்திருத்தங்கள், தீண்டாமை ஒழிப்பில் காங்கிரசின் இரட்டைவேடம், காதரின் மேயோ என்ற அம்மையார், பார்ப்பனியத்தை அம்பலப்படுத்தி எழுதிய ‘மதர் இந்தியா’ நூல் தொடர்பாக காந்தி தெரிவித்த எதிர்ப்புகள், அதற்கு சுயமரியாதை இயக்கம் தந்த பதிலடி, சுயமரியாதை இயக்கம் நடத்திய கோயில் நுழைவு போராட்டங்கள், டாக்டர் முத்து லட்சுமி ரெட்டி கொண்டு வந்த தேவதாசி ஒழிப்பு மசோதாவுக்கு எழுந்த எதிர்ப்புக்கு பதிலடி, பால்ய விவாக தடுப்பு மசோதா வந்தபோது தேசியவாதிகள் காட்டிய எதிர்ப்பு போன்ற பிரச்சினைகளை கூர்மையான வாதங்களோடு அலசும் கட்டுரைகள் இதில் அடங்கியுள்ளன. குத்தூசி குருசாமியின் ஏராளமான கட்டுரைகள் இடம் பெற்றுள்ளன. ‘இராமாயணம்’ பற்றி குத்தூசி குருசாமி எழுதிய ஆங்கிலத் தொடர் வெளிவந்த இதழ்கள் காந்தியாருக்கு அனுப்பி வைக்கப்பட்டன. அவற்றைப் படித்த பிறகுதான் காந்தி - நான் கூறும் இராமன் இராமாயண இராமன் அல்ல என்று தனது கருத்தை மாற்றிக் கொண்டார்.

‘ரிவோர்ட்’ மொத்தம் 55 இதழ்கள் வெளிவந்துள்ளன. சில இதழ்கள் படிக்க முடியாத நிலையில் செல்லரித்தவையாகவே கிடைத்தன. 55 இதழ்களில் உள்ள முக்கிய கட்டுரைகளைத் தொகுத்து, மெய்ப்புத் திருத்தி, உயர்ந்த தரத்தில் நூலாக உருவம் தரும் பணி வரை கடும் உழைப்பை ஆர்வத்துடன் நல்கி, பெரியாரியலுக்கு தங்களின் உன்னதமான பங்களிப்பை தோழர்கள் வ. கீதா, எஸ்.வி. இராஜதுரை ஆகியோர் இணைந்து வழங்கியிருக்கிறார்கள். 622 பக்கங்களைக் கொண்ட இந்த நூலில், 4 தலைப்புகளின் கீழ் கட்டுரைகள் தொகுக்கப் பட்டுள்ளன. இதன் விலை ரூ.300. ‘குடிஅரசு’ முன் பதிவுத் திட்டத்தின் கீழ் பதிவு செய்தவர்களுக்கு இந்நூலும் வ.கீதா - எஸ்.வி. இராஜதுரை எழுதிய “பெரியார் சுயமரியாதை சமதர்மம்” எனும் 988 பக்கங்களைக் கொண்ட ரூ.600 விலையுள்ள நூலும் அன்பளிப்பபாக வழங்கப்படுகின்றன.




**குறிப்பு:** ‘ரிவோல்ட்’ தொகுப்பில் பக்.204 இல் “A Religious Rally” எனும் தலைப்பில் வெளிவந்த கட்டுரையில் நான்காவது வரியில் “Rationalist Movements” என்று இருப்பதற்கு பதிலாக “Nationalist Movements” என்ற ஒரே ஒரு அச்சுப்பிழை மட்டும் வந்துவிட்டது. தவறுக்கு வருந்தி, திருத்திப் படிக்குமாறு கேட்டுக் கொள்கிறோம்.

(5 ஆம் பக்கத் தொடர்ச்சி)

என்றாலும் சரி, எப்படி அழைத்தாலும், அதில் வெளிவந்துள்ள தனது கட்டுரைகளை எவரும் வெளியிடக்கூடாது என்று பெரியார் உரிமை கோரியிருந்தார் என்பதற்கான ஆவணமோ, சட்டபூர்வமாக ஏற்கக் கூடிய சான்றுகளோ எதுவும் இல்லாத நிலையில் ‘குடிஅரசு’ இதழில் பெரியாரின் பேச்சு-எழுத்துகளை வெளியிட முன் வந்துள்ள எதிர் மனுதாரர்கள் மீது எந்த குற்றமும் காண முடியாது. (Therefore, there being no other document or legally acceptable material to show that Thanthai Periyar reserved his right of production of any of his articles published in the news paper or in the Weekly Magazine Kudiarasu, no fault can be found with the respondents when they want to publish the collection of the speeches and articles of Thanthai Periyar Published in the Weekly Kudiarasu) தந்தை பெரியாரின் படைப்புகளை எதிர்மனுதாரர்கள் (கொளத்தூர் மணி, கோவை இராமகிருட்டிணன்) வெளியிடுவதற்கான பாதுகாப்பை பதிப்புரிமை சட்டத்தின் 52(1)(எம்) பிரிவு தெளிவாக வழங்குகிறது.

சொல்லப் போனால், ஏற்கனவே 2003 நவம்பரில் 1925 ஆம் ஆண்டு ‘குடிஅரசு’ தொகுப்பையும், 2006 செப்டம்பரில் 1926 ஆம் ஆண்டு ‘குடிஅரசு’ தொகுப்புகளையும் எதிர்மனுதாரர்கள் வெளியிட்டுவிட்டதாக கூறியுள்ளனர். இந்த வெளியீடுகளின்போது, மனுதாரர் (கி.வீரமணி) எதிர்ப்பு எதையும் தெரிவிக்கவில்லை. இதே சட்டப் பிரிவின் அடிப்படையில் ஏற்கனவே வழக்கை விசாரித்த நீதிபதி (நீதிபதி சந்துரு) கூறியுள்ள அதே கருத்தை நாங்கள் ஏற்றுக் கொள்கிறோம். குடிஅரசு தொகுப்புகளை வெளியிடுவதற்கு சட்டரீதியான தடைகள் ஏதும் இல்லை!

இரண்டாவது எதிர் மனுதாரர் (கு. இராமகிருட்டிணன்) சார்பில் வாதிட்டவர் (கிளாடிஸ் டேனியல்), மற்றொரு சட்டப் பிரிவைச் சுட்டிக் காட்டினார். 1914 ஆம் ஆண்டின் பதிப்புரிமை சட்டம், ஒரு நூலாசிரியருக்கு பதிப்புரிமையின் காலத்தை நிர்ணயித்துள்ளது. அதன்படி, அந்த எழுத்தாளர் தனது வாழ்நாள் முழுதும் பதிப்புரிமைக்கு உரியவர். அவர் இறந்து 25 ஆண்டுகள் வரையும் அவருக்கு பதிப்புரிமை உண்டு. இறந்து 25 ஆண்டுகளுக்குப் பிறகு பதிப்புரிமை முடிவுக்கு வந்து விடுகிறது. இதுதான் 1914 ஆம் ஆண்டு பதிப்புரிமை சட்டத்தின் நிலை. இந்தப் பிரிவுக்கு 1957 ஆம் ஆண்டு கொண்டு வரப்பட்ட பதிப்புரிமை சட்டம் (79(5)) ஏற்பு வழங்கியுள்ளது. அதாவது 1957 ஆம் ஆண்டு புதிய பதிப்புரிமை சட்டம் வருவதற்கு முந்தைய காலத்தின் படைப்புகளுக்கு பதிப்பாளர் உரிமைகளுக்கான காலக்கெடு, ஏற்கனவே அமுலில் இருந்த சட்டத்திலுள்ளதே பொருந்தும் என்று வாதிட்டார். இதை நீதிமன்றம் ஏற்றுக் கொள்கிறது.

மேற்குறிப்பிட்ட இரு சட்டப் பிரிவுகளின்படி பெரியார் எழுத்து பேச்சுகளுக்கான பதிப்புரிமை, அப்படியே பெரியார் பதிப்புரிமை எழுதி தந்ததாக ஏற்றுக் கொண்டாலும் கூட அது முடிவுக்கு வந்துவிட்டது என்பதே சரி. பெரியார் முடிவெய்தியது 24.12.1973. அதற்குப் பிறகு, 25 ஆண்டுகள் பதிப்புரிமை உண்டு என்று எடுத்துக் கொண்டாலும், 24.12.1998 அன்றோடு பதிப்புரிமை முடிவுக்கு வந்துவிட்டது. எதிர்மனுதாரர் (கொளத்தூர் மணி) ‘குடிஅரசு’ முதல் தொகுதியை வெளியிட்டதே 2003 நவம்பரில்தான்.

எனவே, சட்டரீதியாக பதிப்புரிமை என்ற பேச்சுக்கே இடமில்லை. எனவே 24.12.1998-க்குப் பிறகு தந்தை பெரியாரின் படைப்புகள் மக்கள் அரங்கிற்கு வந்து மக்கள் சொத்தாகி விட்டன. (Therefore, when after 24.12.1998, the literary works of Thanthai Periyar have come into Public domain, even if there were any restrictions, the same would have ceased to operate after 24.12.1998)

- என்று நீதிபதிகள் தீர்ப்பில் கூறியுள்ளனர்.

(முதல் பக்கத் தொடர்ச்சி)

இருக்கிறதா?” என்று திருவாரூர் தங்கராசு கூட்டங்களில் பேசியதை சுட்டிக் காட்டிய இராமகிருட்டிணன், இந்தத் தீர்ப்பு பெரியாரை விடுதலை செய்து விட்டது என்றார்.

பெரியார் திராவிடர் கழகம் நடத்திய இந்த கடும் போராட்டத்தில், பெரியார் திராவிடர் கழகத்தின் பக்கம் இருந்த நியாயங்களுக்காகக் குரல் கொடுக்க முன் வந்த அமைப்புகள், எழுத்தாளர்கள், ஊடகவியலாளர்களுக்கு பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன் நன்றி கூறினார். அவர்கள் தான் இந்த இயக்கத்துக்கு வலிமை சேர்ப்பவர்கள் என்று நன்றியுடன் பதிவு செய்தார். ஏற்கனவே பெரியார் கொள்கையிலிருந்து வீரமணி விலகிப் போய், அரசியல் தலைவரைப் போலவே மாறி விட்டார் என்று மக்கள் மன்றம் ஒதுக்கிவிட்டது. இப்போது நீதிமன்றமும், பெரியார் எழுத்துகள், வீரமணியின் ஏகபோக உரிமையல்ல என்று தீர்ப்பளித்துவிட்டது. தனது சொந்த செலவில் நீதிமன்றத்தின் வழியாகவும் கி. வீரமணி இப்படி ஒரு தீர்ப்பைப் பெற்றுக் கொண்டுவிட்டார் என்று குறிப்பிட்ட விடுதலை இராசேந்திரன், பெரியார் திராவிடர் கழகம் வெளியிட்ட குடிஅரசு தொகுப்புகளை கழக இணையதளத்திலிருந்து, எவர் வேண்டுமானாலும் இலவசமாக பதிவிறக்கம் செய்து கொள்ள முடியும். அதற்கான ஏற்பாடுகள் செய்யப் பட்டுள்ளன என்று பலத்த கரவொலிக்கிடையே தெரிவித்தார்.

திராவிடர் கழக இணையதளத்தில் வெளியிடப் பட்டுள்ள பெரியார் படங்களுக்குக்கூட பதிவிறக்கம் செய்வதற்கு கட்டணம் நிர்ணயித்தவர் வீரமணி என்பதை சுட்டிக்காட்டிய கழகத் தலைவர் கொளத்தூர் மணி, சாமி சிதம்பரனார் எழுதி, தமிழன் பதிப்பகம் வெளியிட்ட ‘தமிழர் தலைவர்’ நூலை (பதிப்புரிமை பெற்றது என்று குறிப்பிட்ட பிறகும்) சுயமரியாதை பிரச்சார நிறுவனத்தின் சார்பில், பத்துக்கும் மேற்பட்ட முறை கி.வீரமணி வெளியிடலாமா? அவர் மட்டும் பதிப்புரிமையில் குறுக்கிடலாமா? என்று கேட்டார்.

குடிஅரசு வழக்கில் கோவை இராமகிருட்டிணன் சார்பில் வாதிட்ட பெண் வழக்கறிஞர் கிளாடிஸ் டேனியல் பேசுகையில் - பதிப்புரிமை சட்டத்தின் சட்டப் பிரிவுகள், வழக்குத் தொடர்ந்த வீரமணிக்கு எதிராகவே இருந்ததை சுட்டிக் காட்டினார். ஒரு நூலாசிரியருக்குரிய பதிப்புரிமை என்பது அவர் உயிருடன் வாழும் காலத்திற்கும் அவர் இறந்த பிறகு 25 வருடங்கள் வரையிலும் தான் இருக்கும். அதன் பிறகு பதிப்புரிமை முடிவுக்கு வந்து, நூலாசிரியரின் எழுத்துக்கள் மக்கள் உடைமையாகிவிடுகின்றன. இப்போது பெரியாரின் படைப்புகளும் மக்கள் உரிமையாகிவிட்டன என்று நீதிபதிகள் தீர்ப்பில் எழுதியிருப்பதை சுட்டிக் காட்டினார்.


நிகழ்ச்சிகளைத் தொடர்ந்து முன் பதிவு செய்த தோழர்கள், குடிஅரசு தொகுப்புகளைப் பெற்றுக் கொண்டனர்,. எளிமையாக, எழுச்சியுடன் நடந்த இந்த நிகழ்வு 12.30 மணியளவில் நிறைவடைந்தது. பெரியார் பாதையிலிருந்து விலகிப் போய், பெரியார் நிறுவனங்களை வர்த்தகமாக்கி, அரசியல் அதிகார போதையில் மூழ்கி, கல்வி வர்த்தக நிறுவனங்களின் அதிபர் என்ற அதிகாரத்தில், எந்த முறைகேடு களையும் செய்ய முடியும் என்ற இறுமாப்பு களுக்கு எதிராக நீதிமன்றம் வழங்கியுள்ள தீர்ப்பு பெரியாரியல்வாதிகளை மகிழ்ச்சிக்கடலில் ஆழ்த்தியுள்ளது என்றே கூற வேண்டும்.

**– நமது செய்தியாளர்**

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted on: 18th June 2010

பெறுநர்

OWNER & PUBLISHER : ANOOR JAGADEESAN, PUBLISHED AT 15, MYLAPPAR STREET, AYANAVARAM, CHENNAI - 600 023. PRINTED BY : S. THEESMAS AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014. EDITOR : VIDUTHALAI RAJENDRAN.




புரட்சிப்

# பெரியார் முழக்கம்

பெரியார் திராவிடர் கழக வார ஏடு

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | www.puratchiperiyarmuzhakkam.com | திருவள்ளுவர் ஆண்டு 2041 | ஜூன் 24, 2010 | புரட்சி 9 | முழக்கம் 24 | விலை: ரூ.2.50


# குடிஅரசு தொகுப்புப் பணிகள்: நடந்தது என்ன?

*உயர்நீதிமன்றத் தீர்ப்புக் கிடைத்தவுடன், பெரியார் திராவிடர் கழகம் 1925 முதல் 1938 வரை பெரியாரின் எழுத்தும் பேச்சும் அடங்கிய 27 தொகுதிகளை வெளியிட்டு, முன் பதிவு செய்த தோழர்களுக்கு தொகுப்புகளை வழங்கி வருகிறது. இந்த நிலையில் ‘குடிஅரசு’ தொகுப்புப் பணிகள் பல்வேறு தடைகளை எதிர்கொண்டு, நடந்த நிகழ்வுகளை முதல் தொகுப்பில் விரிவாக விளக்கப்பட்டுள்ளது. ‘கூட்டுழைப்பின் விளைச்சல்’ எனும் தலைப்பில் மூத்த தலைவர் திருவாரூர் தங்கராசு, கழகப் பொதுச் செயலாளர் கோவை இராமகிருட்டிணன், துணைத் தலைவர் ஆனூர் ஜெகதீசன், வழக்கறிஞர் துரைசாமி ஆகியோர் இந்த எதிர்நீச்சல் பணியைப் பதிவு செய்துள்ளனர். பெரியார் முழக்கம் வாசகர்களுக்காக ‘குடிஅரசு’ முதல் தொகுப்பில் வெளி வந்த அந்த முன்னுரையை இங்கு வெளியிடுகிறோம்.*

1925 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டு 1949 நவம்பர் முடிய வெளிவந்த ‘குடிஅரசு’ வார ஏடு தமிழக வரலாற்றுப் போக்கையும் அதனோடு தொடர்புள்ள இந்திய வரலாற்றுப் போக்கையும் சமூகப் புரட்சிப் பார்வையில் புரிந்து கொள்ளவும்; பெரியாரின் பொது வாழ்வில் நிகழ்ந்த இயங்கியல் மாற்றங்களையும், கொள்கை, வேலைத் திட்ட வளர்ச்சிப் போக்குகளையும் வெளிப்படுத்தவுமான மிகச் சிறந்த ஆவணமாகும்.

பெரியார் காங்கிரசில் பணியாற்றிய காலகட்டம் நெடுகிலும் தொய்வின்றி வலியுறுத்தி வந்த வகுப்புரிமை கோரிக்கைகள் சூழ்ச்சியாக ஏமாற்றப்பட்டே வந்ததன் உச்சமாய் 1925 நவம்பர் 21, 22 நாள்களில் காஞ்சிபுரத்தில் நடைபெற்ற மாநில மாநாட்டில் கட்சி விதிகளுக்கு இணங்க உரிய எண்ணிக்கை உறுப்பினர்களுக்கும் மேலதிகமாய் ஒப்புதல் பெற்று முன் வைத்த வகுப்புரிமைத் தீர்மானம் விவாதத் துக்குக்கூட எடுத்துக் கொள்ளப்படாமல் புறக் கணிக்கப்பட்டதால் தன் நண்பர்களுடன் வெளியேறி சுயமரியாதை இயக்கம் கண்டார்.

சுயமரியாதை இயக்கம் சுடர்விட்டுப் பரவி காட்டாற்று வெள்ளம்போல் சமு தாயக் கசடுகளை அடித்துச் சிதைத்தவாறு முழு வீச்சோடு களமிறங்கியது. 1938 டிசம்பர் இறுதி நாட்களில் சென்னையில் நடைபெற்ற மாநாட்டில் நீதிக்கட்சி என்னும் தென் இந்திய நல உரிமைச் சங்கத்தின் தலைவராக இந்தி எதிர்ப்புக்காய் சிறைப் பட்டிருந்த நிலையிலேயே பெரியார் தேர்ந் தெடுக்கப்பட்டார். முற்று முழுதாக வேறு திசை விலகலின்றி சமுதாய சமத்துவம், பகுத்தறிவுப் பணிகளை மட்டுமே ஆற்றி வந்த அருமையான காலகட்டம் 1925 முதல் 1938 வரையிலான காலமாகும். இந்த கால இடைவெளியில் ‘குடிஅரசு’ ஏட்டில் வெளி வந்துள்ள பெரியாரின் எழுத்துகளையும் பேச்சுகளையும் தொகுத்து வெளியிட வேண்டுமென பெரியார் திராவிடர் கழகம் விரும்பியது. 2000 ஜூன் மாதத்தில் புதிய அமைப்பாகத் தோன்றிய ‘தந்தை பெரியார் திராவிடர் கழகம்’ (தற்போது ‘பெரியார் திராவிடர் கழகம்’) 2003 ஆம் ஆண்டு நவம்பரில் ‘குடிஅரசு 1925’ என்ற முதல் தொகுதியை வெளியிட்டது. 2005 ஆம் ஆண்டின் இரு நிகழ்வுகளில் 1926 ஆம் ஆண்டின் தொகுப்புகளை இரண்டு தொகுதிகளாக வெளியிட்டது.

2006 ஆம் ஆண்டில் பெரியாரின் நினைவு நாளாம் டிசம்பர் 24 இல் 1927 ஆம் ஆண்டின் இரண்டு தொகுப்புகளை வெளியிட எல்லா முன்னேற்பாடுகளும் முடிந்த நிலையில்தான் சீரங்கத்தில் திராவிடர் கழகத்தால் நிறுவப்பட்ட பெரியாரின் சிலையை இந்து மத வெறியர்கள் சிதைத்த சம்பவம் நிகழ்ந்தது. அதைத் தொடர்ந்து பெரியார் திராவிடர் கழகத்தினர் நிகழ்த்திய எதிர் வினைகளுக்காக 50-க்கும் மேற்பட்ட தோழர்கள் தளைப்படுத்தப்பட்டதும் குறிப்பாக, ஏழு தோழர்கள் மீது விசாரணை இன்றி ஓராண்டு சிறை வைக்க அதிகாரமளிக்கும் தேசியப் பாது காப்புச் சட்டப் பிரிவுகளின் கீழ் சிறைப்படுத்தப் பட்டதுமான நிகழ்வுகள் வெளியீட்டு முயற்சியைத் தள்ளிப்போடச் செய்து விட்டன.

ஒருவாறு வழக்குகளை வென்று தோழர்கள் விடுதலையான பின்னர் 1938 ஆம் ஆண்டு வரையிலான ‘குடி அரசு’ தொகுப்புகளை ஒரே முறையில் வெளியிட்டு விடலாமே என்ற சிந்தனை பல்வேறு தரப்புகளிலிருந்து கிளம்பி, இறுதியில் அவ்வாறே வெளியிட்டு விடலாம் என்று தீர்மானித்தோம்.

1983, 1984 ஆண்டுகளில் தொகுத்து எழுதியவற்றை படி எடுத்து வைத்திருந்த பெரியார் மையத்தின் முன்னணி உறுப்பினர்களான தஞ்சை வழக்குரைஞர் பாண்டியன், திருச்சி சமுத்திரராசன், இலால்குடி நாகராசன் ஆகியோர் கழகத்தின் மீது நம்பிக்கை வைத்து தங்களிடமிருந்து தொகுப்புகளை கையளித்தமையே இத்தொகுப்புப் பணியின் தொடக்கமாயிற்று. இம் முயற்சிகள் தொடர்ந்த போது, இடையில் தான் திரட்டி வைத்திருந்த குடி அரசு இதழ்களின் தொகுப்புகளையும் கூடுதல் தரவுகளாய்ப் பயன்படுத்தி இந்தத் தொகுப்புப் பணியைமேலும் சிறப்பாக வெளிக்கொணர துணை நிற்பதாக வாக்களித்து இணைந்தார் தஞ்சை தோழர் இரத்தினகிரி. நாமும் ஆர்வமிக்க பல பெரியாரியல் பற்றாளர்களும் இப்பணிக்காக மூன்றரை இலட்சம் ரூபாயை தோழர் இரத்தினகிரி அவர்களிடம் தந்தோம். அதன் பின்னர் அவர், தான் திரட்டிய குடிஅரசு இதழ்களைப் பயன்படுத்துவதற்காகவும் தனது கடந்த கால உழைப்பு, செலவினங்களுக்காகவும் அய்ந்து இலட்ச ரூபாய் கேட்டதற்கு நாமும் இணங்கினோம். பின்னர் கேட்புத் தொகை பல மடங்குகள் உயர்ந்தது. அதன் பொருந்தாமையையும் இயலாமையையும் எடுத்துக் கூறினோம். நாங்கள் அளித்த தொகையின் ஒரு பகுதியைக் கொண்டு ஒளி அச்சு செய்திருந்த 1931, 1933 - 1938 ஆகிய ஏழு ஆண்டுகளுக்கான குறுந் தகடுகளை எங்களிடம் கொடுக்காமல் இழுத்தடித்த படியே இருந்தார்.

2008 ஜூலை இறுதி வரை இந்த இழுத்தடிப்பு தொடர்ந்தது. இனி அவரிடமிருந்து குறுந்தகடுகள் கிடைக்கவே கிடைக்காது என்பதைப் புரிந்து கொண்ட நிலையில்தான் ஏற்கனவே ஈடுபட்டு நிறுத்தி வைத்திருந்த குடிஅரசு இதழ்களை திரட்டும் பணியில் தொகுப்புக் குழு முழு வீச்சில் இறங்கியது. இந்த முயற்சிக்கு உதவிட முன் வந்த நல்ல உள்ளங்களை நன்றியுடன் நினைவு கூர் கிறோம்.

முதலில் திராவிட இயக்க மூத்த எழுத்தாளர் ஏ.எஸ். வேணு அவர்களின் நூல்களை பொறுப்புடன் பராமரித்து வரும் காஞ்சிபுரம் திரு. கே.பி. திருஞான சம்பந்தம் அவர்களை அணுகி 1936, 1938 ஆகஸ்ட் - டிசம்பர் முடிய உள்ள குடிஅரசு மற்றும் பகுத்தறிவு இதழ்களைப் பெற்றோம். அதைத் தொடர்ந்து மதுரை யாதவர் கல்லூரியின் தமிழ்த் துறையில் பாதுகாத்து வைத்திருந்த 1936 இன் பிற்பாதி, 1937 முழுதும், 1938 முதல் ஏழு மாத கால குடிஅரசு இதழ்களை தஞ்சை தமிழ்ப் பல்கலைக் கழகத்தின் நாடகத் துறைத் தலைவர் பேராசிரியர் மு. இராமசாமி அவர்களின் வழிகாட்டுதலில் யாதவர் கல்லூரி தமிழ்த் துறையில் பணியாற்றும் பேராசிரியர் மோகன் அவர்களின் கனிவு மிகுந்த ஒத்துழைப்பால் படி எடுத்துப் பெற்றோம்.

புகழ் பெற்ற பட்டிமன்ற உரையாளர் மதுரை பேராசிரியர் சாலமன் பாப்பையா அவர்கள் தான் போற்றிப் பாதுகாத்து வைத்திருந்த 1928, 1931, 1933 ஆகிய ஆண்டுகளுக்கான குடிஅரசு இதழ்களைக் கொடுத்து அருளினார். அதன்பின் “நாடார் குல மித்திரன்” எனும் சுயமரியாதை இயக்க ஆதரவு ஏட்டினை நடத்தி வந்த மதுரை கு.அ.முத்து நாடார் அவர்கள் திரட்டி வைத்திருந்த 1934, 1935, 1939, 1940 ஆண்டுகளுக்கான குடிஅரசு இதழ்களை அவரது மகன் திரு. முத்து முருகன் அவர்களின் மகள் மு. அல்லிராணி, மருமகன் சக்தி வடிவேல் ஆகியோர் கொடுத்து உதவினர். அதோடு நாடார்குல மித்திரன் ஏடு வெளியான பத்து ஆண்டுகளுக்கான இதழ்களை குறுந்தகடு களாக்கியும் அளித்தார். அது

(2 ஆம் பக்கம்)

## அண்ணா நடத்திய உலகத் தமிழ் மாநாடு பற்றி பெரியார்!

*“உலகத் தமிழ் மாநாடாம்! வெங்காய மாநாடாம். இது எதற்கு? கும்பகோணம் மாமாங்கத்துக்கும் இதற்கும் என்ன வித்தியாசம் இருக்கப் போகிறது. காங்கிரசைவிட, இந்த மந்திரிசபை தேவலாம் என்கிறார்கள். இந்த நேரத்தில் ஏன் இந்த கூத்து? கனம் அண்ணாதுரை 1972 இல் பதவிக்கு வரமாட்டேன் என்று சொல்லிவிடட்டும்? உலகத் தமிழ்மாநாடு கூடிக் கலைந்த பின் சூத்திரன், சூத்திரனாகத் தானே இருக்கப் போகிறான்? இழிவு ஒழியப் போகிறதா? கண்ணகி சிலையும் கம்பன் சிலையும் எதற்கு? இவர்கள் நமது இனப் பெருமையை ஒழித்தவர்கள் அல்லவா?*

**– பெரியார் ‘விடுதலை’ 15.12.1967**

*இது அண்ணாவை ஆதரித்த போதே உலகத் தமிழ் மாநாடு பற்றி பெரியார் கூறிய கருத்து. பெரியார் தனக்கு மட்டுமே சொந்தம் என்றும், மற்றவர்கள் பெரியார் கொள்கையைத் திரித்து விடுவார்கள் என்றும் கூறும் வீரமணி, இப்போது செம்மொழி மாநாட்டுக்கு வாழ்த்துப் பாடிக் கொண் டிருக்கிறார். இவர்தான் பெரியார் கொள்கையை திரிபுவாதிகளிடமிருந்து காப்பவராம்!*

# கூட்டு உழைப்பில் கிடைத்த விளைச்சல் - இத்தொகுப்பு

*(முதல் பக்கத் தொடர்ச்சி)*

மட்டுமின்றி கிடைத்ததற்கரிய அறுபதுக்கும் அதிக மான பழைய சுயமரியாதை இயக்க வெளியீடுகளை தானே படி எடுத்தும் கொடுத்தார்.

கழகத்தின் கோவை வடக்கு மாவட்டத் தலை வராக நெடுங்காலம் பணி யாற்றியவரும் ஓய்வு பெற்ற நூலகருமான தோழர் மேட்டுப்பாளையம் இராமச்சந்திரன் அவர்கள் 1927, 1929, 1930 ஆகிய மூன்றாண்டுகளுக்கான குடிஅரசு இதழ்களைத் தந்தார்.

முழு வீச்சில் தொகுப்புப் பணிகளும், அச்சுப் பணி களும், முன் வெளியீட்டுத் திட்டப் பணிகளும் நடந்து வந்த நிலையில் திராவிடர் கழகத் தலைவர் டாக்டர் கி.வீரமணி அவர்கள் பெரியாரின் அனைத்து நூல்களும் தங்களது அறிவுசார் சொத்து எனவும், யாரும் வெளியிடலாகாது எனவும் அறிக்கை வெளி யிட்டார்.

இவ்வறிக்கைக்குப் பின்னரே கழகத்தின் வெளியீட்டு முயற்சிகளை அறிந்த ஆத்தூர் திரு. மவுலானா சாகிப்ஜி அவர்களும், சென்னை திரு. ஞாலன் சுப்பிரமணியம் அவர்களும், அவர் களாகவே தொடர்பு கொண்டு தங்களிடமிருந்த ‘குடிஅரசு’ இதழ்களையும், சில தொடக்கக்கால சுயமரியாதை இயக்க நூற் தொகுப்புகளையும் மனமுவந்து அனுப்பி வைத்தார்கள்.

நாகை சிறுதும்பூர் தென்னவன் அவர்களின் புதல்வரும், தஞ்சை தமிழ்ப் பல்கலைக்கழகப் பேராசிரியருமான வெற்றிச் செல்வன், தனது தந்தையாரின் நூல் சேமிப்புகளிலிருந்து நமக்கு அனுப்ப குடிஅரசு இதழ்களைத் தேடி எடுத்த போது, அவை சிதைந்தும் நொறுங்கியுமே கிடந்தன. பெரியார் இயக்கத்தின் வரலாற்றுப் பதிவான குடிஅரசை உண்மையான பல பெரியார் தொண்டர்கள் காலம் காலமாக பாதுகாப்பதில் காட்டிய உறுதியும், ஆர்வமும் எங்களை மெய் சிலிர்க்க வைத்தது. என்றென்றும் பயன்படும் நிரந்தரப் பதிவான இவைகள் அச்சேற்றப்படாமல் இவ் அவலத்துக்கு உள்ளாகிவிட்டனவே என்ற உணர்வு இந்தப் பணிகளைச் செய்து முடிப்பதற்கு எங்களை மேலும் உந்தித் தள்ளியது. ஒரு கட்டுரையை முழுமையாகப் பெற மூன்று நான்கு இதழ்களோடு ஒப்பிட்டே இறுதியாக்க வேண்டி யிருந்தது. இதழ்கள் கிழிந்தும் சில இடங்களில் சிதைந்தும் எழுத்துகள் மறைந்துமே இருந்தன. எண்பது ஆண்டுகள் கடந்த நிலையில் வேறு எப்படித்தான் அவை இருக்க முடியும்? விடுபட்ட பல கண்ணிகளை முழுமையாக்குவதில் தொடக்க முயற்சியிலிருந்து உதவிக்கரம் நீட்டியவை ரோஜா முத்தையா ஆய்வு நூலகமும் மறைமலை அடிகள் நூலகமுமே ஆகும்.

தங்கள் பெயரை வெளிப்படுத்த விரும்பாத (திராவிடர் கழகத் தொடர்புடன் இருப்பதால்) சில பேருள்ளங்கள் புரட்சி, குடிஅரசு, பகுத்தறிவு ஏடுகளின் படிகளைத் தந்து உதவியதும் நன்றியுடன் சுட்டிக்காட்டப்பட வேண்டும்.

இவற்றையெல்லாம் தேடிப் போய் படி எடுத்து வந்து உதவிய தோழர்கள் சென்னை தபசி. குமரன், மதுரை முருகேசன், செம்பட்டி இராசா, வின் சென்ட், நக்கீரன் செய்தியாளர் சிவ சுப்பிரமணியன், தஞ்சை பசு. கவுதமன் ஆகியோரின் பங்களிப்பு அளப்பரியது.

தஞ்சை நாவலர் நா.மு.வேங்கடசாமி நாட்டார் திருவருள் கல்லூரி நிர்வாக அறங்காவலர் பேரா சிரியர் பி.விருத்தாசலனார், முதல்வர் முனைவர் கு. திருமாறன், தஞ்சை பெ. மருதவாணன், குப்பு. வீரமணி, முனைவர் க. நெடுஞ்செழியன், முனைவர் இரா. சக்குபாய், முனைவர் கு.மா. இராமாத்தாள், கோவை திரு. நடராசன், பொள்ளாச்சி மா. உமாபதி, புலவர் வீர. பிராட்லா, பொறிஞர் முத்து. மணிவண்ணன், முனைவர் வி.பாரி, முனைவர் வி. தமிழ்ச்செல்வன், பொறிஞர் வி. விடுதலைவேந்தன் ஆகியோர் குடி அரசு தொகுதிகள் வெளிவர வேண்டும் என்ற பெரும் வேட்கையோடு இப் பணிகளில் காட்டிய ஆர்வமும் கொடுத்த ஒத்துழைப்பும் தொகுப்புக் குழுவுக்கு பெரும் ஊக்கமாய் அமைந்தது. தஞ்சை நாட்டார் திருவருள் கல்லூரியில் இப்பணியில் ஈடுபட்ட திருவாளர்கள் வெ.வரதராசன், நா. அருண்குமார், முனைவர் மு.இளமுருகன், முனைவர் வி.தமிழழகன், முனைவர் நா. பெரியசாமி, கோபி ஆனந்த், கவுதமன், மயிலாடுதுறை இர. இரசீத்கான் போன்றோரும் நாட்டார் கல்லூரி மாணவர்களும் ஆற்றிய அரும்பணிகள் நன்றிக்கு உரியன.

தஞ்சை தோழர் இரத்தினகிரி உருவாக்கிய இடர்ப்பாடுகளால் தஞ்சையிலிருந்து விடுவித்துக் கொண்டு மீண்டும் மேட்டூரிலிருந்து பணிகளைத் தொடர வேண்டியதாயிற்று மேட்டூர் அணை தாய்த் தமிழ்ப் பள்ளியில் முதற்கட்ட மெய்ப்பு பார்க்கும் பணிகள் 2008 மே மாதத்தில் தொடங்கின. சுமார் ஒரு மாத காலம் இப்பணி தொடர்ந்தது. கழகத் தலைவர் தோழர் கொளத்தூர் மணி தொகுப்புக் குழுவுக்குத் தலைமை ஏற்று முழு வீச்சில் செயல்பட்டார். பிழை திருத்தல், ஒப்பிட்டு சரி பார்த்தல் என்று மே மாதம் அவர் தொடங்கிய பணி இதழ் தயாரித்து முடியும் காலம் வரை தொடர்ந்தது. ஒளி அச்சு செய்யும் பணியில் தோழர்கள் சு. சம்பத்குமார், நந்தகுமார், ஆரோக்கியசாமி, ஜோசப், பார்த்தீபன் ஆகியோர் கடுமையாக உழைத்தனர். மெய்ப்புப் பார்த்தல் உள்ளிட்ட பல்வேறு பணிகளில் கழகத் தோழர்கள் மே.கா.கிட்டு, இரா.முத்துக்குமார், இலக்கம்பட்டி அ. குமார், மே.கா.காந்தி, சா. ஜஸ்டின்ராசு, கொளத்தூர் ஆசிரியர் செ.செல்வேந்திரன், பெ. ஆசைத்தம்பி, பொறியாளர் சி.கோவிந்தராசு, மாணவத் தோழர்கள் பா. அறிவுச் செல்வன், மா. பிரபாகரன் ஆகியோர் முழு நேரமும் தொடர்ந்து பணியாற்றினர். இடையில் மெய்ப்புப் பணியில் உதவிட புலவர் செந்தலை ந. கவுதமன், சூலூர் கே.தேவராசு, கோபி நேதா, ஆசைத்தம்பி ஆகியோர் சில நாள்கள் மேட்டூர் பள்ளியிலேயே தங்கி வசதிக் குறைவுகளையும் பொருட்படுத்தாது மனநிறைவோடு பங்களிப்பை வழங்கினர்.

தொகுப்புப் பணியின் ஒருங்கிணைப்பாளராக தோழர் ப. தமிழ்க்குரிசில் செலுத்திய உழைப்பும் சிந்தனையும் அளப்பரியதாகும். கண்டிப்பு நிறைந்த ஆசிரியராக அவர் வழி நடத்தினார். கடமையாற்றிய கழகத்தினர் ஏதேனும் ஒரு நாள் விடுப்போ அல்லது ஒரு மணி நேர தாமத வருகைக்கோ பள்ளி மாணவர்களைப்போல் தயங்கித் தயங்கி அவரிடம் அனுமதி கேட்பதும் அவரோ கோரிக்கையில் பாதியை அதுவும் தயக்கத்துடன் அனுமதித்ததை யெல்லாம் இப்போது நினைத்தால்கூட நகைப்பை ஏற்படுத்தக்கூடியவை. மேட்டூர் தாய்த்தமிழ்ப் பள்ளியில் விடுமுறை காலம் முழுதும் தொடர்ந்த இப்பணிகள் பள்ளி திறப்பிற்குப் பிறகு கொளத்தூர் பெரியார் படிப்பகத்திற்கு இடமாற்றம் செய்யப் பட்டன.

ஒளி அச்சுப் பணிகளை மீண்டும் புதிதாக மேற் கொள்ள வேண்டி இருந்ததால் அந்தப் பணிகள் சேலம், கோவை நகர்களிலும் நடந்தன. 1931, 1933 ஆண்டுகளுக்கான ஒளி அச்சுப் பணிகளை சேலத்தில் தோழர்கள் அடல் வரைகலை சரவணன், இரவி, கண்ணன் ஆகியோர் செய்து முடித்தனர். கொளத்தூருக்கும் சேலத்துக்கும் இடையே நடந்த இப்பணிகளின் இணைப்பாளராக அங்கிருந்து இங்கும் இங்கிருந்து அங்குமாக படிகளை வாங்கித் தந்து இரண்டாம் திருத்தம், மூன்றாம் திருத்தம் என்று பணி முடியும்வரை சலிப்பின்றி செயல் பட்டவர் சேலம் நகர கழகத்தின் செயலாளர் தோழர் இரா. டேவிட் ஆவார்.

1934, 1935, 1936, 1937, 1938 ஆண்டுகளுக்கான ஒளி அச்சுப் பணிகளை கோவை ‘அய்ரீஸ் கிராபிக்ஸ்’ நிறுவன உரிமையாளர் தோழர் இராசாராம் - சீதா இணையர் மேற்கொண்டனர். தோழர் இராசாராம் பெரியாரியலாளர், பெரியார் மையத்தில் செயல் பட்டவர். கோவை விடியல் பதிப்பக உரிமையாளர் தோழர் சிவா இந்தப் பணிக்காக தமது அலுவலகத்தையே தந்து உதவினார். தோழர்கள் கொளத்தூர் மணி, ப. தமிழ்க்குரிசில், இரா. முத்துக்குமார், கோவை சட்டக் கல்லூரி கழக மாணவத் தோழர்கள் பன்னீர்செல்வம், சேகர் ஆகியோர் இரவும் பகலுமாக மெய்ப்பு பணியில் ஈடுபட்டிருந்தனர். அப்போது தோழர்களுக்கான உணவை தங்கள் இல்லத்தில் தயாரித்துக் கொண்டு வந்து தோழர்களுக்கு வழங்கிய விடியல் விஜயா அவர்களின் துணைவர் தோழர் தண்டபாணியை மறக்க முடியாது. இணையர்களின் ஆதரவும் அன்பும் பணிச் சுமைகளால் எழுந்த சோர்வுகளைக் களைந்து உற்சாகத்தை தந்தபோது அதிர்ச்சியான ஒரு செய்தி வந்து சேர்ந்தது. முதல் நாள் இரவு 12 மணி வரை எங்களுடன் இருந்து உணவு பரிமாறி இல்லம் திரும்பிய தோழர் தண்டபாணி விடியற் காலை மாரடைப்பால் முடிவெய்திய அதிர்ச்சி செய்தி எங்களைக் கலங்கச் செய்துவிட்டது. முதல் நாள் எங்களிடம் அவர் பெற்ற விடை நிரந்தர விடையாகுமென்று நாங்கள் நினைத்துப் பார்க்கவே இல்லை.

கொளத்தூர் பெரியார் படிப்பகத்தில்தான் கணினியாக்கம் மற்றும் தொகுப்புப் பணிகள் முழுமையாக நடந்தன. கீழ்த்தளத்திலும் முதல் தளத்திலும் பணிகள் எப்போதும் சுறுசுறுப்பாக நடந்து கொண்டே இருக்கும். காலை பத்து மணிக்குத் தொடங்கும் பணிகள் மறுநாள் அதி காலை 2 மணி வரை நீடிக்கும். அதையும் தாண்டி 4 மணி வரை நீடித்த நாட்களும் உண்டு. சுமார் மூன்று மாத காலம் பணிகள் தொய்வின்றித் தொடர்ந்தன. தோழர்கள் கொளத்தூர் மணி, ப. தமிழ்க்குரிசில், இரா.முத்துக்குமார், மே.கா.கிட்டு, கொளத்தூர் தா.செ.பழனிச்சாமி, சா.ஜஸ்டின்ராஜ், மே.கா. காந்தி, ஆசிரியர் செ.செல்வேந்திரன், காவலாண்டி யூர் ஈ.கனிகாச்செல்வன், மேச்சேரி ஆசிரியர் ரமேசு, இளம்பிள்ளை கோகுலக்கண்ணன், காவ லாண்டியூர் கண்ணன், த.விசுவநாதன் ஆகியோர் முழுமையாகப் பணியாற்றினர். தோழர் சூலூர் வீரமணி, தோழியர்கள் சீமா, கலைச்செல்வி, மாதவி ஆகியோரும் அவ்வப்போது வந்து பணியாற்றிச் சென்றனர். பள்ளி, கல்லூரி மாணவர்கள் பலரும் ஆர்வத்துடன் உதவிட முன் வந்தனர். தஞ்சை தோழர் பசு.கவுதமன் தொகுப்புப் பணிக்கு பல்வேறு வழிகளில் உதவியதோடு அன்றாடம் தொலை பேசியில் தொடர்பு கொண்டு செயலூக்கியாய் கடமையாற்றினார்.

கணினியாக்கப் பணிகளை அதுவரை திருச்சியில் தனது இல்லத்திலிருந்தே செய்து வந்த தோழர் தாமரைக்கண்ணன் நிரந்தரவாசம் புரிய கொளத்தூர் வந்து சேர்ந்தார். மின்சாரம் இல்லாத வேளையில் பணிகள் தடைபடக் கூடாது என்பதற்காக மின்னாக்கி (ஜெனரேட்டர்) எப்போதும் தயார் நிலையில் இருந்தது. இதற்கான பொறுப்பை ஓவியர் மூர்த்தி, கராத்தே குமார் இருவரும் ஏற்றனர். இறுதிக் கட்டப்பணி நெருங்கியபோது, கழகத் தோழர்களே தங்களது சொந்தக் கணினிகளைக் கொண்டு வந்தனர். நான்கு கணினிகளில் இரவும் பகலும் வேலைகள் நடந்தன. கணினியாக்கத்தில் தோழர் தாமரைக்கண்ணனுக்கு உதவியாக சென்னை தபசி குமரன், திருப்பூர் இராவணன், மேட்டூர் வானவில் சம்பத், கொளத்தூர் சூர்யா, அச்சக உரிமையாளர் சுப்பு, காவலாண்டியூர் சசி, கபிலன் ஸ்டுடியோ விஜய குமார் ஆகியோர் செயல்பட்டனர்.

படிப்பகத்தில் இருபது தோழர்கள் எப்போதும் முழு நேரமும் பணியில் இருப்பார்கள். இவர்கள் அனைவருக்கும் உணவகங்கள் வழியாக உணவு ஏற்பாடு செய்வது கூடுதல் நிதிச் சுமையுமாகுமே என்று கவலையோடு சிந்தித்த தோழர்கள், ஒவ்வொரு நாளும் ஒரு கழகக் குடும்பம் உணவு வழங்குவதென முடிவு செய்தனர். கழகத் தோழர்கள் மாவட்டச் செயலாளர் டைகர் பாலன், ப. சூரியக்குமார், அருள்சுந்தரம், பெரியசாமி, நகரச் செயலாளர் பெ. இளஞ்செழியன், காவலாண்டியூர் ஈசுவரன் ஆகியோர் இந்த ஏற்பாடுகளுக்குப் பொறுப்பேற்றனர். கழகக் குடும்பத்தினரும், ஆதர வாளர்களும் வகை வகையாக உணவு தயாரித்து, தலைவியும், தலைவனும், குழந்தைகளுமாய் வந்து அன்புடன் பரிமாறிய தோழமையும் பாசமும் பெரியார் குடும்பங்களின் நல்லுறவையும் பாசப் பிணைப்பையும் உறுதியாக்கி நெகிழச் செய்தன. தொலைதூரக் கிராமங்களில் இருந்து கழகக் குடும்பத்தினர் உணவு தயாரித்து பாத்திரங்களில் நிரப்பி பேருந்துகளிலும் வாகனங்களிலும் கொண்டு வந்து பரிமாறிய நாள்களின் எண்ணிக்கை அதிக

*(3 ஆம் பக்கம்)*

## நீர் ஆதாரத் திட்டத்தை வலியுறுத்தி ஈரோட்டில் கழகம் ஆர்ப்பாட்டம்



24.05.2010 அன்று திங்கட் கிழமை காலை 11 மணிக்கு ஈரோட்டிலுள்ள தலைமை அஞ்சலகம் முன்பு ஈரோடு மாவட்டக் கழகத்தின் சார்பாக,

ஈரோடு தொடங்கி, கோபி - சத்தி வழியாக மேட்டுப்பாளையம் வரை தொடர்வண்டி (ரயில்) விடக் கோரியும்,

நம்பியூர், குன்னத்தூர், கொளப்பலூர், சிறுவலூர், சீனாபுரம், திங்களூர், பெருந்துறை உள்ளிட்ட பகுதிகளில் வறட்சிக் காரணமாக ஒவ்வொரு ஆண்டும் நிலத்தடி நீர் கீழே போய்க் கொண்டுள்ளது. 1000 அடி வரை ஆழ் குழாய்க் கிணறு அமைத்தும் தண்ணீர் கிடைப்பதில்லை.

ஆகவே இங்குள்ள மக்களின் குடிநீர், விவசாயத் தேவைகளை பூர்த்திச் செய்யும் முகமாக குருமந்தூரில் இருந்து ஒரு கிளை வாய்க்கால் அமைத்தோ அல்லது அத்திக்கடவு நீர் திட்டத்தை இப்பகுதி வரை நீட்டித்தோ, விரிவு படுத்தியோ, இங்குள்ள மக்களின் அடிப்படைப் பிரச்னையாக உள்ள நீராதாரத் திட்டத்தை செய்து தரக் கோரியும், இப்பகுதிகளிலுள்ள குளம், குட்டைகளில் ஆண்டுக்கு மூன்று முறை தண்ணீர் விட்டு நிரப்பி உதவிடக் கோரியும், அடையாள ஆர்ப்பாட்டம், மாவட்டச் செயலாளர் இராம.இளங்கோவன் தலைமையிலும், மாவட்டத் தலைவர் நாத்திக ஜோதி, ஈரோடு இரத்தினசாமி, கா.த. வேலுச்சாமி (மாவட்ட துணைத் தலைவர்), குமரகுருபரன் (மாவட்ட அமைப்பாளர்) ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது.

மாவட்ட கழகத் தோழர்கள் பெருமளவு கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

## ஆக.15 போராட்டம்: திருச்சி, அரியலூர் மாவட்டக் கழகங்கள் தீவிரம்



4.6.2010 வெள்ளிக்கிழமை அன்று திருச்சி மாவட்டக் கலந்துரையாடல் கூட்டம், கழகத் தலைவர் கொளத்தூர் மணி தலைமையில், திருச்சி ஷகிலா லாட்ஜில் மாலை 6 மணிக்கு நடைபெற்றது. திருச்சி - கிறித்துவ இடுகாட்டில் உள்ள தீண்டாமை சுவரை அகற்றக் கோரி ஆகஸ்டு 15 அன்று தீண்டாமை ஒழிப்புப் பிரிவு அலுவலகத்தை பூட்டும் போராட்டம் நடத்துவது குறித்து விரிவாக பேசப்பட்டது. கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன:

ஆகஸ்ட் 15 இல் தீண்டாமை சுவர் அகற்றக் கோரி 15.8.2010 அன்று தீண்டாமை ஒழிப்பு பிரிவு காவல் அலுவலகத்தை இழுத்துப் பூட்டும் போராட்டத்தை விளக்கி, திருச்சியில் ஜூன் 15 முதல் ஜூலை 15 வரை சுவரெழுத்துப் பிரச்சாரம் செய்வது என தீர்மானிக்கப்பட்டது. ஜூலை 15 முதல் திருச்சி மாவட்டம் முழுவதும் தெருமுனைப் பிரச்சாரம் செய்வது என தீர்மானிக்கப்பட்டது.

திருச்சி மாவட்டத்தில் ஆகஸ்ட் 15 போராட்டத்திற்கான பணிகளை செய்ய கீழ்க்கண்ட தோழர்களை கொண்ட குழு அமைக்கப்பட்டது. புதியவன், ஆறுமுகம், குமார், பொன்னுசாமி, பழனிவேல். இவர்களுடன் மாவட்ட கழக பொறுப்பாளர்கள் இணைந்து செயல்படுவது என்று தீர்மானிக்கப்பட்டது.

போராட்ட நிதியாக வே. இராசு, ரூ.10 ஆயிரமும், ஜெகன்நாதன் ரூ.5 ஆயிரமும், முத்து ரூ.2 ஆயிரமும் வழங்குவதாக உறுதியளித்தமைக்கு பெரியார் திராவிடர் கழகம் நன்றியையும் பாராட்டுதலையும் தெரிவித்துக் கொள்கிறது.

போராட்ட நிதிக்காக புதிய வங்கி கணக்கை உருவாக்கி, மனோகரன், புதியவன் இருவரும் இணைந்து இயக்குவது என்றும் முடிவு செய்யப்பட்டது.

மாவட்டத் தலைவர் செ.த. இராசேந்திரன், மாவட்ட செயலாளர் மு.மனோ கரன், மாவட்ட பொருளாளர் த. புதியவன், தாமரைக்கண்ணன், எஸ்.எஸ்.முத்து,

(4 ஆம் பக்கம்)

# தடைகளுக்கிடையே நடந்த கடும்பணிகள்

(2ஆம் பக்கத் தொடர்ச்சி)

மாகும். கழகத்தோழர் இராமமூர்த்தி தனது ஆயுள் காப்பீட்டு முகவர் பணிகளுக்கிடையே நேரம் தவறாது உரியநேரத்தில் உணவும் தேநீரும் வழங்கினார்.

தொடக்கக்கால செலவுகளுக்காக தேவைப்பட்ட பெருந்தொகையை வழங்கி உதவிய மேட்டூர் தொழிலதிபர் சி.இரத்தினசாமி, தோழர்கள் கொளத்தூர் இரா.நல்லதம்பி, கும்பகோணம் சிற்பி இராசன், மேச்சேரி கோ. தமிழரசன் ஆகியோரின் பேருள்ளத்துக்கு நெஞ்சார நன்றி கூறி மகிழ்கிறோம்.

இத்திட்டத்திற்கு நிதி திரட்டும் வழியாக நாம் முன் வெளியீட்டுத் திட்டத்தை அறிவித்தபோது அதை ஆர்வத்துடன் வரவேற்று முன் பணம் அனுப்பி பதிவு செய்து கொண்ட அனைத்துத் தோழர்களுக்கும் வெளியீட்டு நிதியாக ஒரு இலட்சம் ரூபாய்களை வழங்கிய தஞ்சை மாவட்டக் கழகம், ஐம்பதினாயிரம் ரூபாய்களை வழங்கிய மேட்டூர் ஆர்.எஸ். கிளைக் கழகத்துக்கும் நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறோம். இதன் வழியாகக் கிடைத்த நிதிதான் இத் தொகுப்புகள் வெளிவருவதை சாத்தியமாக்கியது. முன் பதிவிற்கான விளம்பரங்களை தோழமையுடன் வெளியிட்ட தமிழின உணர்வுள்ள இதழ்களுக்கும் இணையத்தளங்களுக்கும் நெஞ்சார்ந்த நன்றிகளைத் தெரிவிக்கிறோம்.

எந்த சிறு தவறும் வரலாற்றுப் பிழையும் நிகழ்ந்துவிடக் கூடாது என்பதில் முழுக் கவனம் செலுத்தி இத்தொகுப்பின் ஒவ்வொரு பக்கத்திலும், ஒவ்வொரு வரியிலும் கூர்மையான பார்வையைக் குவித்து பல மாதங்கள் இரவு பகலாக உழைத்து தொகுப்புக்கு உருக்கொடுத்த பெருமை தோழர் ப. தமிழ்க்குரிசிலையேச் சாரும். இந்த அரும்பணி வழியாக குடிஅரசின் முழுமையான வரலாற்றுப் புலமையாளராக அவர் உயர்ந்து நிற்கிறார்.

அதேபோல் பல மாதங்கள் நாளொன்றுக்குக் குறைந்தது பதினைந்து மணி நேரம் அமர்ந்து பணியாற்றி உடலுக்கும் கண்களுக்கும் அயர்ச்சி தரும் பணியை அயராது செய்து கணினிக்கு அருகில் படுத்துறங்கி, உறக்கம் கலைந்தவுடன் மீண்டும் பணி தொடங்கி இத்தொகுப்பு உருப்பெற முழு உழைப்பை நல்கிய தோழர் தாமரைக் கண்ணனின் பங்களிப்பு மகத்தானது. (இதழ்களை சென்னை, மதுரை, சிவகாசி அச்சகங்களில் அச்சேற்றும் பொறுப்பையும் அவரே செய்தார்)

இத்தொகுப்புப் பணிகள் நடந்த காலம் முழுவதும் நிதி திரட்டல் முதற் கொண்டு அனைத்து நிலைகளிலும் உரிய ஆலோசனைகளை வழங்கி, பணியாற்றிய தோழர்களை அவ்வப்போது நேரில் சந்தித்து உற்சாகமூட்டி, (அனைத்துத் தொகுதிகளுக்கும் தொகுப்புரைகளை எழுதி) இறுதி வடிவம் கொடுத்த கழகப் பொதுச்செயலாளர் விடுதலை க. இராசேந்திரன் அவர்களின் பணி மிக முக்கியமானது.

‘குடிஅரசு’ தொகுப்பை கொண்டு வர வேண்டுமென்று கழகம் முடிவு செய்த நாளில் தொடங்கி தொகுப்பு வெளிவரும் வரை இதையே முதன்மையான முதற்பணியாக்கிக் கொண்டு, தொகுப்புக்கான நிதி திரட்டல், குடிஅரசு ஏடுகளைத் தேடி சேகரித்தல், மெய்ப்புப் பார்த்தல், கணினியாக்கம், அச்சாக்கம், பணிகளை ஒருங்கிணைத்தல் என ஒவ்வொரு கட்டத்திலும் தன்னை ஈடுபடுத்திக் கொண்டு மாதங்கள் பலவாய் நள்ளிரவு வரை பங்காற்றியதோடு, பணி முடித்த அதிகாலைப் பொழுதிலும் பங்காற்றிய தோழர்களை தனது வாகனத்தில் கொண்டு போய் வீடு சேர்க்கும் வாகன ஓட்டியாய் செயல்பட்டு பெரியார் திராவிடர் கழகத்தின் வரலாற்றில் புகழ் சேர்த்த கடமையைச் செய்து முடித்த பெருமை தலைவர் தோழர் கொளத்தூர் மணியையே சாரும்.

எத்தனையோ தோழர்களின் உழைப்பு, ஊக்கம், ஆதரவு சக்தியோடு உருவாகி இருப்பதுதான் இந்த குடிஅரசு தொகுப்பு. இதில் பங்களிப்பை வழங்கிய அத்தனை தோழர்களும் சமுதாயக் கடமை ஒன்றை ஆற்றிய மன நிறைவைப் பெற்றுள்ளார்கள் என்பதை உறுதியாகக் கூற முடியும். இதில் எவரும் எவருக்கும் நன்றி கூறும் கடப்பாடுகள் ஏதும் இல்லை. இது கூட்டுழைப்பின் விளைச்சல். நன்றி பாராது தொண்டாற்றிய வரலாற்று நாயகனின் சிந்தனைகளை மக்களிடம் கொண்டு செல்ல வேண்டும் என்ற ஏக்கத்தோடு அந்தப் புரட்சியாளரின் தொண்டால் தலைநிமிர்ந்த தமிழர்கள் நன்றியுடன் மேற்கொண்ட ஒரு முயற்சி.

இத்தொகுப்பின் நிறைகுறைகளைச் சுட்டிக் காட்டும் பெரியாரியல் சிந்தனையாளர்களின் கருத்துகளைப் பரிசீலிக்கவும், மறுபதிப்புகளில் சரியானவற்றை ஏற்று திருத்திக் கொள்ளவும் தயாராகவே இருக்கிறோம்.

தமிழர் சமுதாயத்தின் முன் இத்தொகுப்புகளை மிகுந்த பூரிப்புடன் சமர்ப்பிக்கிறோம்.

**ஆனூர் கோ. செகதீசன்,**
**துணைத் தலைவர்**

**கோவை கு.இராமகிருட்டிணன்,**
**பொதுச் செயலாளர்**

**வழக்கறிஞர் செ. துரைசாமி,**
**தலைமைக் குழு**

**திருவாரூர் கே. தங்கராசு, தலைமைக் குழு**

**பெரியார் திராவிடர் கழகம்**

# மேட்டூரில் 'குடிஅரசு' வெளியீட்டு விழா

உயர்நீதிமன்றத் தீர்ப்பு வெளிவந்த அடுத்த நாளே மேட்டூரில் 'குடிஅரசு' வெளியிடப்பட்டது.





# கழக ஆதரவாளர் தீனதயாளு முடிவெய்தினார்

சீரிய பெரியாரியல்வாதியும், பெரியார் திராவிடர் கழகத்தின் தீவிர ஆதரவாளருமான கி. தீனதயாளன் (63) (6/33, பார்த்திபன் தெரு, உள்ளகரம், சென்னை-91) உடல்நலக் குறைவால் கடந்த 4.6.2010 அன்று முடிவெய்தினார். கழகப் பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன், மாவட்ட கழகப் பொறுப்பாளர்கள் தபசி. குமரன், உமாபதி, அன்பு தனசேகர் மற்றும் தோழர்கள், மலர்வளையம் வைத்து இறுதி மரியாதை செலுத்தினர். எவ்வித மூடசடங்குமின்றி அவரது உடல் மின் சுடுகாட்டில் எரியூட்டப்பட்டது. படத்திறப்பு நிகழ்ச்சி 15.6.2010 அன்று எளிமையாக அவரது இல்லத்தில் நடந்தது. தனது இல்லத்தில் சுயமரியாதை சாதி மறுப்பு திருமணங்களை நடத்தி, பெரியார் கொள்கையை வாழ்க்கை நெறியாக ஏற்று வாழ்ந்தவர் தீனதயாளு ஆவார்.

# நெடுமானூரில் காவை. இளவரசன் அறிவியல் நிகழ்ச்சி

22.5.2010 சனிக்கிழமை மாலை சங்கராபுரம் வட்டம் நெடுமானூரில் பெரியார் சிந்தனை பலகை திறப்பு விழா பொதுக் கூட்டம் நடைபெற்றது. கூட்டம் மு.வ. நடராசன் தலைமையில், ச.கா. இளையராஜா, மு.வ. செல்வராசு, கு. மனோசுகுமார், விழுப்புரம் கணேசன், செ. பிரபு ஆகியோர் முன்னிலையில் கூட்டம் நடைபெற்றது. தெ.செ.நாவாப்பிள்ளை, மாவட்டத் தலைவர் ப. கண்ணன், செயலாளர் மு.வ.நடராஜன், துணைத் தலைவர் வெ. அமிர்தலிங்கம் ஆகியோர் சிறப்புரையாற்றினர். மாவட்டத் தலைவர் ப. கண்ணன் கழகக் கொடியை ஏற்றி வைத்தார். காவை இளவரசன் பெரியார் சிந்தனை பலகையை திறந்து வைத்து, 'மந்திரமல்ல தந்திரமே' அறிவியல் விளக்க கலை நிகழ்ச்சியை நிகழ்த்தி சிறப்புரையாற்றினார்.

(3 ஆம் பக்கத் தொடர்ச்சி)

வே. இராசு, க. செகன்னாதன், ரெ. ஆறுமுகம், மி.இ. ஆரோக்கியராஜ், த. அசோக், டி.செல்வகுமார், அ. பொன்னுசாமி, வே.க.குமார், தமிழ்முத்து, த.மாரியப்பன், சே. தங்கராசு, நாக. குணராஜ் ஆகியோர் கலந்து கொண்டனர்.

## அரியலூர்

6.6.2010 ஞாயிறு அன்று காலை 10 மணிக்கு அரியலூர் நீதிமன்றம் அருகில், கழகத் தலைவர் கொளத்தூர் மணி தலைமையில், அரியலூர் மாவட்டக் கலந்துரையாடல் கூட்டம் நடைபெற்றது. முன்னிலை வகித்த தாமரைக்கண்ணன், கலந்துரையாடல் கூட்டத்தின் நோக்கம் குறித்து பேசினார். தோழர்கள் கார்த்திக், ரஞ்சித், சேவியர், பகுத்தறிவாளர் உட்பட பல தோழர்கள் பேசினர். மாவட்டப் பொறுப்பாளர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். சுமார் 30 தோழர்கள் கலந்து கொண்டனர். கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன:

கழக ஏடான புரட்சிப் பெரியார் முழக்கத்திற்கு சந்தா சேர்க்கும் பணியை ஜூன் மாதம் முழுவதும் மேற்கொள்வது என முடிவு செய்யப்பட்டது. ஆகஸ்டு 15 அன்று திருச்சியில் நடைபெறும் தீண்டாமை ஒழிப்பு காவல் அலுவலகத்தை இழுத்து பூட்டும் போராட்டம் எழுச்சியுடன் நடைபெற, சுவரெழுத்து, துண்டறிக்கை பிரச்சாரங்கள் நடத்தி, பெருவாரியான தோழர்கள் போராட்டத்தில் பங்கேற்பது என முடிவு செய்யப்பட்டது. மாவட்டத் தலைவராக வழக்கறிஞர் பகுத்தறிவாளன், மாவட்ட செயலாளராக சு. கார்த்திக், மாவட்ட அமைப்பாளராக ம.ரஞ்சித்குமார், மாவட்ட பொருளாளராக சேவியர் - ஆகியோர் செயல்படுவார்கள் என முடிவு செய்யப்பட்டது.

# தொடை தட்டுகிறார் 'திருவாளர் 15 இலட்சம்'

தனது செலவிலே வழக்கு நடத்தி, பெரியார் தனக்கு மட்டும் சொந்தமல்ல என்று சட்டப்படியாக தீர்ப்பை வாங்கி வைத்துள்ள திருவாளர் வீரமணி -

"பிரதான வழக்கு இனிமேல்தான் விசாரிக்கப்பட உள்ளது. இப்போது வந்துள்ள தீர்ப்பு நமக்கு தோல்வி அல்ல; தோல்வி போல தோற்றம்" என்கிறார். பெரியார் நூல்களுக்கு கி.வீரமணி ஏகபோகமாக தனக்கு மட்டும் உரிமை கோர முடியாது என்று நீதிமன்றம் தான் தீர்ப்பளித்துவிட்டதே. அது என்ன பிரதான வழக்கு என்று கேட்கிறீர்களா? 'பெரியார் திராவிடர் கழகம் - தனக்குள்ள ஏகபோக உரிமையில் குறுக்கிட்டதால், ரூ.15 லட்சம் இழப்பீடு தர வேண்டும்' என்பதே பிரதான வழக்கு. ஆக, இப்போது பிரதான வழக்கில் இருக்கும் ஒரே அம்சம் இந்த 15 லட்சம் தான்! வீரமணிக்குத்தான் பெரியார் எந்த பதிப்புரிமையும் தரவில்லையே, பிறகு 15 லட்சம் இழப்பீடு என்ற கேள்வி எங்கே வந்தது ? என்று விவரமறிந்தவர்கள் கேட்டுவிடக் கூடாது. அதற்கெல்லாம் வீரமணியிடமே உள்ள ஈரோட்டுக் கண்ணாடியைப் போட்டுப் பார்க்க வேண்டும்.... அப்போதுதான் தெளிவாகப் புரியும்.

இப்போது, 'திருவாளர் 15 லட்சம்' (அதாவது கி. வீரமணி) களத்திலே நிற்கிறார். அதாவது போர்க்களம். சாதாரண களம் அல்ல; விடுதலைப்புலிகள் நடத்திய 'ஆனையிறவு' களத்தையும்விட பெரும் போர்க்களம். அத்தகைய மாபெரும் போர்க்களத்தில் போருடை தரித்து நிற்கும் இந்த போர் மறவர், "சில களங்களில் நமக்கு நீதி கிட்டாமல் போகலாம். இறுதி களத்தில் நமக்கு நீதி வெற்றி கிட்டும் என்ற நம்பிக்கை உண்டு" என்று அவரே 'விடுதலை'யில் போர்ச் சங்கு ஊதியிருக்கிறார். இந்த புறநானூற்று மறவர் - இப்போது இழந்திருக்கிற களம், என்னவென்று கேட்கிறீர்களா? "பெரியாருடைய நூல்கள் தமக்கு மட்டுமே உரிமையானது" என்ற போர்க்களத்தை மட்டுமே இழந்திருக்கிறார். ஆனால் - போர் முடிந்துவிடவில்லை என்கிறார். இன்னும் ஏராளமான களங்கள் உண்டாம். அப்படி மிச்சமிருக்கும் களங்கள் என்னவென்று கேட்டால், 'திருவாளர் 15 லட்சம்' களங்களின் பட்டியலை அடுக்கிக் காட்டிவிடுவார், போர் மறவர் அல்லவா?

இனி பெரியாரது கருத்துகளை எவரும் பேசக் கூடாது, அது எனக்கு மட்டுமே உரிமையானது. - இது ஒரு களம்.

பெரியார் நூல்களை எவனாவது படித்து விட்டால் - நாக்கை வெட்டுவோம். அது எங்கள் அறக்கட்டளை சொத்து. - இது மற்றொரு களம்.

பெரியார் பேச்சு எங்கேயாவது ஒலிநாடாவில் ஒலிக்கிறதா? பறி முதல் செய்வோம்; எவனாவது பெரியார் பேச்சைக் கேட்டால், காதில் ஈயத்தைக் காய்ச்சி ஊற்றுவோம் - இது மற்றொரு களம்.

"பெரியார் நூல்களை எவருமே பரப்பக் கூடாது என்ற களத்தில் நாங்கள் தோற்றிருக்கலாம்; ஆனால் பெரியார் கருத்துகளை எவருமே பேசக் கூடாது; கேட்கக் கூடாது; என்ற களத்தில் வெற்றி பெறப் போவது நாங்கள் தான்" - போர்! போர்!! என்று வீரமணி போர்ப்பறை கொட்டுகிறார்.

"தலைவா நீங்கள் இந்த பூமிக்கு மட்டும் தலைவரல்ல; பிரபஞ்சத்துக்கும் சேர்த்து ஒரே தமிழர் தலைவர் நீங்கள் தானய்யா!" என்று தொண்டரடிப் பொடிகள் விழா எடுத்தாலும் வியப்பில்லை.

"சிலப்பதிகாரத்தில், பாண்டியன் நெடுஞ்செழியனே தவறான தீர்ப்பு வழங்கி, கோவலனைக் கொன்று விட்டானே; பாண்டியன் நீதியே சறுக்கி விட்டதே" என்று இலக்கிய காலத்துக்கே பயணப்பட்டு விட்டார், திருவாளர் 15 லட்சம்! அதாவது கோவலனுக்கு அநீதி இழைத்ததுபோல், உயர்நீதிமன்றம் அவருக்கு அநீதி இழைத்துவிட்டதாம். பெரியார் நூல்களை எல்லோரும் வெளியிடலாம் என்று அபாண்டமாக தீர்ப்பளித்து விட்டதாம்.

'காற் சிலம்போடு ஒரு கண்ணகி வந்து, எங்கள் தலைவருக்கு ரூ.15 லட்சத்தைப் பெற்றுத் தராமலா போய் விடுவாள்? எங்கள் தலைவர் உச்சநீதிமன்றம் வரை போவாராக்கும்' என்கிறார்கள், அவரது சீட கோடிகள்!

இப்போது என்ன குடிமுழுகிப் போய்விட்டது. எமது அறக்கட்டளையிடம் அனுமதி பெற்று, எவரும் பெரியார் நூல்களை வெளியிடலாம், வாருங்கள் என்று அழைப்பு விடுத்திருக்கிறார், திருவாளர் 15 லட்சம். 'உம்மிடம் என்னப்பா ஆவணம் இருக்கிறது?' என்று நீதிமன்றம் கன்னத்தில் அறைந்து கேட்ட பிறகும், என்னிடம் தான் உரிமை; என்னிடம் தான் உரிமை என்று புலம்பத் தொடங்கிவிட்டார் 'திருவாளர் 15 லட்சம்'. பாவம்; பாட்டி மஞ்சள் குளித்த கதைதான்.

**– கோடங்குடி மாரிமுத்து**

வந்த கடிதம்

## சரியான பெரியாரியல் அணுகுமுறை

ஜூன் 3, 2010 'புரட்சிப் பெரியார் முழக்கம்' இதழ் முழுதும் பெரியார் திராவிடர் கழகத் தோழர்களின் களப்பணிச் செய்திகளாகவே நிரம்பியிருந்தது. எவ்வித பொருளாதார வலிமையும் இல்லாத தோழர்கள், கொள்கை உறுதி என்ற ஒரே வலிமையில் தொடர்ந்து களப்பணியாற்றி வருவதை பாராட்ட வார்த்தைகளே இல்லை. பயிற்சி முகாம்கள், சாதி தீண்டாமை ஒழிப்புப் பரப்புரைப் பயணங்கள் என்று தோழர்கள் பம்பரமாக பணியாற்றுகிறார்கள். ஜூன் 10 ஆம் தேதி சிற்பிராசன் பரப்புரைப் பயணம் பற்றி எழுதிய கட்டுரையில் பயணத்தின் பல பின்னணி செய்திகளை சிறப்பாக விளக்கியிருந்தார். தீண்டாமையைத் திணிக்கும் பிற்படுத்தப்பட்ட சாதித் தலைவர்களையே அழைத்து, தீண்டாமைக்கு எதிராக பேச வைக்கும் சிறப்பான முயற்சியை பாராட்டுகிறேன். இதுவே சரியான பெரியாரியல் அணுகுமுறை.

**– நீலவேந்தன், ஆதித் தமிழர் பேரவை, கோவை மாவட்டம்.**

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted on: 24th June 2010

பெறுநர்

OWNER & PUBLISHER : ANOOR JAGADEESAN, PUBLISHED AT 15, MYLAPPAR STREET, AYANAVARAM, CHENNAI - 600 023. PRINTED BY : S. THEESMAS AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014. EDITOR : VIDUTHALAI RAJENDRAN.